
கல்கி



KALKI 20-6-1976 ▪ 75 காசு

கல்கி

நள ௵
ஆனி 7
ஜூன் 20, 1976



கவியோகியின் நாட்டியம்!

தவயோகி சுத்தானந்த பாரதியாருக்கு கதை கவிதை மட்டும்தான் எழுதத் தெரியு மென்று நினைக்காதீர்கள்.

அரவிந்த ஆசிரமத்தில் சுத்தானந்த பாரதி இருந்து வந்தபோது ஒரு ஜப்பானிய நண்பரிடம் ஜியூ ஜித்ஸு (ஜூடோ) கற்றார்!

திருவாரூரில் இளமையில் இருந்தபோது நாட்டியத் திலகமாயிருந்த கோகிலாம்பாள் என்பவரிடம் பரத நாட்டிய சாஸ்திரமும் கற்றவர் யோகியார்!

"என் நாட்டியாஞ்சலி நூல் ஒன்றில் பாட்டுக்கு. ஒருமுறை நானே நாட்டியமாடிப் பார்த்துப் பாட்டெழுதினேன்!" என்று கூறுகிறார் கவியோகி சுத்தானந்த பாரதியார்!

— தகவல்: ஏ. சுவாமிநாதன்





கல்கி, கோகுலம் பத்திரிகைகளின் உதவி ஆசிரியர் ஸ்ரீ V. K. மூர்த்தி (கௌசிகன்-வாண்டுமாமா) அவர்களின் குமாரத்தி சௌபாக்யவதி உஷாவுக்கும், சேலம் R. M. H. கார்ப்பொரேஷன் நிறுவனத்தின் பங்குதாரர் சிரஞ்சீவி தியாகராஜனுக்கும் 2-6-76 அன்று சென்னையில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. திருமணத்துக்கு ஏராளமான நண்பர்களும், உறவினர்களும் வருகை தந்து மணமக்களை வாழ்த்தினர். கல்கி அதிபர் திரு சதாசிவம் அவர்களும், திருமதி எம். எஸ். சுப்புலட்சுமி அவர்களும் திருமணத்தில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர். வாழ்க மணமக்கள்.

மங்காப் புகழ் தரும் மாஸ்கோ விஜயம்













தலைவர்களின் நேசக் கரங்கள் நீண்டன.

மக்களின் பாச மனங்கள் மகிழ்ந்தன !

அளந்து பார்த்தால் எத்தனையோ மைல்கள் இருக்கலாம்; உள்ளத்தால் மிக நெருங்கி வந்துவிட்டனர், இரு நாட்டு மக்களும்.

பிரதமர் இந்திரா காந்தியின் ருஷ்யநாட்டு விஜயம் அவருக்கு மங்காப் புகழ் தேடித் தரும். பாரத சரித்திரத்தின் ஒரு முக்கியமான கால கட்டத்தில் நிகழ்ந்த நட்புறவுப் பயணம் ஆதலால் உலகின் கவனத்தையே ஈர்த்தது.

இந்த விஜயத்தின் காரணமாக பாரத தேசத்துக்குப் புதுப் புதுத் துறைகளில் ருஷ்ய நாட்டின் ஒத்துழைப்பும் உதவியும் கிடைக்கும். இதே சமயத்தில் இரு நாடுகளுக்கும் இடையே மனத்தை உறுத்திவருகிற சில பொருளாதாரப் பிரச்னைகளுக்கும் நல்ல தீர்வு காண முடியும் என்று நம்புகிறோம்.

படங்கள்: (1) ''போய் வருகிறேன், விடை தாருங்கள்'' என்கிறார் பிரதமர் புதுதில்லி விமான நிலையத்தில்.

(2) மாஸ்கோ, லெனின் சமாதியில் மலர் வளையம் சமர்ப்பித்து வணங்குகிறார் ஸ்ரீமதி இந்திரா.

(3) மாஸ்கோ குழந்தைகளுக்குப் பாரத நாட்டின் குழந்தைகள் சார்பில் நமது பிரதமர் பல பொம்மைகளைப் பரிசளித்துள்ளார். இந்தப் பொம்மைகள் பாரதத்தின் பல்வேறு கலாச்சாரங்களைப் பிரதிபலிப்பவை.

(4) மாஸ்கோவில் மக்களுக்காக உருவாகியுள்ள புதிய குடியிருப்புக்களைப் பார்வையிடுகிறார்.

(5) இரு தேசங்களின் தலைவர்களும் பரஸ்பரப் பிரச்னைகளைப் பற்றி மட்டுமின்றிப் பல முக்கிய அகில உலகப் பிரச்னைகளையும் விவாதிக்கின்றனர்.





இந்தியாவுக்கு இந்த உடை தான் ஏற்றது!
ரஷ்ய சோஷலிசம்
ரஷ்யா
பாரதம்
இந்திய சோஷலிசம்
காங்கிரஸ்காரன்
சஞ்சய்
சஞ்சய்
ரஷ்யா
இந்தி திணிப்பை எதிர்க்க எங்களை விட்டால் வேறு நாதி இல்லை!
ஹிந்தி திணிப்பு கூடாது
தி.மு.க
தமிழக வருங்கால கவர்னர் சி.சுப்ரமணியம் ஹிந்தி திணிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளார்!

"ஹாப்பி பர்த்டே!"

நெருக்கடி நிலை பிரகடனமாகி ஓராண்டு ஆகிறது. ''ஹாப்பி பர்த்டே'' என வாழ்த்துவோம்.

உண்மையிலேயே இந்த ஓராண்டு மக்களுக்குப் பலவிதங்களில் மகிழ்ச்சி அளிப்பதாக இருந்திருக்கிறது. ''அடெண்டன்ஸி''ல் கையெழுத்துப் போட சம்பளம்; வேலை செய்ய ''ஓவர்டைம்'' என்ற நிலை பாங்குகளில் அடியோடு மாறிவிட்டது. சர்க்கார் காரியாலயங்களில் நாற்காலியின் மேல் துண்டும் காண்டீனில் காரியஸ்தருமாக இருந்த காலம் மலை ஏறிவிட்டது. பயங்கரத் தொத்துநோயாகப் பரவி வந்த உள்ளங்கை அரிப்பு வியாதியைக் கட்டுப்படுத்துவதில் கணிசமான வெற்றி கிட்டியிருக்கிறது. விலைவாசிகள் சரியாவிட்டாலும் தலை வணங்கியேனும் உள்ளன. பணவீக்க அரக்கன் தன் கொடூரத்தைக் காட்டாமல் பதுங்கியிருக்கிறான். கள்ள மார்க்கெட், கள்ளக் கடத்தல், கறுப்புப் பண அசுரர்கள் பயத்துடன் கைகட்டி வாய் பொத்தி நிற்கிறார்கள். பிரதேசப் பித்தின் அடிப்படையில், ஜாதி மத இன துவேஷங்களை வளர்த்த கட்சிகள் வாலைச் சுருட்டிக் கொண்டன. மக்களிடையே தாய் நாட்டின் உயர்வுக்காக அயராமல் பாடுபட வேண்டும் என்ற எண்ணம் வளர்ந்திருக்கிறது. இறைவன் அருளாலும் விவசாய இலாக்கா, விவசாயிகளின் உழைப்பாலும் விளைச்சல் அமோகமாகப் பெருகித் தானியக் கிடங்குகள் நிரம்பி வழிகின்றன. இவையெல்லாம் அன்றாட வாழ்வில் அனைவருக்கும் தெரிய வருகிற அம்சங்கள்.

பொருளாதார நிபுணர்கள் தரும் புள்ளிவிவரங்களோ புல்லரிக்கச் செய்கின்றன. நெருக்கடி நிலைப் பிரகடனத்தின்போது ரூபாயின் மதிப்பு 30.49 பைசா. 1976 மார்ச் இறுதியில் 34.97 பைசா. பதினாலு சதம் உயர்வு! இதே காலகட்டத்தில் அகில இந்திய விலைவாசி புள்ளிவிவர எண் 311லிருந்து 286க்குக் குறைந்தது. 75–76க்கான ஏற்றுமதி வர்த்தகம் முந்தைய ஆண்டைக் காட்டிலும் ரூ. 532.60 கோடி அதிகரித்துள்ளது மட்டுமல்ல; திட்டமிட்ட இலக்கைக் காட்டிலும் 263.20 கோடி அதிகரித்துள்ளது! இது எப்பேர்ப்பட்ட அரிய சாதனை என்பதைப் புரிந்து கொள்ள வேணுமானால் உலக வாணிகமே தேக்க நிலைக்கு உட்பட்டு நாலு சதம்தான் அதிகரித்திருக்கிறது என்னும்போது இந்தியாவின் ஏற்றுமதி 16 சதம் உயர்ந்துள்ளது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

இதே நேரத்தில் நமது இறக்குமதிகளும் அதிகரித்துள்ளது உண்மைதான். இதற்கு முக்கிய காரணம் அராபிய எண்ணெயின் விலை உயர்வு, உணவு, உர இறக்குமதி அதிகரிப்பு. ஆனால் இத்துறைகளில் அரசு இன்று தீவிர கவனம் செலுத்திவருகிறது. உள்நாட்டில் 'க்ரூட்' எண்ணெய் உற்பத்தியை அதிகரித்தும் நிலக்கரியைப் பல இனங்களில் எரிபொருளாக்கியும் போராடத் தீர்மானித்திருக்கிறது.

இதையெல்லாம் நோக்குகையில் ஒளி மயமான எதிர்காலம் மேடைப் பேச்சோடு நில்லாமல் காரியசித்தியாகக்கூடும் என்ற நம்பிக்கை ஒவ்வோர் இந்தியனுக்கும் பிறக்கிறது.

'நம்மை நாமே தட்டிக் கொடுத்துக் கொண்டால் ஆயிற்றா?' என்று சில சந்தேகப் பேர்வழிகள் கேட்கக்கூடும். 'வசிஷ்டர் வாயால் பிரும்மரிஷி' என்றால் இவர்களுக்கும் திருப்தி பிறக்கும். அத்தகைய திருப்தியை உலக பாங்கு அளிக்கிறது. இந்தியப் பொருளாதாரத்தின் ஒவ்வோர் அம்சத்திலும் சென்ற ஆண்டு கணிசமான அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது என்று மெச்சிப் பாராட்டியுள்ளது. இந்தியாவுக்கு உதவ உறுதிபூண்டுள்ள நாடுகளுக்கு, 'பாரதம் மேலும் பொருளாதார ரீதியில் சிறக்கத் தாராளமாய் உதவுங்கள்' என்று சிபாரிசு செய்கிறது. பணவீக்கத்தையும் விலைவாசி உயர்வையும் கட்டுப்படுத்துவதில் இந்தியா உலக ரிகார்ட்

கல்கி

மலர் 35

இதழ் 47

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற - எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

ஏற்படுத்தியுள்ளதாகக் கூறி அதிசயிக்கிறது. சமீபத்திய பொது பட்ஜெட்டையும் தொழில் வர்த்தகக் கொள்கைகளில் ஏற்பட்டுள்ள மாறுதல்களையும் வரவேற்கிறது. போதாதா, இந்த நற்சான்றிதழ்?

நெருக்கடி நிலைப் பிரகடனத்தின் விளைவான சில கவலை தரும் அம்சங்களையும் கவனித்தல் தவறாகாது. மிகக் குறுகிய காலத்தில் மிக அதிகமான சட்டங்களை நிறைவேற்றுவதிலும் ஓர் உலக ரிகார்டை இந்தியா ஏற்படுத்தியிருந்தால் வியப்பதற்கில்லை. இத்தனை புதுச் சட்டங்களை மக்கள் புரிந்து கொள்ளவோ, மக்கள் பிரதிநிதிகள் ஆராயவோ அல்லது அறிஞர்கள் விவாதிக்கவோ போதிய அவகாசம் இருக்கவில்லை. இருந்தாலும் இந்தச் சட்டங்கள் அனைத்துமே மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும் என்ற அடிப்படை நோக்கில் இயற்றப்பட்டிருப்பதால் தவறுகளோ குறைபாடுகளோ இருப்பின் பரந்த உள்ளத்துடன் அவற்றைத் திருத்திவிட அரசு தயங்காது என நம்பலாம். ஹிந்தி ஆதரவாளர்களின் கை இன்று ஓங்கியிருப்பது சிறுபான்மையினருக்கு வருத்தம் தருகிறது. சோஷலிஸம் என்ற சொல் அரசியல் சாசனத்தின் தொடக்கத்திலேயே, நமது அரசியல் அமைப்பை வர்ணிக்கும் சொல்லாகவே சேர்க்கப் பட்டிருப்பதானது வலதுசாரி அல்லது மையப் பாதை ஜனநாயகவாதிகளுக்குக் கவலை அளிப்பதாக உள்ளது. எதிர்க்கட்சிகள் இந்த ஓராண்டில் மிகவும் பலவீனப் பட்டுப் போனாலும் அவற்றிடையே ஒரு புது விழிப்பு ஏற்பட்டுள்ளது மகிழ்ச்சி தரும் அம்சம். அரசியல் — பொருளாதாரக் கொள்கைகளில் உயர்ந்த மாற்றுக் கருத்துக்களை உடைய, அகில இந்திய ரீதியில் இயங்குகிற ஒரே எதிர்க்கட்சியாக இணைந்து செயல்படுவதே ஆரோக்கியமான ஜனநாயகத்துக்கு நல்லது என்ற கருத்து எதிர்க்கட்சித் தலைவர்களிடையே ஆதரவைப் பெற்று வருகிறது.

ஆகமொத்தம் தேசத்துக்குப் பல துறைகளில் அளப்பரிய நன்மைகளை ஏற்படுத்தியுள்ள நெருக்கடி நிலைப் பிரகடனத்துக்கு "ஹாப்பி பர்த் டே" கூறி வாழ்த்துவதில் தவறில்லை.

ஆங்கிலத்தில் இப்படி வாழ்த்தும்போதே, "மெனி மோர் ஹாப்பி ரிடர்ன்ஸ் ஆஃப் தி டே" என்றும் கூறுவார்கள். அதாவது 'இப்படிப்பட்ட குதூகலமான பல பிறந்த நாட்களை நீ காண்பாயாக' என்பார்கள்.

அதை நாம் கூறாமல் இருந்துவிடுவோம்! நெருக்கடி நிலைப் பிரகடனத்தின் கீழ் வாழ்ந்து இந்தச் சாதனைகளைப் புரிவதில் அரசுக்கோ மக்களுக்கோ பெருமையில்லை. அத்தகைய பிரகடனம் இல்லாமலேயே நாட்டை உயர்த்த அல்லும் பகலும் உழைக்கும் உணர்வைக் குணஇயல்பாகவே பெறுவதுதான் மக்களுக்குப் பெருமை, தலைவர்களுக்குக் கௌரவம், தேசத்துக்கு மேன்மை.

இதைத்தான் விநோபாஜி சிறிது காலத்துக்குமுன் சுட்டிக் காட்டினார். பிரதமரும் உணர்ந்தே இருக்கிறார்.

அத்தகைய ஒரு மகோந்நத நிலைக்கு நம் தாய்த் திருநாட்டை உயர்த்திப் பாருக்குள்ளே நல்ல நாடாக்குவோம்:

ஆக்கத்திலே தொழில் ஊக்கத்திலே—புய
வீக்கத்திலே உயர் நோக்கத்திலே
காக்கத் திறல் கொண்ட மல்லர்தம் சேனைக்
கடலினிலே உயர் நாடு.

— பாரதி

நலம் தந்த நமச்சிவாயம்

சென்னை நக்கீரர் கழகம் ரொம்பப் பேர் மறந்துவிட்ட ஒரு காரியத்தை ஞாபகமாகச் செய்தது. நமச்சிவாயர் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடியது.

மாநிலக் கல்லூரியில் நமச்சிவாயரின் மாணவராக இருந்த திரு சுந்தர வடிவேலு இந்த விழாவில் தொடக்கவுரை நிகழ்த்திச் சிறப்பித்தார். கா. நமச்சிவாயர் பலவிதங்களிலும் தனித்தன்மை பெற்றவர் என்பதை விவரித்தார்.


வேலை செய்து கொண்டே அவர் மயிலை மகா வித்வான் சண்முகம் பிள்ளையிடம் பன்னிரண்டு ஆண்டுகள் தமிழ் பயின்று வந்தார். தமிழார்வம் காரணமாகத் தண்டையார்ப் பேட்டையிலிருந்து மயிலை வரை நடந்தே போவார். பின்னர் நமச்சிவாயர் பல உயர்நிலைப் பள்ளிகளில் உபாத்தியாயராகப் பணியாற்றினார். தொடக்கப் பள்ளிகளுக்கான முதல்தரமான பாட நூல்களை எழுதினார்.

பள்ளிகளில் நல்லாசிரியராக விளங்கியவர் பிறகு கல்லூரிகளில் பேராசிரியராகத் திகழ்ந்தார். அவரது இறையுணர்வும், விருந்தோம்பலும், கொடையுள்ளமும் எண்ணிப் பின்பற்றுதற்குரியன.

பல்கலைக் கழக மட்டத்தில் தமிழுக்கு இடம் தேடித் தந்தவர் நமச்சிவாயரே. தனித்தமிழ் வித்வான் பட்டத்தை உண்டாக்கியவரும் இவரே.

எல்லாம் சரி, சராசரித் தமிழனுக்கு அவர் என்ன செய்தார் எனலாம்.

பொங்கல் திருநாளைத் தமிழர் திருநாளாகக் கொண்டாடும் மரபை ஏற்படுத்தினாரே, போதாதா?



இசைமேதை ரோஹிணி படுக்கையிலிருந்து கொண்டே எழுதுவதில் விருப்பம் உள்ளவர். ஒரு தடவை சில பாடல்களை எழுதிக்கொண்டிருக்கும் போது ஒரு காகிதம் கையிலிருந்து நழுவிப் பறந்து கட்டிலுக்குச் சற்றுத் தூரத்தில் விழுந்து விட்டது. படுக்கையை விட்டு எழுந்து அதை எடுக்கச் சோம்பல்பட்ட ரோஹிணி வேறொரு காகிதத்தில் அந்தப் பாடல்களை மீண்டும் எழுதிக் கொண்டார்!

கோ. வி. பரஞ்ஜோதி



ஜீவகாருண்யம்

ஜகத்குரு
ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய
சுவாமிகள்

(8)

எல்லோரும் பொதுவாக என்ன வேண்டுவோம்? எல்லா இன்பமும் எனக்குக் கிடைக்கட்டும் என்றுதான். ரந்தி தேவனானால் ''எல்லார் துன்பமும் எனக்கு வந்து சேரட்டும்'' என்றான். ''எல்லா ஜீவராசிகளின் கஷ்டங்கள் அனைத்தையும் நான் எடுத்துக் கொண்டு அநுபவிக்கிறேன். அதனால் அவற்றின் துக்கம் தீரட்டும்'' என்றான்.

இன்னொரு ச்லோகம் சொன்னான்:

க்ஷுத்-த்ருட்-ச்ரமோ காத்ர பரிப்ரமச்ச
தைன்யம் க்லம: சோக விஷாத மோஹா: ।
ஸர்வே நிவ்ருத்தா: க்ருபணஸ்ய ஜந்தோ:
ஜிஜீவிஷோ ஜீவ ஜலார்ப்பணாத் மே ॥

பெரிய கௌரணிகளுக்குத் தானம் பண்ணுகிறபோது மந்த்ரம் சொல்லிக் கொண்டு தீர்த்தம் போடுகிற மாதிரி, அந்தப் பஞ்சமனுக்குத் தன்னிடம் எஞ்சியிருந்த தீர்த்தத்தையும் தத்தம் செய்து கொண்டு ரந்தி தேவன் இந்த ச்லோகத்தைச் சொன்னான்: இதற்கு என்ன அர்த்தம்? ''இதோ இந்த ஜலத்தைக் கொடுக்கிறேனே, இது இந்தப் பஞ்சமன் ஒருத்தனுக்கு மட்டும் தாக சாந்தி, தாப சாந்தி பண்ணுவதா? இல்லை. ஸர்வ பூத அந்தராத்மாவான நாராயணனாக நினைத்தல்லவோ அதை இவனுக்கு அர்ப்பணம் பண்ணுகிறேன்? அதனால் இந்த ஜலமே ஸகல உயிர்களுக்கும் தாக சாந்தியை, துக்க நிவிருத்தியைக் கொடுக்கட்டும்.''

(ஜீவ ஜிஜீவிஷோ—) உயிர்வாழ வேண்டுமென்று விரும்பும், (க்ருபணஸ்ய—) நிராதரவான (ஜந்தோ:—) ஸகல ப்ராணிகளும், (மே—) நான் கொடுக்கிற இந்த (ஜலார்ப்பணாத்—) தீர்த்த தானத்தால், (க்ஷுத்—) பசி, (த்ருட்—) தாகம் இவற்றால் ஏற்படும் (ச்ரம:—) சிரமத்திலிருந்தும்; (காத்ர. பரிச்ரமம் ச—) வியாதி வக்கை மாதிரியான சரீரக் கஷ்டங்களிலிருந்தும்; (தைன்யம்—) மனவின் கஷ்டமான தீனநிலை, (க்லம:—) மனத் தளர்ச்சி, (சோக—விஷாத—மோஹா:—) துக்கம், கலக்கம் (dejection), மயக்கம் (ஸர்வே—) முதலிய எல்லாத் துன்பங்களிலிருந்தும் (நிவ்ருத்தா:-) நிவாரணம் பெறட்டும்.''

ஒரே ஒருத்தனுக்குத் தருகிற கொஞ்சம் தீர்த்தம் இப்படி ஸர்வ ஜீவ கஷ்டத்தையும் போக்குமா என்றால்:

துரௌபதி அலம்பி வைத்திருந்த அக்ஷய பாத்திரத்தில் துளிப்போல ஒட்டிக் கொண்டிருந்த கீரையை கிருஷ்ண பரமாத்மா சாப்பிட்டார். உடனேயே துர்வாஸருக்கும் அவருடைய பதினாறுயிரம் சிஷ்யர்களுக்கும் பெரிய சமாராதனை சாப்பிட்ட மாதிரி வயிறு நிரம்பி விட்டது என்று படிக்கிறோமல்லவா? அந்த மாதிரிதான் இதுவும். 'இவன் யாரோ ஒரு பஞ்சமன்' என்று நினைக்காமல் பரமாத்ம ஸ்வரூபமாகவே அவனைப் புரிந்து கொண்டு அவனுக்குக் கொடுக்கிறபோது, அந்தப் பரமாத்மாவுக்குள்ளேயே அடங்கியிருக்கிற ஸகல பிரபஞ்சமும் அதனால் திருப்தியாகிறது. பாவம் நிஜமாக இருக்க வேண்டும். அதுதான் முக்கியம்.

தியாகத்தின் உச்ச நிலையில் இருந்து கொண்டு இப்படி ரந்தி தேவன் தன் பிராணனை ரக்ஷிப்பதற்கு அத்யாவசியமாயிருந்த தீர்த்தத்தையும் புலையனுக்குக் கொடுத்தானோ இல்லையோ, உடனே முதலில் வந்த பிராம்மணன், அப்புறம் வந்த நாலாம் வர்ணத்தவன், அதற்குப் பின்னால் நாய்களோடு வந்த நாய்க்காரன் கடைசியில் வந்த பஞ்சமன் எல்லோரும் விஷ்ணு தூதர்களாக அவன் முன் தங்கள் நிஜ ரூபத்தைக் காட்டினார்கள்.

''அவன் அவர்களுக்கு நமஸ்காரம் பண்ணி விட்டு நாராயண தியானத்தில் முழுகிவிட்டான். இந்த மாய வாழ்க்கை ஒரு கனவு மாதிரி அவனிடமிருந்து மறைந்தே போய் விட்டது'' என்று பாகவதத்தில் இந்தப் புண்ணிய சரித்திரம் முடிகிறது.

சாதாரணமாக நம் புராணங்களிலோ, மற்ற காவிய, நாடகங்களிலோ கூட முக்கியமான பாத்திரம் (Hero) செத்துப் போனதாக முடியாது. 'ட்ராஜெடி' நம் ஸம்பிரதாயத்தில் இல்லை. மங்களமாக முடிய வேண்டும் என்று, லோக ரீதியிலேயே உசத்தியாக ஒரு கல்யாணம், ஒரு பட்டாபிஷேகம் என்றிப்படி முடிப்பதுதான் வழக்கம். ராமாயணம், மஹாபாரதம் இவற்றில் ஸ்ரீ ராமனும் பஞ்சபாண்டவர்களும் ஸ்வர்க்க ஆரோஹணம் பண்ணுவதாகவே வால்மீகியும், வியாஸாசாரியாளும் மூல க்ரந்தத்தில் முடித்திருந்தும் கூட, இப்போதும் ஒரு ஹரிகதை, அல்லது உபந்நியாஸம் என்று நடக்கிறபோது ஸ்ரீ ராம பட்டாபிஷேகம், தர்மராஜ பட்டா

[1932ம் வருஷத்திலிருந்து பெரியவர்கள் வழங்கிய உரைகள், ஸ்ரீமுகங்கள், கட்டுரைகளிலிருந்து தொகுத்தது]

பிஷேகம் இவற்றோடு பூர்த்தி பண்ணி, அதற்கு மேற்பட்ட அந்திமக் கதையைச் சொல்லாமலே விட்டு விடுவதைத்தான் பார்க்கிறோம். துருவன், ப்ரஹ்லாதன் மாதிரியானவர்கள் பகவான் ப்ரத்யட்சமானதும் அவனோடேயே முக்தி அடைந்து விட வேண்டும் என்று பிரார்த்தித்தாலும் கூட, பகவான் ''அதெல்லாம் கூடாது'' என்று சொல்லி அவர்களுக்குப் பட்டாபிஷேகம் பண்ணினதாகத்தான் பாகவத புராணத்திலேயே சொல்லியிருக்கிறது. ஆனால் இந்த ரந்தி தேவன் கதையில் மட்டும் விஷ்ணு தூதர்கள் வந்தார்கள் என்று சொன்ன பின், ''உடனே பஞ்சமெல்லாம் தீர்ந்து விட்டது; ரந்தி தேவனின் பசி தாகமெல்லாம் தீர்ந்து நெடுங்காலம் ராஜ்ய பாரம் பண்ணினான்'' என்று சொல்லாமல், ''மாயையே ஒரு சொப்பனம் மாதிரி அவனை விட்டு ஓடிப் போயிற்று'' என்றுதான் சொல்லியிருக்கிறது. அதாவது அவன் பரலோகம் – பரம பதம் என்கிறார்களே, அதற்குப் போய்விட்டான் என்றுதான் அர்த்தம் ஏற்படுகிறது. அவனுடைய மகா தியாகம் நம் மனதில் நன்றாக உறைப்பதற்காகவே இப்படி மங்கள முடிவை மாற்றிச் சொல்லியிருக்கிறாற்போல் தோன்றுகிறது.

இந்த லோகத்தின் சந்தோஷம் எப்படியும் சாசுவதமில்லை. கல்யாணம் பட்டாபிஷேகம் எல்லாம் தாற்காலிக ஸந்தோஷம் தான். பகவானிடம் போய்ச் சேருவதுதான் நிரந்தரமான மங்களம். அப்படிப் பார்த்தால் ரந்தி தேவன் கதைக்குத்தான் நிஜமான மங்கள முடிவு.

ரந்தி தேவன் கதை மாதிரி இன்னொன்று கூட பாரதத்தில் வருகிறது. **(தொடரும்)**



காமாட்சிக்குக் கோடி அர்ச்சனை

ஸ்ரீ காஞ்சி காமகோட்டத்தில் நடு நாயகமாக அமர்ந்து தன் அருள் நோக்கினால் அகிலத்தையே அருளாட்சி புரிந்து வரும் அன்னை ஸ்ரீ காமாட்சிக்கு வரலாறு காணாத வகையிலே குடமுழுக்கு நடந்தேறியது. அதையொட்டி மண்டலாபிஷேகமும் தொடர்ந்து நடந்து சமீபத்தில் அதன் பூர்த்தி விழாவும் வெகு விமரிசையாக நிறைவேறியது. ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள், கும்பாபிஷேகத்தை நடத்தி வைத்தது போலவே, மண்டலாபிஷேகத்தையும் அதி விமரிசையாக, ஸ்ரீ காமாட்சிக்கு முந்நூறு கலசங்களும், ஆதி சங்கரருக்கு நூற்றெட்டுக் கலசங்களும் அபிஷேகம் நடத்தி வைத்தார்கள்.

நினைத்த மாத்திரத்தில், தன் கடைக் கண் நோக்கால் ஆஸ்திகப் பெருமக்கள் அனைவரின் நேரிய சீரிய ஆசை அபிலாஷைகளை நிறைவேற்றி வைக்கும் அன்னை ஸ்ரீ காமாட்சியின்பால் பக்த உள்ளங்கள் நீங்கா நினைவு கொள்ள வேண்டும் என்று திருவுளம் கொண்ட ஸ்வாமிகள், உலக க்ஷேமத்தை உத்தேசித்துக் கோடி அர்ச்சனைக்குச் சங்கல்பம் செய்து கொண்டு ஆரம்பித்து வைத்துள்ளார்கள். அதில் பங்கு கொண்டு அன்னை ஸ்ரீ காமாட்சியின் அருளுக்குப் பாத்திரமாக விரும்பும் அன்பர்கள், தங்கள் நாம – நட்சத்திரத்துடன் ரூபாய் இருபது அனுப்பி வைத்தால், அர்ச்சனைப் பிரசாதத்துடன் ஸ்ரீ காமாட்சி அம்மன் உருவம் பதித்து வெள்ளிக் காசும் கிடைக்கும். அதற்கு அணுக வேண்டிய முகவரி :

நிர்வாக அதிகாரி, ஸ்ரீ காமாட்சி அம்மன் கோயில், காஞ்சிபுரம்.



ஆகஸ்ட் 8 ௳
கல்கி இதழில் ஆரம்பம்
அமரர்
கல்கி
எழுதிய
பார்த்திபன்
கனவு



துமிலன்

கே. பி. விநாயகம், விழுப்புரம்

கே: 'கேள்வி - பதில்' என்ற அம்சம் முதன் முதல் எப்போது ஏற்பட்டது?

ப: அது மகாபாரத காலத்திலேயே தோன்றியதாகும். ஒரு சமயம் தர்மபுத்திரர் ஒரு காட்டு வழியே சென்று கொண்டிருந்தபோது நீர் நிலையில் தண்ணீர் குடிக்க முற்பட்டார். அப்போது, அதைக் காத்துக் கொண்டிருந்த அசரீரியான ஒரு யட்சன், தாம் கேட்கும் கேள்விக்குச் சரியான பதில் அளித்த பிறகே தண்ணீர் குடிக்கலாம் என்று நிபந்தனை தெரிவித்தார். பிறகு, தர்மம், தத்துவம் முதலிய பெரிய விஷயங்களைப் பற்றிப் பிரசித்தமான கேள்வி பதில்கள் பிறந்தன.

பிரிட்டிஷ் பத்திரிகை உலக மன்னராக விளங்கிய நார்த் கிளிப் பிரபு முதலில் Answers என்ற பெயருடன் நூற்றுக்கு நூறு கேள்வி பதில்களே கொண்ட பத்திரிகை ஆரம்பித்தார்.

1932ம் ஆண்டு வாக்கில், ஆனந்த விகடனில் 'அசட்டுக் கேள்வியும் — குருட்டுப் பதிலும்' என்ற தலைப்புடன் ஒரு பத்தி வெளிவந்தது. அமரர் கல்கியும் நானுமாக அதை எழுதி வந்தோம். சில சமயம் அவர் கேள்வி கேட்பார்; நான் பதில் அளிப்பேன். சில சமயம் நான் கேட்டதற்கு அவர் பதிலளிப்பார். இந்தப் பரிமாறல் எங்களுக்குத் தமாஷ் எழுத்து விளையாட்டாக இருந்தது.

வி. முத்து, குரோம்பேட்டை.

கே: 'பேருந்து' என்பது ஆண்பாலா, பெண்பாலா?

பதில்: பேருந்து அல்லது பஸ் தமிழ் இலக்கணத்தின்படி பெண்பால். அரசாங்க பஸ் நிர்மாணத் தொழிற்சாலையிலிருந்து வெளியான பஸ்ஸுக்கு அப்போது முதல்வராகயிருந்த ராஜாஜி 'ரெட் லேடி' என்று பெயர் வைத்தார். எனவே பெண்பால் என்பதுதான் பொருத்தம். சில பஸ்கள் நடைபாதையில் செல்பவர்களுடன் வம்பளப்பதற்காக அடிக்கடி நடைபாதைகளின் மீதேறி விடுவது இதனை நிரூபிக்கிறது.

பி. சிவசாமி, சிதம்பரம்

கேள்வி: பிரபல திரைப்படப் பெண் நட்சத்திரங்கள் தங்கள் மசக்கை காலத்தில் என்னென்ன சாப்பிடுவார்கள்?

பதில்: கரென்ஸி நோட்டுக்களையும், கோல்ட் பிஸ்கெட்டுகளையும் சாப்பிடலாம்.



தங்களுக்கு இது பற்றிய முழு விவரமும் தெரிய வராவிட்டால் இராத் தூக்கம் பிடிக்காதென்றால் சொல்லுங்கள், அவர்களைப் பேட்டி கண்டு வந்து பிறகு விவரங்கள் எழுதுகிறேன்.

எஸ். கபாலி, மயிலாப்பூர்

கேள்வி: கோவில்களின் வாசல்களில் செருப்புக்களை வைத்துவிட்டுச் செல்வதற்காக ஐந்து பைசா, பத்து பைசா என்று வாங்கி வருகிறார்களே, இது நியாயமா?

பதில்: நியாயம்தான். கோயில்களுக்குள் சென்று கடவுளைப் பார்த்துக் கன்னத்தில் போட்டுக் கொள்ளும் சமயத்தில், செருப்பை யார் எடுத்துக் கொண்டு போய்விடுகிறார்களோ என்ற கவலை இல்லாதிருக்குமல்லவா? இப்போது செருப்பைப் பாதுகாப்பது ஒரு பெரிய தொழிலாகவும் வளர்ந்து வந்துகொண்டிருக்கிறது. மயிலாப்பூர் கபாலீசுவரர் கோவில் வாசலில் செருப்பு பாதுகாக்கும் உரிமை வருடம் 25,000 ரூபாய்க்கு தேவஸ்

தானத்தால் ஏலத்துக்கு விடப்பட்டிருக்கிறது. ஏலம் எடுப்பவர் 10,000 ரூபாய் டிபாஸிட் கட்டியிருக்கிறார். அவருக்கு வருடம் 5,000 ரூபாய் லாபம் கிடைக்கலாம்.

ஏ. அமரநாத், குடந்தை

கேள்வி: ''தொழில் துறைக் கல்லூரிகளில் சேர்த்துக் கொள்வதற்காக ஏற்படுத்தப்பட்டிருந்த 'நேர்முகப் பேட்டி' முறை ஒழிக்கப்பட்டு விட்டதே. அதனால் பல இளைஞர்களுக்கு அறிவு நஷ்டம் இல்லையா?''

பதில்: ஆமாம். ஒரு விதத்தில் நஷ்டம் தான். ''கல்வி இலாகா அமைச்சரின் மைத்துனியின் பெயர் என்ன?'' என்பது போன்ற கேள்விகளுக்குப் பதில் தெரிந்து வைத்துக் கொண்டிருக்க வாய்ப்பு இராது.

டி. இராமநாதன், திருவல்லிக்கேணி

கேள்வி: ''சில பாங்குக் கிளைகள் இப்போது காலை 8-30 முதல் மாலை 5-30 வரை வேலை செய்கின்றன. சில ஞாயிற்றுக் கிழமைகளில் கூடத் திறந்து வைக்கப்பட்டிருக்கின்றன. இந்தத் துறையில் இன்னும் என்ன அபிவிருத்தி ஏற்படக் கூடும்?''

பதில்: ஏ. பி. ஹர்பர்ட் என்ற ஆங்கில நகைச்சுவை எழுத்தாளர் ''பசு செக் ஆகுமா?'' என்ற ஒரு வேடிக்கை வழக்குக் கதை எழுதினார். ஒருவர் ஒரு பசு மாட்டின் மீது 'செக்' மாதிரி எழுதி அதை பாங்குக்கு அனுப்பினார். பாங்கு அதிகாரிகள் பணம் கொடுக்க மறுத்தார்கள். பாங்கு விதிகளில் செக் ஒரு காகிதத்தில்தான் எழுதப்பட வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கவில்லை. இந்த வேடிக்கை வழக்கில் வாதிக்கு வெற்றி கிடைத்தது. இரண்டு மூன்று ஆண்டுகள் முன்னர் அந்த ஏ. பி. ஹர்பர்ட்டின் விசிறிகள் அவரது பொன் விழாவின்போது அவருக்கு ஒரு பசு மாட்டின் மீது ஆயிரம் பவுண்டு தொகைக்கு செக் மாதிரி எழுதி பாங்குக்கு அனுப்பினார்கள். பாங்கு அந்தத் தொகையை அவருக்குக் கொடுத்தது.

வி. குப்புசாமி, பெங்களூர்

கே. பிரபல எழுத்தாளர்களுள் பௌண்டன் பேனாவால் எழுதாதவர்கள் யாராவது இருக்கிறார்களா?

பதில்: ஒருவர் இருந்தார். சில ஆண்டுகளுக்கு முன்னர் அமரத்வம் எய்திய பேராசிரியர் டாக்டர் ஏ. சீநிவாச ராகவன். அவர் பௌண்டன் பேனாவை உபயோகிக்காதது மட்டுமல்ல. ஸ்டீல் நிப்புகளைக்கூட உபயோகிப்பதில்லை. பழைய கால இறகு பேனாவாலேயே எழுதுவார். அப்படிச் செய்வதற்கான காரணத்தைப் பற்றி விசாரித்தபோது அவர் சொன்னார்:

'இறகு பேனாவால் மெதுவாகத்தான் எழுத முடியும். அடிக்கடி மசிப் பாட்டிலில் அதைத் தோய்த்துக் கொள்ள வேண்டும். அந்த இடைவேளைகளில் எழுதும் விஷயத்தைப் பற்றிய கற்பனை ஊறும்!'

இ. முத்துராமன், திருவள்ளூர்


கே: இந்தியாவில் எந்தச் சாமானாவது ஒரு பைசா விலைக்கு விற்கிறதா?

பதில்: இதற்கான பதிலை மிகவும் சிரமப்பட்டு விசாரித்துத் தெரிந்து கொண்டேன். ஒரு பைசா விலைக்கு இன்னும் விற்றுக்கொண்டிருப்பது வெள்ளை நிற சாக்கட்டி.

ஏ. பகவதி, எழும்பூர்

கேள்வி: சென்னை மத்திய நூலகத்தைப் பற்றித் தங்கள் அபிப்பிராயம் என்ன?

பதில்: அதன் நிர்வாகிகள் மிகவும் சிக்கனக்காரர்கள். புதுப் புத்தகங்களை வாங்குவதில்



பணத்தை விரயமாக்குவதில்லை. புதுப் புத்தகங்கள் வாங்குவதற்கு விடுமுறை விட்டுச் சில வருடங்கள் ஆகின்றன.

பி. தனபால், சிந்தாதிரிப்பேட்டை

கேள்வி: பல மாடிக் கட்டிடங்களில் அமைந்த காரியாலயங்கள், குடியிருப்புக்களில் உள்ளோர் ஒற்றுமையாக இருக்கிறார்களா?

பதில்: ஒரு விஷயத்தில் நிச்சயம் ஒற்றுமை நிலவுகிறது. லிஃப்டில் மேலே இருந்து கீழே



இறங்கும்போது. 'தயவுசெய்து மாடிப் படிகளை உபயோகிக்கவும்' என்ற பலகை தொங்கிக்கொண்டிருக்கும். ஆனால் லிஃப்ட் பழுதானால் அன்றி யாரும் கீழே இறங்குவதற்காக மாடிப் படிகளைத் தவறிப்போய்க்கூட உபயோகிப்பதில்லை.



மோதி நூல்
தையல் வேலைப் போட்டி
முதற் பரிசு ரூ. 10,000/-
ரூ.50,000 பெறத்தக்க வேறு விந்தை மிக்க பரிசுகள்
2 இரண்டாவது பரிசுகள்
4 மூன்றாவது பரிசுகள்
8 நான்காவது பரிசுகள்
10 ஐந்தாவது பரிசுகள்
100 ஆறுதல் பரிசுகள்
சற்றே சிந்தியுங்கள் ! ரூ.10,000 ! இவ்வளவு பணத்திலும் என்னதான் செய்ய முடியாது! வாசிச்சிறந்தது செலவு செய்யலாம். சேமிக்கவும் செய்யலாம். இத்தொகை உங்களுக்கே கிடைக்கக்கூடும். ஆகவே தாமதமின்றி இன்றே உங்கள் தையல் வேலையைத் துவக்குங்கள்.
நீங்கள் செய்ய வேண்டியது :-
விரையுங்கள் ! முடிவு தேதி :
ஆகஸ்ட் 30, 1976
MODITHREAD
NEEDLEWORK CONTEST
Modi Thread Mills, Modinagar, U.P.
பெயர்
விலாசம்
அனுப்ப வேண்டிய விலாசம் : MODITHREAD
NEEDLEWORK CONTEST
Modi Thread Mills, Modinagar, U.P.
மோதி நூல்கள்

ஒரு ஊதாப்பூ கண் சிமிட்டுகிறது



தமிழ்ப் படங்களில் கதையைத் தவிர தேவையான எல்லாம் இருக்கிறது. அதுடன் அநாவசியங்களும் நிறைய இருக்கின்றன என்ற நீண்ட நெடு நாளையக் குற்றச்சாட்டுக்குப் பதில் அளிக்கிறது இப்படம். நிறையக் கதை அம்சம் இருக்கிறது. அது நன்றாகவும் இருக்கிறது. அநாவசியமான காபரே பாணி நடனங்கள், அளவுக்கு அதிகமான வன்முறைக் காட்சிகள் முதலியவை இல்லாததற்குக் கண்டிப்பான கட்டளைகளைப் பெற்றுள்ள ''சென்ஸார்'' புண்ணியம் வாங்கிக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

ரவியும், ராதாவும் உயிர்க்குயிராக நேசித்தனர். ரவியின் நண்பன் சசி ராதாவைப் பலவந்தமாய் அடைய முயல்கிறான். ரவி மூர்க்கத்தனமாகச் சசியைத் தாக்கவே அவன் இறந்து விடுகிறான். ரவி உடனே போலீஸில் சரண் அடைந்து விடுகிறான்; ஆறு வருஷ சிறைத் தண்டனைக்குப் பிறகு மகாத்மாவின் பிறந்த தினத்தன்று ரவிக்கு விடுதலை கிடைக்கிறது.... விடுதலை அடைந்த ரவி தன் ஊருக்குத் திரும்புகிறான். ஃபிளாஷ் பாக் முறையில் படத்தைத் தொடங்கி, விறுவிறுப்பாக இயக்கியிருப்பது பாராட்டுக்குரியது.

ரவியாக வரும் கமலஹாஸன் மிகவும் தத்ரூபமாகவும், கச்சிதமாகவும் தம் பாத்திரத்தைப் புரிந்து கொண்டு நடித்திருக்கிறார். ரவி தன் வீட்டு மாடியிலிருந்து கொண்டு பக்கத்து வீட்டு ராதாவை ரசித்துப் பார்த்துக் காதலிப்பது ஒரு சுவையான காட்சி... பார்வையில் தொடங்கிய காதல், ஒரே பஸ்ஸில் தினமும் வளர்ந்து தனியாகச் சந்திப்பது வரையில் படிப்படியாக அபிவிருத்தி அடைவதை வசனத்தைக் குறைத்துச் சிறப்பாகச் செய்திருக்கிறார்கள்.

சுஜாதா, ராதா. ஒரு நடிகை எத்தனைவிதமான முகபாவங்கள் காட்டி நடிக்க முடியும் என்பதை அற்புதமாக நிரூபித்திருக்கிறார்.

புஷ்பா தங்கதுரை ''தினமணி கதிரில்'' எழுதிய தொடர்கதை அதே தலைப்பில் அப்படியே படமாக்கப்பட்டிருக்கிறது. ஒரு தமிழ் எழுத்தாளரின் கதை தமிழ்ப்படமாக வெளிவந்திருப்பது மகா மகா அதிசயந்தான்!

எஸ். பி. முத்துராமனின் டைரக்ஷன் படத்துக்குச் சோபை தருகிறது.

கணவனுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் ராதாவைச் சிறையிலிருந்து மீண்ட ரவி சந்தித்து வேதனைப்படுகிறான். 'ஒரே ஒரு நாள் என்னுடன் நீ வாழ்ந்தால் போதும். என் மனம் நிறைந்து விடும்' என்று கெஞ்சுகிறான். ராதா அவன் வீட்டுக்கு வந்து கட்டிய மனைவியைப் போல ரவிக்கு எல்லாப் பணிவிடைகளும் செய்கிறாள். தவறு ஏதும் நேர்ந்துவிடும் முன் இருவரும் பிரிந்து விடுகின்றனர். ரவியை மறக்க முடியாத நிலையில், ராதா அவனிடமே போய் விடுவது என்று தீர்மானிக்கிறாள். அவள் புறப்படும் நேரத்தில், அவள் கணவன் தன் பெருந்தன்மையினால் அவளை நெகிழச் செய்து விடுகிறான். ராதா மனம் வருந்திக் கதறித் திருந்தி விடுகிறாள். விஜயகுமார் ராதாவின் பெருந்தன்மையான கணவனாக வந்து அதிகம் அலட்டிக் கொள்ளாமல் பெருந்தன்மையாகவே நடித்திருக்கிறார்.

''ஒரு ஊதாப்பூ கண் சிமிட்டுகிறது'' — புதுமை தலைப்பில் மட்டும் அல்ல. — **காந்தன்**

உயர்தரமான சுவைக்கும் உண்மையான சிக்கனத்திற்கும்

ரிக்கரி
இன்ஸ்டன்ட்



அரை
டீஸ்பூன்
அளவே போதும்

(தேவைக்கேற்ப குறைத்தோ
அதிகமாகவோ உபயோகிக்கவும்)



50 கிராம் சீசாவில் 37 கோப்பைகள்
மற்றெந்த 50 கிராம் சீசாவை காட்டிலும் 7 கோப்பைகள் அதிகமாக ரிக்கரி அளிக்கிறது. ஏனெனில் ரிக்கரி ஸ்டிராங்கானது. இது சிக்கனத்திற்கு ஒரு சிறந்த வழி.



அதிக ஸ்டிராங்கானது,
அதிக மணமுள்ளதும்கூட:
ருசியும், மணமும் மிகுந்த ஸ்டிராங்கான தயாரிப்பு. ஆகவே, ஒரு கோப்பை மணமும் ருசியும் மிக்க நல்ல காப்பிக்கு குறைந்த அளவு ரிக்கரியே போதும்.



இப்போது ரிக்கரியின் விலை
கணிசமாகக் குறைவு!

50 கிராம் சீசாவுக்கு 50 பைசே விலை குறைக்கப்பட்டுள்ளது.

ரிக்கரி இன்ஸ்டன்ட் வறுத்து அரைத்த காப்பியின் சுவையை
ஏறக்குறைய அதே விலையில் உங்களுக்கு அளிக்கிறது

NRCM-27-75TAM

அத்தியாயம் 19

இன்னொருவர் ரகசியம்!

கமலாவை அவள் இல்லத்தில் விட்டு விட்டுப் பவானி வீடு திரும்பியபோது இருட்டி வெகு நேரமாகி விட்டிருந்தது. பவானியின் மாமா குணசேகரன் கவலையோடு வாசலிலேயே காத்திருந்தார். "என்னம்மா, கால தாமதமாகுமென்றால் வழக்கமாய்ச் சொல்லி விட்டுப் போவாயே? நெஞ்சைக் கையில் பிடித்துக் கொண்டு நிற்கிறேன். பெற்றோரை விட்டு நூற்றுக்கணக்கான மைல்களுக்கு இப்பால் என் பொறுப்பில் வந்து சேர்ந்திருக்கிறாயே?" என்றார்.

"எதிர்பாராமல் தாமதமாகி விட்டது, மாமா! அந்தப் பெண் கமலா இருக்கிறாளே, அவளோடு மலைச்சாரலுக்குப் போய்ப் பேசிக் கொண்டிருந்தேன். பேச்சு சுவாரசியத்தில் பொழுது போனதே தெரியவில்லை. இருள் கிறது. கிளம்பலாம் என்று நான் எண்ணிய சமயம் அந்தப் பெண் 'ஓ' வென்று அழ ஆரம்பித்து விட்டாள். அவளைச் சமாதானப் படுத்துவதற்குள் போதும் போதுமென்றாகி விட்டது."

"அட பாவமே! எதற்கு அழுதாள் குழந்தை?"

"குழந்தையா? நாலு குழந்தைகளுக்கு அவளே தாயாக இருக்கக் கூடிய வயசு!"

"இருக்கட்டுமே, பெற்றோருக்கு அவள் எப்போதும் குழந்தைதான். நீகூடத்தான் இருக்கிறாய், கல்யாண வயதாகவில்லையா உனக்கு? எனக்கு என்னமோ இன்னமும் குழந்தையாகவே தோன்றுகிறாய். அதனால் தான் உனக்குத் திருமணம் செய்து பார்க்க வேண்டும் என்ற ஞாபகமே இன்று மாலை வரையில் ஏற்படவில்லை."

"அடடே! இன்று சாயந்திரம் மட்டும் போதி மரத்தின் அடியில் போய் அமர்ந்திருக்கிறீர்களாக்கும்!" என்று கூறிப் பவானி சிரித்தாள்.

"ஞானோதயம் என்னை நாடி வந்தது, பவானி! மாஜிஸ்திரேட் கோவர்த்தனன் உருவில் வந்தது!"

"அதுதானே பார்த்தேன். இல்லாத போனால் உங்கள் தங்கமான மனத்தில் அசட்டு யோசனைகள் எல்லாம் உதயமாகுமா என்ன?"

"எது அம்மா அசட்டுத்தனம்? உன் திருமணத்தைப் பற்றி நினைத்துப் பாராமலேயே கல்கத்தாவில் உன் பெற்றோரும் இங்கே நானும் காலத்தை ஓட்டுகிறோமே, அது வல்லவா அசட்டுத்தனம்? அதைச் சுட்டிக் காட்டி மாஜிஸ்திரேட் கோவர்த்தனன் பொறுப்பை உணர்த்தியது எவ்வளவு புத்திசாலித்தனம்!"

"பலே! என் கல்யாணத்தில் அத்தனை அக்கறையா அவருக்கு! உம்... இன்னும் என்ன சொன்னார்?" உணர்ச்சிகளை மறைத்துக்கொள்ள முயன்ற பவானி, தோற்றுப் போனாள். அவள் முகம் 'ஜில்'லென்று சிவந்து போனது.

"சொல்ல வேண்டியதையெல்லாம்தான் சொன்னார். 'பவானியின் படிப்புக்கும் ஆற்றலுக்கும் அறிவுக்கும் அழகுக்கும் யௌவனத்துக்கும் சாமர்த்தியத்துக்கும் ஏற்ற வரனைப் பார்க்க வேண்டும்' என்றார். அதைவிட முக்கியம் வழக்கறிஞராகத் தொழில் நடத்தும் உனக்கு அந்தத் தொழிலில் தொடர்ந்து ஊக்கமும் உற்சாகமும் ஊட்டக் கூடிய கணவனாக அமைவது என்பதை ஞாபகப்படுத்தினார்."

"பவானிக்கு வரப் போகும் கணவன், குறைந்த பட்சம் ஒரு மாஜிஸ்திரேட்டாக



இருக்க வேண்டும்; அவன் வாலிப மிடுக்குடன், அழகனாக, அறிவாளியாக, அனுசரித்துப் போகிறவனாக இருக்க வேண்டும் என்றும் கூறியிருப்பாரே?''

''சொன்னார் பவானி.''

''அதாவது...''.

''அதாவது தன்னையே மாப்பிள்ளையாக ஏற்கலாம் என்று சங்கோஜத்தை விட்டுக் கூறினார் பவானி. ஏனம்மா உன் அபிப்பிராயம் என்ன?''

''நீங்கள் என்ன பதில் சொன்னீர்கள்? வாக்குக் கொடுத்துவிடவில்லையே?'' என்று கலவரமடைந்தவளாகக் கேட்டாள் பவானி.

''அப்படியெல்லாம் செய்வேனா பவானி? நீ என்ன பட்டிக்காட்டுப் பெண்ணா? உன் விருப்பத்தைத் தெரிந்துகொள்ளாமல் ஒப்புதல் அளிப்பேனா?''

''நல்ல வேளை!'' என்று பெருமூச்செறிந்தாள் அவள்.

''நல்ல நாளும் வேளையும் பார்க்க வேண்டியதுதான்'' என்றார் குணசேகரன். ''மாஜிஸ்திரேட் ரொம்ப நல்லவர். கௌரவமான உத்தியோகம். ஹைகோர்ட் ஜட்ஜ் வரை பதவி உயரலாம். உன்னை மனமார விரும்புகிறார் என்று நிதரிசனமாய்த் தெரிகிறது. நிச்சயமாய் நீ தொழில் நடத்துவதற்கு முட்டுக்கட்டை போட மாட்டார். இதைவிட நல்ல வரன் எங்கே கிடைப்பான்? ஒவ்வொருத்தர் பெண்ணைப் பெற்றுவிட்டு மாப்பிள்ளை தேடி நாயாய் அலைகிறார்கள். இங்கேயோ முதல்தர மாப்பிள்ளை நம் வீடு தேடி வந்திருக்கிறார். ஒரு வார்த்தை 'சரி' என்று சொல். உடனே உன் பெற்றோருக்குத் தந்தி அடித்து வரவழைக்கிறேன்.''

''மாமா! மேன்மைதங்கிய பிரிட்டிஷ் அரசரின் மகத்தான தபால் தந்தி இலாகாவுக்கு ஒன்றே முக்கால் ரூபாய் நஷ்டம். நீங்கள் தந்தி அனுப்பப் போவதில்லை'' என்றாள் பவானி.

''ஏன் அம்மா? மாஜிஸ்திரேட் கோவர்த்தனனிடம் என்ன குறையைக் கண்டாய்?''

''அவருக்கு ஒரு குறையும் இல்லை. மன்மதன் போலிருக்கிறார் என்று சர்ட்டிபிகேட் வழங்க வேண்டுமா? நான் தயார். ஆனால் எனக்குத்தான் திருமணத்தில் நாட்டம் இல்லை.''

''ஏன் அப்படிச் சொல்கிறாய் பவானி? ஒருவேளை.... அந்தப் பையன் கல்யாணம்.''

''மாமா! கல்யாணத்தையும் என்னையும் சம்பந்தப்படுத்திக் கோவர்த்தனன் ஏதாவது பிதற்றியிருந்தால் அதை மறந்துவிடுங்கள். எனக்கும் அவருக்கும் இடையே தொழில் ரீதியாகவும் சமூகப் பணியாற்றுவதிலும் உள்ள தொடர்பு தவிர வேறு பிணைப்பு எதுவும் கிடையாது. நீங்கள் ஏதாவது கூறப்போக அது அந்தப் பெண் கமலாவின் காதில் விழுந்துவிட்டால் போதும்; மேலே பாய்ந்து பிடுங்கிவிடுவாள் உங்களை!''

''அவள் என்ன நாயா? புலியா?''

''இரண்டும்தான். கல்யாணம் அவளை ஏற்றால் நன்றியுள்ள நாயாக வாழ்நாளையெல்லாம் அவனுக்கு அர்ப்பணிப்பாள். கல்யாணத்தை அவளிடமிருந்து பிரிக்க முயல்கிறவர் மீது புலியாகப் பாய்வாள். கல்யாணமே அவளை வெறுத்து ஒதுக்கிவிட்டால் தற்கொலை செய்து கொண்டு சாவாள்!

''சற்றுமுன் சொன்னேனே, என் மடியில் முகத்தைப் புதைத்துக் கொண்டு அழுது தீர்த்தாள் என்று. அதற்குக் காரணம் அவளுக்குக் கல்யாணசுந்தரத்தின் மீதுள்ள ஆசைதான். அவர் என்னடா என்றால் அவளை லட்சியம் பண்ணுவதே கிடையாது. சதா நாடகம், சமூக சேவை என்று அலைகிறார்!''

''நாடகம், சமூக சேவை என்று மட்டும்தான் அலைகிறானா கல்யாணம்? உன் பின்னாலும் சுற்றுகிறான், இல்லையா?'' என்றார் குணசேகரன்.

''மாமா? நீங்கள் பொல்லாதவர்! எல்லோரையும் சரியாக அளந்து வைத்திருக்



கிறீர்கள். அந்தக் கணிப்பு எனக்குக் கல்யாணத்தினிடம் ஈடுபாடு இல்லை என்பதையும் உங்களுக்கு உணர்த்தியிருக்குமே?''

''அதைப் புரிந்து கொண்டிருக்கிறேன், பவானி. அதனால்தான் கோவர்த்தனன் இங்கு வந்து என்னிடம் பேசிவிட்டுப் போனதிலிருந்து நம்பிக்கையும் மகிழ்ச்சியுமாக நீ வீடு திரும்பக் காத்திருந்தேன். ஆனால் அந்த ஆசைக்கு நீ அணை போடுகிறாய். இன்னும் ஒரு தடவை யோசித்துப் பார் பவானி! கோவர்த்தனன் உன்மீது உயிரையே வைத்திருக்கிறார் என்று தெரிகிறது. டென்னிஸ் ஆட வழக்கம்போல் நீ வரவில்லை என்றதும் உனக்கு என்னமோ ஏதோ என்று பதறித் துடித்துக் கொண்டு வீடு தேடி விசாரிக்க வந்துவிட்டார் என்றால் அவர் அன்பு எத்தனை ஆழமானதாக இருக்க வேண்டும்?''

''சேலம் மாவட்டக் கேணியைத் தோற்கடிப்பதாக அத்தனை ஆழம் இருக்குமா ?'' என்ருள் பவானி சிரித்துக் கொண்டே. குணசேகரன் அவள் ஹாஸ்யத்தை ரசிக்காதது கண்டு, ''எனக்குக் கோவர்த்தனன் பேரில் கோபதாபமோ வெறுப்போ ஏதும் இல்லை, மாமா ! எனக்குத் திருமணத்தில் இப்போதைக்கு விருப்பமில்லை, அவ்வளவுதான். ஒன்று மட்டும் உங்கள் திருப்திக்காகச் சொல்லி வைக்கிறேன். என்றைக்காவது நான் கல்யாணம் பண்ணிக் கொள்வது என்று தீர்மானித்தால் கோவர்த்தனன் போன்ற ஒருவரைத்தான் மணந்து கொள்வேன். சரிதானு ?''


''ஊஹூம், எனக்குப் புரியவில்லை, பவானி!'' என்ருர் குணசேகரன். ''கோவர்த்தனனே 'இதோ நான் தயார்' என்னும்போது கோவர்த்தனன் போன்ற வேறு ஒருவரைத் தேடுவானேன்?''

''அதைப் பற்றிப் பேச எனக்கு உரிமை இல்லை, மாமா! அது இன்னெருவர் ரகசியம் !'' என்ருள் பவானி.

அத்தியாயம் 20

இரக்கமற்ற இரவுகள்

அன்றிரவு பவானிக்குத் தூக்கமே வரவில்லை. அன்று மட்டும்தானு? இது போன்ற எத்தனையோ இரவுகள் அவளிடம் இரக்கமின்றி நடந்து கொண்டு வதைத்திருக்கின்றன.





முகத்தினழகு

வில்லும் வாளும் வேலும் மழுங்கும்
வண்ண ரோஜா வனப்பிழக்கும்
முத்தொளிகுன்ற முல்லை வாட
முகத்தினழகு அகத்திலும் தெரியும்!

மேலட்டை வண்ணப்படம்: முத்துசாமி

மாறனின் மலர்க் கணைகளால் தாக்குண்டவர்கள் இப்படி உறக்கமின்றித் தவிப்பது சகஜம் என்று அவள் படித்திருக்கிறாள். அது உண்மைதான், அவள் விஷயத்தில். உமாகாந்தனும் இப்போது எங்கோ கண்காணாத இடத்தில் அவளை நினைத்து ஏங்கிக் கொண்டிருந்தால் வியப்பில்லை.

ஆயினும் அதே மன்மதன் பல சந்தர்ப்பங்களில் அவசரப்பட்டு மலர்க் கணைகளுக்குப் பதில் அரும்பு அம்புகளை ஏவிவிடுவதாக அவளுக்குப்பட்டது. அதுதான் ஒருதலைப்பட்சமான காதலாகப் பரிணமித்துப் பல குழப்பங்களுக்கும் அபவாதங்களுக்கும் மக்களை ஆளாக்குவதாக அவள் தர்க்கரீதியாக ஒரு முடிவுக்கு வந்தாள். தன்னைச் சுற்றியுள்ளவர்களையே அவள் எண்ணிப் பார்த்தாள்: 'எவ்வளவு விசித்திரமான நிலை! கமலாவுக்குக் கல்யாணத்தின் மீது காதல். கல்யாணமோ என்னை அடைய ஆசைப்படுகிறார். மாமா குணசேகரன் தன் மருமான் மாஜிஸ்திரேட்டைத் திருமணம் செய்து கொண்டு குடியும் குடித்தனமுமாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறார். கோவர்த்தனனுக்குக் கொஞ்சம் இடமளித்தால் போதும், அவர் என்னை விழுங்கி ஏப்பம்கூட விட்டு விடுவார்! அத்தனை மோகம் அவருக்கு என் மீது! ஆனால் நான் மனமார நேசிப்பதோ உமாகாந்தனை. அவரோ எங்கே இருக்கிறார், என்று திரும்புவார் என்பதொன்றும் தெரியவில்லை!'

இந்தச் சிக்கல்கள் எப்படித் தீரப் போகின்றன என்று நினைத்தபோது பவானிக்குச் சிரிப்பு வந்தது. கூடவே உமாகாந்த் இந்த நிமிஷத்தில் எங்கு, எத்தனை கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறாரோ என்ற எண்ணத்தில் மனம் வேதனைப்பட்டது.

உள்ளத்தை முறுக்கிப் பிழியும் இந்தத் துயரத்தை யாரிடமாவது சொல்லிக்கொண்டு ஆறுதல் பெறக்கூட அவளால் முடியவில்லை. 'கமலாவுக்கும் எனக்குமிடையே இது விஷயத்தில் எவ்வளவு வித்தியாசம்! கமலா கிடைத்த முதல் சந்தர்ப்பத்தில் மனம் விட்டு வாய்விட்டுத் தன் ஆசைகளை என்னிடம் வெளியிட்டாளே, அப்படி என்னால் யாரிடமாவது பேச முடிந்ததா? பதிலுக்குக் கமலாவிடம் என் அந்தரங்கங்களைச் சொன்னேனா? கல்லூரிப் படிப்பும் வழக்கறிஞராகத் தொழில் நடத்துவதும் அந்த அளவுக்கு ஒரு போலி கௌரவத்தை வளர்த்து வார்த்தைகளுக்கு வரம்பு கட்டுகின்றன!

'கமலாவைப் போலவே நானும் பள்ளிப் படிப்பையே பாதியில் நிறுத்தியிருக்கலாமோ? சேச்சே! கல்லூரிப் படிப்பு இல்லாதிருந்தால் உமாகாந்தை என்னால் எப்படிச் சந்தித்திருக்க முடியும்? அவர் காதலைப் பெறும் பாக்கியத்தை எப்படி அடைந்திருக்க முடியும்? அந்த ஆனந்தமான ஆண்டுகளை எண்ணும்போதே மேனி சிலிர்க்கிறதே! இப்போது அவரைப் பிரிந்து துயருற்றாலும் என்றாவது ஒரு நாள் அவரை மீண்டும் சந்திக்கலாம் என்ற நம்பிக்கையே எத்தனை இனிமையான ஓர் அனுபவமாகவும் இருக்கிறது! கல்கத்தாவில் அவருடன் நெருங்கிப் பழகிய அந்த இரண்டு ஆண்டுகளைத் திரும்பத் திரும்ப நினைவுக்குக் கொணர்ந்தே இருபது வருஷங்களை ஓட்டி விடலாமே!'

இத்தனைக்கும் அவள் பி. ஏ. படித்த அந்த இரண்டு ஆண்டுகளிலும் உமாகாந்துடன் அடிக்கடி கொஞ்சிக் குலவி மகிழ்ந்துகொண்டிருக்கவில்லை. அவன் அருகில் இருக்கிறான். அதே கல்லூரியில் எம். ஏ. வகுப்பில் சரித்திரப் பிரிவில் படிக்கிறான். தன்னை விரும்புகிறான். தன்னைச் சந்திக்க நேரும்போதெல்லாம் சிரித்துப் பேசுகிறான் என்ற சூழலே போதுமானதாயிருந்தது.

அன்றைக்கே அவன் லட்சியவாதி. கதர் தான் உடுத்துவான். சுதந்திர இயக்கத்தில் இயன்ற அளவில் பங்கேற்பான். ''படிப்புக்குக் குந்தகம் ஏற்படாத அளவில் நிறுத்திக்கொள்ளுங்கள்'' என்று அவனது பெற்றோர்களுக்கு மேலாக அவளும் வற்புறுத்துவாள்.

''பொய்யான சரித்திரத்தை எழுதி வைத்திருக்கிறார்கள் ஆங்கிலேயர். இதைப் படித்துப் பட்டம் பெற்றுத்தான் என்ன லாபம்?'' என்று கேட்பான் உமாகாந்த். ''சரித்திரத்தை ஒரு நாள் நான் மாற்றி எழுதிக் காட்டுகிறேன், பார்!'' என்பான்.

அப்படி மெய்யாலும் ஒரு சந்தர்ப்பம் நிகழவே செய்தது! காலாண்டுப் பரீட்சையின் விடைத் தாள்களைத் திருத்திக் கொடுத்திருந்தார் பேராசிரியர். அதைக் கொண்டு வந்துபவானியிடம்காட்டினான் உமாகாந்தன். அவன் முகத்தில் குறும்புப் புன்னகை தவழ்ந்தது. பெரிய கோழி முட்டை சிவப்பு மையால் போட்டிருந்தார் பேராசிரியர். திகைத்தாள் பவானி. அவளால் நம்பவே முடியவில்லை. அறிவுச் சுடரை உள்ளடக்கியதால் ஒளிரும் நெற்றியுடன்கூடிய உமாகாந்தன் சைபர் மார்க் வாங்குவதா? இலேசாக நடுங்கிய கரங்களால் விடைத்தாளை விரித்தாள். உள்ளே ஒரு வரி பேராசிரியர் எழுதியிருந்தார்: ''எக்ஸலண்ட் இங்கிலீஷ் பட் ராங் ஹிஸ்டரி!''

அசல் க்ளாக்ஸோஸ்-D® ஒன்றே ஒன்றுதான் உண்டு. அதனைத் தயாரிப்போர் க்ளாக்ஸோ.



® டிரேடு மார்க்கின் ரிஜிஸ்டர்டு யூஸர்ஸ்

ஒப்பற்ற நம்பிக்கைக்குரிய தயாரிப்பு: க்ளாக்ஸோஸ்-D. வைட்டமின் D³, பாஸ்பரஸ், கேல்ஷியம் மிகவும் செறிந்த தூய க்ளூகோஸ் பவுடர் இதில் அடங்கியுள்ளது. உடனடி சக்திக்காகப் பல லட்சம்பேர் அருந்துவது க்ளாக்ஸோஸ்-D— இதனைத் தயாரிப்பவர்கள் க்ளாக்ஸோ—பல விதமான உணவுப் பண்டங்களுக்கும் உயிர்காக்கும் மருந்துகளுக்கும் பெயர் பெற்ற நிறுவனம் அது.

உஷார், மட்டமான போலிகளை நம்பினீராகில், உங்கள் குடும்ப நலனுக்கே பேராபத்தாக முடியும்.

வாங்கும் பேக்கெட் அசல்தானா என்று பார்த்து வாங்குவீர் க்ளாக்ஸோஸ்-D.

க்ளாக்ஸோஸ்-D® க்ளாக்ஸோ தயாரிப்பு

ICP/GL/35 M. Tam.

கிளர்ச்சியூட்டும் காட்டன்ஸ் அளிப்பதோ சென்சுரி

சூட்டிங்குகள்—கற்பனை வளம் நிறைந்த டிசைன்களும் சென்ச்சுரி பருத்தியின் குளுமையான சுகமும் பரிபூரணமாக இணைந்தவை

ஷர்ட்டிங்குகள்-திகைக்க வைக்கும் கோடுகள் மனதை மயக்கும் கட்டங்கள். எண்ணற்ற திருசுகள்-இவை எல்லாமே சேர்ந்து, சென்ச்சுரி பருத்தி எண்ணிலா வண்ணங்களில் குன்றுத ஒளி பெற்றுத் திகழ்கின்றது.

புடவைகள் பருத்தியின் சுகபோக இதம்-ஆம் உங்களுக்கு சென்ச்சுரி மட்டுமே இந்த சுகத்தை அளிக்க முடியும். சென்ச்சுரி புடவை உங்கள் எழில் உடலை ஒட்டித் தழுவ, கிளுகிளுப்பூட்டும் மகிழ்ச்சியிலே திளைக்கிறீர்கள். நெருப்பை எதிர்த்து உழைக்கும் அக்னியவிரோதக் புடவைகளும் உண்டு.

ஆடை அணி வகைகள் ஜீவன் ததும்பும் டிசைன்கள். களிநடம் புரியும் வண்ணங்கள். சென்ச்சுரி பருத்தியின் மென்மையும் உணர்ச்சியைத் தொடும் சிறப்பும் உங்களை என்றும் மகிழ்விக்கும்.

தி சென்ச்சுரி ஸ்பின்னிங் & மான்யுபாக்சரிங் கோ. லிட்.,
பம்பாய் 400 025



அவனுக்குப் புரிந்துவிட்டது! உமாகாந்தன் ஆங்கிலச் சரித்திர ஆசிரியர்கள் எழுதி வைத்த பாடப் புத்தகங்களின்படி பரீட்சை எழுத வில்லை. உண்மைச் சரித்திரத்தை எழுதியிருக்கிறான். ஆங்கிலேயரின் ஆளுகையால் இந்தியா அடைந்த நன்மைகளை எழுதவில்லை. இந்தியா அந்த நன்மைகளை எப்படியும் காலக்கிரமத்தில் தானாகவே பெற்றிருக்கும் என்று வாதாடியிருந்தான். அவர்கள் கொணர்ந்த சீர்திருத்தங்களில் எதுவுமே அவர்கள் இந்த நாட்டை அடிமைப்படுத்திய தீமைக்கு ஈடாகிவிடாது. ஆங்கிலேயரின் வீரத்தை அவன் வாழ்த்தவில்லை. அவர்களது ஆணவத்தையும் பிரித்தாளும் சூழ்ச்சிகளையும் விவரித்திருந்தான். வியாபாரம் பண்ண வந்தவர்கள் நாடாளும் ஆசை கொண்ட விந்தையை விளக்கியிருந்தான். அவனது ஆங்கில அறிவு அத்தனையையும் பயன்படுத்தி அற்புதமாக எழுதிய கட்டுரை!

'' 'பிரமாதமான ஆங்கிலம் என்று நீங்கள் தட்டிக் கொடுத்திருப்பது சரி; ஆனால் இதைத் தவறான சரித்திரம் என்று எப்படி நீங்கள் சொல்லலாம்?' என்று பேராசிரியரிடம் வாதாடினேன். அவர் வெலவெலத்துப் போய்விட்டார்!'' உமாகாந்தன் கூறிவிட்டுச் சிரித்தான்.

''அவர் கடமையைச் செய்தார்'' என்றாள் பவானி கலவரத்துடன். அவன் கரங்களைப் பற்றிக் கொண்டு, ''காலாண்டுப் பரீட்சை இது; பாதகமில்லை. இறுதிப் பரீட்சையில் இப்படி எழுதி மோசம் போய் விடாதீர்கள். வாழ்க்கையின் இரண்டு ஆண்டுகள் வீணாகி விடும்!'' என்று கெஞ்சினாள்.

'' அது எனக்குத் தெரியாதா, பவானி? இதைவிடப் பிரமாதமாக ஆங்கிலேயரின் ஆற்றல்களை மெச்சி எழுதி டிஸ்டிங்க்ஷன் வாங்குவேன்! பேராசிரியரிடமும் அந்த வாக்குறுதியை அளித்துவிட்டுத்தான் வந்திருக்கிறேன்!'' என்றான் உமாகாந்தன் அவள் விரல்களைச் சமாதானமாக வருடியவாறு.

என்றாலும் அந்த வாக்குறுதியை நிறைவேற்ற அவனால் முடியாமலேயே போயிற்று!

(தொடரும்)



மகளிர் ஆண்டு சாதனைகள்!

இந்தியா: மகளிர் ஆண்டில் சிறையில் இருக்கும் பெண் குற்றவாளிகளின் தண்டனைக் காலம் குறைக்கப்பட்டது. ஒரே வித வேலையைச் செய்யும் ஆண்களுக்குச் சமமாகப் பெண்களுக்கும் சம்பளம் தந்திடச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. மகளிர் ஆண்டு சின்னத்துடன் 50 ரூபாய் 10 ரூபாய் 10 பைசா நாணயங்கள் வெளியிடப்பட்டன. முழுவதும் பெண்களாலேயே நிர்வகிக்கப்படும் அஞ்சல் நிலையங்கள் ஐந்து பூனாவிலும் இரண்டு பம்பாயிலும் திறக்கப்பட்டன!

ஆஸ்திரேலியா: மிஸஸ் (Mrs) அல்லது மிஸ் (Miss) என்று பாகுபாடின்றி ஒரே விதமாக (Ms) என்றே மகளிரை அவர்தம் பெயருக்கு முன்னே குறிப்பிட அரசு ஆணை பிறப்பித்தலை வகை செய்யும் பொருட்டு ஆஸ்திரேலிய நாட்டு வேலை வாய்ப்புக் கழகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

பனாமா: முதன் முறையாக லிக்மாரிசால் செல்லடி வால் என்னும் பெண் நீதிபதியாக நியமிக்கப் பட்டார்.

குவாய்த்: இந்நாட்டின் அரசுப் பணிகளில் முதன் முறையாகப் பெண்கள் அமர்த்தப்பட்டனர்.

ரஷ்யா: அனைத்துப் பெண் கைதிகளும் விடுவிக்கப் பட்டனர்.

ஜப்பான்: டோக்கியோ நகரைச் சேர்ந்த திருமதி ஜாங்கோடாபி என்னும் பெண் எவரெஸ்ட் சிகரத்தில் ஏறிய முதல் பெண்மணியானார்.

பிரான்ஸ்: கருச் சிதைவு செய்துகொள்ள மகளிர்களுக்கு அனுமதி அளித்துச் சட்டம் பிறப்பித்தது.

வாடிகன்: முதன் முறையாக பெக்னுபுட்டி ஆலோவா என்னும் மங்கை உகாண்டாவின் தூதுவராக நியமனம் பெற்றார். உலகிலேயே போப்பாண்டவரின் ஆசியோடு நியமனம் பெற்ற முதல் பெண்மணி இவர்தான்!

தகவல்: வி. எஸ். ஆர். வஸந்தா
ஆதாரம்: குடும்ப நலச் செய்திக் கதிர்


ஆபரேஷனைப் பார்ப்பதா!

ஐஸக் ஸ்டெரின் என்ற இசை மேதை ஒரு தடவை தம் வாத்தியத்தைப் பழுது பார்ப்பதற்காகக் கடைக்கு எடுத்துச் சென்றார்.

''சற்று உட்காருங்கள். இப்போதே சரிபண்ணித் தந்துவிடுகிறேன்'' என்றார் கடைக்காரர்.

ஸ்டெரின் சற்றுக் கலங்கிய குரலில் கூறினார்: ''நீங்கள் இதை ரிப்பேர் செய்வதை என்னால் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. நான் வெளியில் போய் இருக்கிறேன். ஆபரேஷன் முடிந்தவுடன் கூப்பிடுங்கள்''

-கோ.வி. பரஞ்சோதி



MCA/J/Tam/1

மல்லிகைப்பூ மணம் கமழ...



சுகபோகமிக்க
குளியல் சோப்
விலை ரூ. 1.47 பை.
மட்டுமே
(தலவரிகள் தனி)

கவர்ன்மெண்ட் சோப் ஃபாக்டரி, பெங்களூர் அளிக்கும் தரமிக்க தயாரிப்பு.
விற்பனை செய்பவர்கள்: மைசூர் ஸேல்ஸ் இன்டர்நேஷனல் லிட்., பெங்களூர்.

அத்தியாயம் 12

வஞ்சகர்க்கு ஓரிரவு

சிவப்பு மூக்குத்தியைக் காணோம் என்றதும் சாலியூர்த் தாவளிக்குப் பளிச் சென்று நினைவுக்கு வந்தது அன்று இரவு நடந்த நிகழ்ச்சிதான்.

நெற்றி வியர்த்த நிலையில் பகவதியம்மனை அவள் கூர்ந்து நோக்கினாள்.

பார்க்கப் பார்க்க இரவில் அவள் பார்த்த பெண்ணுக்கும் பகவதியம்மனுக்கும் ஏதோ சம்பந்தம் இருப்பது போல் அவளுக்குத் தோன்றியது.

''அம்மனின் மூக்குத்தியைத் திருடுகிற அளவுக்கு வஞ்சியில் ஒருவனுக்குத் தைரியம் வந்து விட்டதா?'' என்றான் பூசாரி.

அது திருட்டாகச் சாலியூர்த் தாவளிக்குத் தோன்றவில்லை. அதனுள் ஏதோ மர்மம் இருப்பதாகவே அவள்கருதினாள்.

அம்மனுக்குக் கோபம் வந்திருக்குமோ? அவளது ஆன்ம வடிவமே தங்களை அலைக்கழித்திருக்குமோ? ''சமயம் வரும்போது தேவி உயிரோடு வருவாள்'' என்று தமது மூதாதையர் சொன்னதை அவள் நினைத்துப் பார்த்தாள்.

அவளது கைகள் நடுங்கின.

மற்றச் சகோதரிகள் அயர்ந்து நின்றார்கள்.

காவலர்கள் கண்ணை இமைக்காமல் அந்தக் காட்சியையே பார்த்துக்கொண்டிருந்தார்கள்.



'சகோதரன் வருவான்; பத்மாவதி வருவாள்; மகுடம் வரும்; விஷயத்தைச் சொல்லலாம்' என்று தயங்கியபடியே மூலஸ்தானத்தில் நின்றாள் சாலியூர்த் தாவளி.

அர்த்த சாமம் நெருங்கிற்று.

''தாயே, அர்த்தசாமப் பூஜைக்கு நேரம் நெருங்குகிறது'' என்று நினைவு படுத்தினான் பூசாரி.

''மகுடம் இன்னும் வரவில்லையே..'' என்றாள் சாலியூர்த் தாவளி.

மகுடம் வராமல் பூஜையை நடத்துவது எப்படி?

இதோ, அர்த்த சாமமும் வந்து விட்டது.

வழக்கமான பூஜையாவது நடந்தாக வேண்டும்.

''நேரம் தாண்டிப் பூஜை நடத்தக் கூடாதே...'' என்று மறுபடியும் நினைவு படுத்தினான் பூசாரி.

''சரி, நீ பூஜையை நடத்து'' என்று கண் கலங்கியபடியே கூறினாள் சாலியூர்த் தாவளி.

சேர நாட்டில் இதுவரை நடந்திராத நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. பக்தி மயமான மன்னர் பரம்பரை சீரழிக்கப் படுவதைத் தேவி விரும்பவில்லை போலும். இதை யாரிடம் சொல்வது?

அதுவும் ரவிவர்மனிடம் எப்படிச் சொல்வது?

ரவி வர்மனையும் பத்மாவதியையும் வரவிடாமல் இதே தேவி தான் தடுத்திருக்கவும் கூடும்.



இன்னும் என்னென்ன நடக்குமோ?

சித்தப் பிரமை பிடித்தவள் போல் நின்றாள் சாலியூர்த் தாவளி.

அர்த்தசாம பூஜைக்கான மணி ஓங்கி ஒலித்தது.

'மகுடம் வராமல் பூசையா?'

அமைச்சர், பிரதானிகள், காவலர்கள் திகைத்து நின்றார்கள்.

அந்த மணியோசை அரண்மனையில் பித்துப் பிடித்தவன் போல் நின்ற ரவிவர்மனின் காதிலும் விழுந்தது.

பல தலைமுறைகளாகப் பல மன்னர்களின் தலையை அலங்கரித்த மணி மகுடம்; ஈடு இணையில்லாத விலைமதிப்பற்ற பொக்கிஷம்.

அந்த மகுடத்தின் முன்னால் பாண்டிநாடு மண்டியிட்டிருக்கிறது. சோழநாடு தொழுது நின்றிருக்கிறது.

பாண்டிய ராஜகுமாரி அந்த மகுடத்துக்குக் கிடைத்த பரிசு.

ஒரு சேர மன்னன் மணந்த சோழராஜகுமாரி அந்த மகுடத்தின் மகத்துவத்தால் வந்த ராணி.

அது காணமற் போகும் என்பதைக் கற்பனை செய்ய முடியவில்லையே!

இதுவும் ஏதோ சூழ்ச்சிதான்.

இதை முறியடிக்க நானே புதிய மகுடத்தைச் சூடிக் கொண்டால் என்ன?



நல்லது. இந்த நேரத்தில் ஒரு மகுடத்தை எப்படிச் செய்வது? விடிவதற்குள் முடிகிற காரியமா அது? இல்லை, மகுடம்தான் என்ன, அங்காடியில் வாங்கக்கூடிய பொருளா?

அச்சமும், ஆத்திரமும், அவமானமும் ரவிவர்மனை மாறி மாறி மோதின.

ஊமையாகவே நின்று பழக்கப்பட்ட பத்மாவதி,அப்போதும் ஊமையாகவே நின்றாள்.

தேவி சோதிக்கிறாள் என்றே அவனுக்குத் தோன்றியது.

''நாராயண நம்பூதிரி'' என்று ஓங்கிக் கத்தினான் ரவி வர்மன்.

அரண்மனை கிடுகிடுத்தது.

விடிந்தால் முடிசூட்டுவிழா. ஊர் மக்களெல்லாம் கூடிவிடுவார்கள்.

மகுடத்தைக் காணோம் என்றால் ஊர் சிரிக்காதா?

நாராயண நம்பூதிரிக்கும், மார்த்தாண்ட வர்மனுக்கும் வேண்டியவர்களே இதைத் திருடியிருக்கக் கூடும் என்று ஆத்திரப்பட்டான் ரவிவர்மன்.

ஆயிரம் பேர் உலவும் அரண்மனையில் யாரை விசாரிப்பது? யாரைத் தண்டிப்பது? அதுவும் அர்த்த சாமத்தில்?

''என் மானம் பறி போகிறதே...'' என்று கத்தினான் ரவிவர்மன்.

''மார்த்தாண்ட வர்மனின் வாழ்க்கையே பறிபோன போது, உன் மானம் போவதில் என்ன தவறு?'' என்றொரு குரல் கேட்டது. திரும்பிப் பார்த்தான்; பத்மாவதி நின்றாள்.

திகைத்துப் போய், ''நீயா?'' என்றான்.

'' குற்றங்கள் மன்னிக்கப்படும்; பாவங்கள் தண்டிக்கப்படும். அரசு கட்டிலில் ஆசை வைத்து உறவு ரத்தத்தை ஓட ஓட விரட்டும் உனக்கு இந்த அவமானம் போதாது! நாளை மக்கள் மன்றத்தில் நீ தலைகுனிந்து நிற்கவேண்டும். மாவிட வர்க்கமே உன்னை 'மாபாவி' என்று ஏச வேண்டும். முடிசூட்டு விழாவாம், முடிசூட்டு விழா! மூன்றாம் சேரமான் நீயா? தோன்றாத் தோன்றித் துறை பல முடிக்கும் ஆன்ற பெரியோரால் அலங்கரிக்கப்பட்ட இந்த அரியாசனம் உன்னையா ஏற்றுக்கொள்ளப் போகிறது? என்று இந்த அரண்மனைக்குள் நீ நுழைந்தாயோ அன்றிலிருந்தே உனக்குச் சித்திரவதை ஆரம்பமாகி விட்டது'' என்றாள் பத்மாவதி.

''பத்மாவதி! நீயா பேசுகிறாய்...?'' என்று கத்திக் கொண்டே அவள் கழுத்தைப் பிடித்தான் ரவிவர்மன்.

''கையை எடு. பிறரை அழ வைப்பவர்கள் தங்கள் கண்களிலும் கண்ணீர் உண்டு என்பதை மறந்துவிடக் கூடாது.

பிறரது அவமானத்தில் மகிழ்ச்சிகொள்பவர்கள் தாங்களும் அந்தச் சந்தர்ப்பத்துக்காகக் காத்திருக்க வேண்டும். பயத்தை உண்டாக்குவோன் எவனோ அவனே பயத்தையும் அழிப்பவன். பகவான் நாமத்தை உச்சரிப்பதற்காக ஒருவன் மகுடத்தைக் கழற்றி வைத்தான்; பாபத்தின் மூலமே அந்த மகுடத்தை நீ சூடத் துணிந்தாய். எத்தனையோ தெய்விகச் சிரங்களை அலங்கரித்த அந்த மகுடம் உன் சிறுமையைக் கண்டு எள்ளி நகையாடி ஓடி ஒளிந்து விட்டது. பாபங்களின் தலைமகனே, அழு; அஞ்சு; தலை குனி; வெட்கப்படு; அவமானப்படு!'' என்று ஆவேசமாகக் கூறினாள் பத்மாவதி.

ஓங்கி அவளை அறைந்தான், ரவி வர்மன். கையில் வலுவுள்ள மட்டும் அறைந்தான்.

அதே நேரத்தில் அம்மன் கோவிலில் இருந்த அவளது சகோதரிகளும், அமைச்சர் பிரதானிகளும், காவலர்களும் திரும்பி வந்து சேர்ந்தார்கள்.

அலங்காரச் சிலையாக நின்ற பத்மாவதியை அவன் அடித்து நொறுக்கிய காட்சியை அப்போதுதான் பார்த்தாள், சாலியூர்த் தாவணி.

அவளும் அவளது சகோதரிகளும்ஓடிப் போய்ப் பத்மாவதியைத் தூக்கிக்கொண்டார்கள்.

அமைச்சர் பிரதானியர் கைகட்டி நின்றார்கள்.

அவமானத்துக்கு மேல் அவமானம். பத்மாவதியா அப்படிப் பேசினாள்? அவனால் நம்ப முடியவில்லை.

தான் சொல்ல வந்த விஷயத்தை விட்டுவிட்டு, சாலியூர்த் தாவணி ''என்ன நடந்தது? என்ன நடந்தது?'' என்று கேட்டாள்.

''நீ, நான் என்று பேசுகிறாள்! நீ, நான் என்று பேசுகிறாள்'' என்று கத்தினான் ரவிவர்மன்.

சாலியூர்த் தாவணி, ஆத்திரத்தோடு, ''பத்மாவதி, நீயா அப்படிப் பேசினாய்?'' என்றாள்.

பத்மாவதி திரு திருவென்று விழித்தாள். திரும்பத் திரும்ப அவளை உலுக்கி, ''என்ன பேசினாய், சொல்!'' என்று வினவினாள் மூரின்னூர் தாவணி.

''நான் ஒன்றும் பேசவில்லையே...!'' என்றாள், பத்மாவதி அமைதியாக.

அவள் முகம் சிவந்திருந்ததைச் சகோதரிகள் கவனித்தார்கள்.

எதிரே நின்ற அமைச்சர் பிரதானிகளைப் பார்த்து, ''நீங்கள் போகலாம்!'' என்று கத்தினான் ரவிவர்மன்.

அவர்கள் பதில் சொல்லாமல் விடைபெற்றுக் கொண்டார்கள்.

காவலர்களும் மெதுவாக வெளியேறினார்கள்.

''நீங்களும் போங்கள்!'' என்று கத்தினான் ரவி வர்மன்.

பத்மாவதியை அணைத்தபடி சகோதரிகள் அந்தப்புரத்துக்குள்சென்றார்கள்.

என்ன நடந்தது என்றே பத்மாவதிக்கு நினைவில்லை.

அடிபட்ட வேங்கை போல் முன்னும் பின்னும் உலாத்தினான் ரவிவர்மன்.

அவன் தலை கனத்தது. ரத்தம் கொதித்தது. 'பொழுது விடியப் போகிறது' என்று அவன் வாய் முணுமுணுத்தது.

இந்த அமளியில் பூஜியானுவைப் பற்றிய நினைவுகூட அவனுக்கு இல்லை. என்ன நடக்கிறது என்பதை அறியாத அவள் கோவிலிலிருந்து இரவோடு இரவாக வீடு போய்ச் சேர்ந்து விட்டாள்.

பொழுது விடிகின்ற தருணத்தில் அதே ஆடை அலங்காரங்களோடு குத்திட்டியை எடுத்து இடுப்பில் மறைத்துக் கொண்டு புறப்பட்டான் ரவிவர்மன்.

சுமார் ஐம்பது காவலர்களோடு அவன் நாராயண நம்பூதிரியின் இல்லம் நோக்கிச் சென்றான்.



பெரும்பாலான குழந்தைகள்
எதையும் செய்யும்
ரெக்ஸ் ஜெல்லி தந்தால்!
தங்கையின் பின்னலைப் பிடித்து இழுக்க மாட்டேன், நீங்கள் எனக்கு ராஸ்பெர்ரி ரெக்ஸ் ஜெல்லி தந்தால்
என் பொம்மையை உமாவுக்கு விளையாடத் தருவேன், அவள் எனக்கு ஸ்ட்ராபெர்ரி ரெக்ஸ் ஜெல்லி தந்தால்
நான் வீட்டுக் கணக்குகூடப் போடுவேன், செர்ரி ரெக்ஸ் ஜெல்லி தந்தால்
REX
JELLY CRYSTALS
RASPBERRY
தயாரிப்பது எளிது. தேவையில்லை பாலும் சர்க்கரையும்.
500 மி.லி. (½ லிட்டர்) நீரைக் கொதிக்க விடுங்கள். அதில் ஒரு பேக்கெட் ரெக்ஸ் ஜெல்லி படிகங்களைப் போட்டுக் கிளறுங்கள். பாலும் சர்க்கரையும் தேவையில்லை. ஆற விடுங்கள். பின்னர் அதை ரெஃப்ரிஜிரேட்டரிலோ அல்லது பனிக்கட்டியின்மேல் வைத்துப் படிய விடுங்கள். கெட்டியாகப் படிந்ததும், எடுத்துப் பரிமாறுங்கள். அப்படியே அல்லது பழம், கஸ்டர்டு, கேக், ஏதாவதுடன்.
அருமையான பொருள்களிலிருந்து மிகுந்த கவனத்துடன் பக்குவப் படுத்தப்பட்டதால், ஜெல்லி படிகங்களிலேயே மிகச் சிறந்தவை ரெக்ஸ் ஜெல்லி படிகங்கள். ஒரு பேக்கெட் வீட்டில் இருக்கட்டும்... எப்போதுமே!
ரெக்ஸ்
ஜெல்லி படிகங்கள்
கார்ன் பிராடக்ட்ஸ் கோ. (இந்தியா) பிரைவேட் லிட்.
ஸ்ரீநிவாஸ் ஹவுஸ், எச். ஸோமானி மார்க், பம்பாய் 400 001.


Nirlon
அதி அற்புதங்கள் நிறைந்தது!
Nirlon
Interpub/Nir/4/75/TH

நம்பூதிரியின் இல்லத்தில் வாயில் காப்போர் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தார்கள். குதிரைகளின் குளம்படி ஓசை கேட்டு விழித்தார்கள். உடனடியாகப் பூட்டைத் திறந்து விட்டார்கள்.

அனைவரையும் வெளியே நிறுத்தி விட்டு, தான் மட்டும் உள்ளே நுழைந்தான் ரவிவர்மன்.

அங்கே திருப்பாற்கடலில் பள்ளி கொண்ட ஸ்ரீமந் நாராயணனைப்போல், சயனத்தில் இருந்தார், நம்பூதிரி. ஆனால் மெதுவான காலடி ஓசைகூட அவர் காதில் விழுந்தது.

''ஸ்ரீமந் நாராயணன் சயனத்தில் இருக்கிறாரா...?'' என்றான் ரவிவர்மன்.

''சயனத்தில் இருந்தாலும் உலகத்தைக் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறார்!'' என்றார் நம்பூதிரி.

''தம்பிரான் சுவாமிகளுக்கு நிம்மதியான தூக்கம் வருகிறது!'' என்றான் ரவிவர்மன்.

''குற்றவாளிகளுக்கும், பாவிகளுக்கும் மட்டுமே தூக்கம் வராது'' என்றார் நம்பூதிரி.

நெருங்காமலே நின்று பேசினான் ரவிவர்மன். எழுந்து நின்றார் நம்பூதிரி.

''வந்திருப்பது பழைய பாஸ்கர ரவிவர்மன் அல்ல; சேர நாட்டின் மன்னன்!'' என்று தனக்கும் நினைவுபடுத்திக் கொண்டு அவருக்கும் சொன்னான் ரவிவர்மன்.

''அறிவேன். முடிசூட்டு விழாவுக்கு இன்னும் சில நாழிகைகளே இருக்கின்றன!''

இந்த இடத்தில் ரவிவர்மன் திகைத்தான். 'முடிசூட்டு விழா என்று நம்பூதிரி சொல்வானேன்? ஒன்று மகுடம் களவு போனது இவருக்குத் தெரிந்திருக்க வேண்டும்; அல்லது இவரது ஆட்களே களவாடியிருக்க வேண்டும்' என்பதை உறுதி செய்யத் தொடங்கினான்.

''விழாவுக்குத் தம்பிரான் சுவாமிகள் வராவிட்டாலும், மகுடத்தையாவது கொடுத்துவிடுவார் என்று நம்புகிறேன்'' என்றான்.

''என் கையால் எடுத்துத் தரவா...? அது இந்த ஜன்மத்தில் நடவாது'' என்றார் நம்பூதிரி.

''எடுத்துத் தரவேண்டாம்; இருக்கும் இடத்தைச் சொல்லுங்கள், நான் எடுத்துக்கொள்கிறேன்'' என்றான் அவன்.

''அரண்மனையில் மகுடம் இருக்கும் இடத்தை ஆயிரம் தடவை பார்த்திருக்கிறாய்; உனக்குத் தெரியாதா?'' என்றார் நம்பூதிரி.

''அது இப்போது அரண்மனையில் இல்லை.''

''ஒருவேளை பூஜைக்காகத் திருத்தலங்களுக்குப் போயிருக்கும்!''

''தம்பிரான் சுவாமிகள் விளையாடுகிறாரா?''

''பருவம் தாண்டி விட்டது.''

''ரவிவர்மன் நினைத்ததை முடிப்பவன்.''

''நம்பூதிரி முடியக் கூடியதையே நினைப்பவன்.''

''திருடிய மகுடத்தைத் திருப்பித் தரப் போகிறீரா இல்லையா?''

''அரண்மனையைத் திருடியவன்தான் மகுடத்தையும் திருடியவனே தவிர, நான் அல்ல!''

''புரிந்து விட்டது. மகுடம் களவு போனது உமக்கும் தெரிந்திருக்கிறது!''

''நீ சொல்லச் சொல்லத்தான் புரிந்தது!''

''நான் சந்தேகப் பட்டது சரியாகி விட்டது!''

''அதிகம் பேசுகிறவனாலேதான் ஆயிரம் விஷயம் வெளியாகிறது.''


''பொழுது புலரப் போகிறது. மரியாதையாக மகுடத்தைக் கொடுத்து விடுங்கள்.''

ராஜாஜி சிந்தனை

''போதும் இந்த நாகரிகம்!''

மகாத்மாஜி தென் ஆப்பிரிக்காவில் எழுதிய சிறு நூல் ஒன்றை நான் ஆவலோடு படித்தேன் அந்த நூலை மகாத்மாஜி கோகலேயிடம் காட்டினார். அதை அவர் படித்து முடித்ததும் கோகலேயிடம் மகாத்மாஜி, ''அதைப் பற்றித் தங்கள் கருத்து யாது?'' என்று கேட்டாராம். கோகலே உடனே, ''என் கருத்தா! அதை உடனே அரபிக் கடலில் எறிந்துவிட வேண்டும்'' என்று கூறினாராம்! இந்த விவரத்தை மகாத்மாஜியே என்னிடம் கூறினார். மகாத்மாஜிக்கு உதவி செய்வதற்காகவே கோகலே தென் ஆப்பிரிக்காவுக்குப் போயிருந்தார். மகாத்மாஜியும் அவரைக் குருவாகக் கொண்டாடினார். 'இது நல்ல புத்தகம்தான். ஆனால் இக் காலத்துக்கு உதவாது' என்பது கோகலேயின் அபிப்பிராயம். அதற்குக் காரணம் அவர் தற்கால நவீன நாகரிகத்திலும் முன்னேற்றத்திலும் யந்திரங்கள் முதலிய சாதனங்களிலும் நம்பிக்கை கொண்டிருந்ததுதான். ஆனால் அந்த நூலோ, ''போதும் இந்த நாகரிகம், முன்போல் எளிய வாழ்க்கை வாழ்வதே சுகம் தரும்'' என்று கூறுவதாயிருந்தது.

-- அக்டோபர் 2ஆ தேதி என்ற கட்டுரையில்



இரட்டை மாடி ரயில் பெட்டி!

இரட்டை மாடி பஸ் கேள்விப்பட்டிருக்கிறோம். இப்போது இரட்டை மாடி ரயில் பெட்டி புதிதாகத் தயாராகி யிருக்கிறது. இரட்டை மாடிப் பெட்டியில் 148 பிரயாணிகள் அமர்ந்து பிரயாணம் செய்ய லாம். நெருக்கடி மிகுந்த பிரயாண நேரங்களில் குறைந்த தூரப் பயணத்துக்கு இந்த இரட்டை மாடி ரயில் பெட்டியைப் பரீட்சார்த்தமாகத் தயாரித்திருக்கிறது சென்னை பெரம்பூர் ரயில் பெட்டி தயாரிப்புத் தொழிற் சாலை. இதற்கு எட்டு லட்சம் ரூபாய் ஆகியிருக்கிறது. இந்த ரயில் பெட்டி தாஜ் எக்ஸ்பிரஸில் இணைக்கப்பட்டு டில்லிக்கும் ஆக்ராவுக்குமிடையே ஓடவிருக்கிறது.

''ரவிவர்மா! எனக்குச் சித்தப் பிரமை இல்லை.''

''எனக்குப் பிடித்திருக்கிறது. அது இன்னும் முற்றினால் என்ன நடக்கும் தெரியுமா?''

''ஒரு கொலை நடக்கும். இனி நீ தொடர்ச்சியாகச் செய்யப் போகிற வேலைக்கு அரங்கேற்றம் நடக்கும். கடை சியில் கொலைகாரர்கள் கொல்லப்பட் டுத்தான் சாவார்கள் என்ற தர்ம சாஸ் திரத்தின் விதியும் நடந்து முடிந்து விடும்.''

''தம்பிரான் சுவாமி!''

''ஏன்? நம்பூதிரி என்றே கூப் பிடேன்...!''

—குழப்பத்தில் இருந்த ரவிவர்மன் பொழுது விடிய விடியக் கெஞ்சத் தொடங்கினான்.

''சுவாமி! எது நடந்திருந்தாலும் மன்னித்துக் கொள்ளுங்கள். மற்றவற் றைப் பிறகு பேசுவோம். இப்போது மகுடம் கிடைக்க ஏற்பாடு செய் யுங்கள்!''

''பரசுராமன் மீது ஆணையாகச் சொல்கிறேன். மகுடம் என்னிடம் இல்லை. அது இருக்கும் இடமும் எனக் குத் தெரியாது. நான் எதிர்காலத்தைத் தர்மத்தின் கையிலே ஒப்படைத்துவிட்ட வன். எதற்காக நான் மகுடத்தை மறைக்க வேண்டும்? இறைவனோடு பேசப் போவது மனிதனின் பாவ புண்ணியமே தவிர, மகுடமல்ல! ரவி வர்மா, நாயகன் நம்பியவரைக் கை விட்டதில்லை. குலசேகர ஆழ்வாரின் குலத்தைக் காப்பாற்ற ஸ்ரீமன் நாரா யணன் ஏதேனும் அவதாரம் எடுத் திருக்கக் கூடும்.''

—ரவி வர்மனுக்கு இப்போது அழுகை வந்தது; அழவில்லை.

ஆத்திரம் வந்தது; ஆத்திரப்பட வில்லை.

தம்பிரான் சுவாமி பொய் சொல்ல மாட்டார்; நம்பினான்.

ஜனங்களின் முகத்தில் எப்படி விழிப் பது? கலங்கினான்.

அவன் அறிவு முழுவதும் மயங்கிக் கலங்கிற்று.

ஒன்றும் பேசாமல் வெளியேறினான்.

அரண்மனையை நெருங்கியதும் முர சறைவோனை அழைத்து வரச் சொன் சொன்னான்.

'முடிசூட்டு விழா ஒத்தி வைக்கப் பட்டிருக்கிறது' என்று முரசறையச் சொன்னான்.

பித்தம் பிடித்தவன் போல் அவன் உள்ளே நுழைந்தபோது மைய மண்ட பத்தில் மார்த்தாண்ட வர்மனின் சட லம் கிடத்தப்பட்டிருந்தது!

அவனைக் கொன்ற படைவீரர்கள் அருகே நின்றிருந்தார்கள்.

பத்மாவதியும், தாவணி சகோதரி களும் அழுது கொண்டிருந்தார்கள்.

அதை அவன் பார்த்தான்.

அவன் அதிர்ச்சி அடைந்தானா? மகிழ்ச்சி யடைந்தானா? (தொடரும்)



காப்பி அடிக்க முடியாதது!
ஜீவனுள்ள ஒரே காபி
நரசுஸ்
"தெர்மலோ" காபி
''தெர்மலோ'' முறை தயாரிப்பு
நரசுஸ் காபியின் தனிச் சிறப்பு.
நற்சுவை மிகுந்தது.
நறுமணம் கொண்டது.
நாளும் புதியது.
நரசுஸ் காபி!
தயாரித்த 24 மணி நேரத்திற்குள் தமிழகத்தில் உள்ள எங்கள் எல்லா கிளைகளின் மூலம் வினியோகம் செய்யப்படுகிறது.
நரசுஸ் காபி கம்பெனி.
சேலம்-636 007
கிளைகள்:- பாண்டிச்சேரி & தமிழகமெங்கும்.
ADWAVE/NCC 410 TAM

பொன்னியின் செல்வர்

சுந்தா



38. இறுதி வருடம் (தொடர்ச்சி)

ஆதியும் அந்தமும்

(மே 16) இந்தத் தேதியக் கல்கி இதழில் ''பொன்னி யின் செல்வன்'' நெடுங் கதையின் முடிவு.

எந்த இடத்தில் இந்தக் கதையை ஆசிரியர் தொடங்கி ஞரோ அந்த இடத்திலேயே முடித்திருக்கிறார் — அது தான் வீர நாராயண ஏரிக் கரை.

அந்த ஏரிக் கரையில் எந்தப் புரவி வீரனை ஆரம்பத் தில் அவர் அறிமுகப்படுத்தினரோ, அந்த வீரனையே இறுதியிலும் விரையச் செய்திருக்கிறார் — அவன்தான் வல்லவரையன் வந்தியத்தேவன்.

விரையும் அவ்வீரனை, முன் எட்டு மாதங்களில் நிகழ்ந்தவற்றை எல்லாம் பின்னேக்காய்ப் பார்க்கச் செய் திருக்கிறார் — அவற்றில் மையமானவை, வால் நட்சத் திரத்தால் விளைந்தவை என்று பொன்னி நாட்டு மக்கள் கருதிய விபரீத சம்பவங்கள்.

வானத்தில் ஊழி ஊழி காலம் சஞ்சரிக்கும் கிரகங்களுக்கும் நட்சத்திரங்களுக்கும் இந்த மண்ணுலகில் இன்று தோன்றி நாளை மறையும் மனிதர் வாழ்வுக்கும் என்ன சம்பந்தம் இருக்க முடியும்? ஆயினும், மனிதர்கள் அறிய முடியாத ஏதோ ஓர் அதீதமான சக்தி, ஏதோ ஒரு மாற்றுதற் கரிய நியதி, மனிதர் வாழ்வை நடத்தி வைக்கிறது என்பதில் சந்தேகமில்லை.

இல்லாவிட்டால், சென்ற எட்டு மாதங்களில் தான் எத்தனையோ இடுக்கண்களில் அகப்பட்டுக் கொண்டு அவற்றிலிருந்து எவ்வாறு மீண்டிருக்க முடியும்? எத்தனை எத்தனை பேர் அந்தந்த இடுக்கண்களிலிருந்து தப்பித்துக் கொள்ளத் தனக்கு உதவி செய்திருக்கி ருர்கள்! அவர்களையெல்லாம் அந்தந்தச் சமயத்தில் தனக்கு உதவி புரிவதற்காகக் கொண்டு வந்து சேர்த்தது யார்? அந்த அதிசயமான சக்தியைத்தான் பெரி யோர்கள் இறைவன் என்று போற்றி வணங்குகிருர்களா?

எத்தனையோவிதமான நிகழ்ச்சிகளில் அவ்வீரனுக்கு எத்தனையோவிதமான அனுபவங்கள்!

அவற்றில் இன்னும் ஒன்று, நெஞ்சைப் பிழியும் சோக அனுபவம் ஒன்று அடுத்து நிகழ்கிறது. அவனிடம் பித்துக் கொண்ட பேதைப் பெண் மணிமேகலை, அவனைக் காப் பாற்றுவதற்காக ஒரு கொலைக் குற்றத்தையே ஏற்க முன்வந்தவள், ஏரிக் கரை மண்டபத்தில், அவனுடைய அணைப்பில் இருந்தவாறே உயிர் துறக்கிருள்.

மணிமேகலையின் கனி இதழ்கள் குவிந்தன; கண்ணிமைகள் மூடின; முகத்தில் தவழ்ந்த தெய்வீக சோபை குன்றியது. அமைதி குடிகொண்டது.

நீராழி மண்டபத்தின் மேலே படர்ந்திருந்த மரக் கிளையின்மீது இளந் தென்றல் வீசியது; மரக் கிளையில் குலுங்கிய செந் நிற மலர்களில் சில உதிர்ந்தன.

உடலைப் பிரிந்த உயிர் எங்கே சென்றது? எவ் வழியே சென்றது? மந்த மாருதத்துடன் கலந்து சென்றதா? இளங் காற் றில் எழுந்த சிற்றலைக ளின் இனிய ஓசையில் ஏறிச் சென்றதா? இதய தாபம் தொனிக்கப் பாடிய பூங்குயில்களின் மதுர கீதத்துடன் ஒன் ருகி விண்ணில் பறந்து சென்றதா?

எங்கே சென்றது? சகல புவனங்களையும் சகல ஜீவராசிகளையும்



- ''தேவி தேவராஜுர்!''
- திருக்கழுக்குன்றத்தில் திருமுறைப் பெரு விழாவில் கல்கி கலந்து கொண்டார்.

ஆக்கி அளித்து அழிக்கும் பரம்பொருளின் பாதாரவிந்தத்துக்குச் சென்றதா?

அல்லது கண்ணீர் பெருக்கும் கற்சிலைபோல் நிலைவற்றுச் செயலற்று உட்கார்ந்திருந்த வந்தியத் தேவனுடைய உள்ளத்திலேயேதான் கலந்து போய் விட்டதா?

யாருக்கும் தெரியாது: தெரிந்தாலும் சொல்ல முடியாது.

திருக் கூட்டம்

(ஜூலை முதல் வாரம்) ''படாத உடம்பில் போக வேண்டாம்'' என்று குடும்பத்தார் தடுத்தும் கேளாமல் பயணம் சென்றார் கல்கி. எங்கே, எதற்காக என்பதை அவரே சொல்கிறார் ஒரு கட்டுரையில்:

நிகழும் ஜூலை மாதத் துவக்கத்தில் திருக்கழுக்குன்றத்தில் ஒரு பெருவிழா நடந்தது. அதைத் ''திருமுறைப் பெரு விழா'' என்று அழைத்தார்கள். மாணிக்கவாசகப் பெருமான் திருக்கழுகுன்றத்தில் முடிவான ஞான பரிபக்குவம் பெற்று அங்கே தமது திருவடிகளைப் பதித்து விட்டுச் சென்ற பெருமை பெற்றது திருக்கழுக்குன்றம். ஆகையால் அப்பெருமானுடைய திருநட்சத்திரமாகிய ஆனி மகத்தை யொட்டித் திருமறைப் பெரு விழாவை அங்கே நடத்தி வருகிறார்கள்.. நடத்துகிறவர்கள் சிவனடியார் திருக்கூட்டத்தார். அங்கே வந்து சேர்ந்து விழாவை நடத்துகிறவர்கள் பல ஊர்களிலிருந்தும் வரும் பக்தர்கள்.

இந்த விழாவின் பேரவையை இவ்வாண்டு துவக்கி வைப்பதற்காக என்னை அழைத்திருந்தார்கள். ''ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரே'' என்ற அருள் மொழியை மனத்தில் கொண்டு அந்தப் பணியை நிறைவேற்றச் சென்றிருந்தேன்.

அங்கே பேரவைக்குத் தலைமை வகித்த மதுரை ஆதீன இளவரசு திருவருள் சோமசுந்தர தேசிக பரமாச்சாரியார் சுவாமிகளைப் பார்த்தேன். (கல்கி இதழ் 18-7-54)

அந்தப் பரமாச்சாரியார் பூர்வாசிரமத்தில் கொழும்பு நகரிலே பெரிய வர்த்தகராக இருந்த சோமசுந்தரம் பிள்ளை. முன்பு தாம் இலங்கை சென்றிருந்தபோது சந்தித்த அவர், பின்னர் துறவறம் பூண்ட செதியைக் கேட்டதும் கல்கி அடைந்த வியப்புக்கு அளவில்லை— ''இது என்ன? பழைய காலம் திரும்பி வருகிறதுபோலிருக்கிறதே! மாணிக்கவாசகர், சேக்கிழார், பட்டினத்தார் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் இக்காலத்திலும் உளர் என்று தோன்றுகிறதே!''

அந்த விழாவில், திருப்புகழ்மணி கிருஷ்ணசாமி அய்யர் பக்திப் பரவசமாகப் பஜனை பாடிக் கொண்டு, அடியார்கள் தொடர மலையில் ஏறிய காட்சியைக் கல்கி கண்டு, தாமும் பரவசமானார்.

அவர் கண்டு மகிழ்ந்த இன்னொரு காட்சி, சிவத்திரு வள்ளி அம்மையார் அடியார்களுக்கு அமுதளித்த திருப்பணி. அந்த அம்மையாரைத் திலகவதியார், புனிதவதியார் போன்ற பெண்மணிகளின் பரம்பரையில் வந்தவர் என்று கல்கி புகழ்ந்தார்.

அப்பெரு விழாவை நடத்தி வைத்த சமயத் தொண்டர், ஆசிரியர் இளவழகனாரைப் பற்றி: ''தமிழுக்கும், தமிழ்ப் பண்பாட்டுக்கும், சமயப்பணிக்கும் இவர் தம் வாழ்க்கையை அர்ப்பணம் செய்திருக்கிறார். திருக்குறள் காட்டும் ஒழுக்க நெறியை உலகமெல்லாம் ஒப்புக்கொண்டு சிறப்புற வேண்



○ கல்கி நாவல் அமரதாரா ஆரம்பமானபோது ஓவியர் மணியம். மேடையில் தீட்டிய சித்திரம்.

○ கல்கிச் சிறுகதை மயில் விழி மானுக்கு ஓவியர் மணியம் வரைந்த சித்திரம்.





டும் என்ற மகத்தான இலட்சியம் இவரை ஆட்கொண்டிருக்கிறது.''

விழா பற்றிய அதே கட்டுரையில், இன்னொரு திருவருட் செல்வரைப்பற்றி:

இதோ, ''மெய்யன்பர்களே'' என்று அழைத்துச் சொற்பொழிவைத் துவக்கிவிட்டார்கள். காவேரிப் பிரவாகம் போல் செந்தமிழ் வெள்ளம் பொங்கி வருகிறது.

ஸ்ரீ கிருபானந்தவாரி அவர்களைப் பற்றியும், அவர்களுடைய சொற்பொழிவு ஆற்றல் பற்றியும், வடலூரில் அவர்கள் இயற்றியுள்ள சத்திய ஞான சபைத் திருப்பணியின் மகிமை பற்றியும் அறிந்திராத தமிழர் யாரும் இருக்க முடியாது.

அவர்களுடைய மகத்தான திருப்பணியைப் பார்க்கும் பேறு சென்ற ஆண்டிலே தான் எனக்குக் கிடைத்தது. அவதார புருஷரான ஸ்ரீ ராமலிங்க சுவாமிகள் ஜோதியுடன் கலந்த புனிதமான ஸ்தலத்தில் கம்பீரமாக எழுந்து நிற்கும் சத்தியஞான சபையில் மூன்று மணி நேரம் இருந்தேன். அந்த மூன்று மணி நேரமும், ஸ்ரீ கிருபானந்தவாரி என்கிற ஒரு தனி மனிதர், இவ்வளவு மகத்தான திருப்பணியை எப்படிச் செய்து முடித்தார் என்று வியப்பிலேயே சென்றுவிட்டது.

தமிழுக்கும் தமிழர் பண்பாடு உயர்வதற்கும் ஸ்ரீ கிருபானந்தவாரியார் செய்யும் தொண்டு மிக மேன்மையானது. நமது பழம் பெரும் சமய நெறிகள் தழைத்தோங்குவதற்கு அவர் செய்யும் தொண்டினை மதிப்பிடவே முடியாது....

இக்காலத்தில் தமிழ் நாட்டில் நாத்திகம் ஓங்கி வளர்ந்து வருகிறது என்று அடிக்கடி சொல்லப்படுவதைக் கேட்கிறோம். நாத்திகக் கொள்கை தமிழ் நாட்டுக்குப் புதிது அன்று. ''நாத்திகம் பேசி நாத்தழும்பு ஏறி'' என்று மாணிக்கவாசகர் பாடியிருக்கிறார். நாத்திகம் பரவுவதாகத் தோன்றும் காலங்களிலேயே, உண்மை ஆத்திகமும் சமய நெறியும் திருவருளும் ஓங்கியிருக்கின்றன. அவ்வாறே இன்றைக்கும் தெய்வத் தமிழகத்தில், தவ நெறியும் திருவருளும் தழைத்தோங்கி வருகின்றன என்றே கருதுகிறேன். திருக்கழுக்குன்றம் சென்றதில் இந்த நம்பிக்கை எனக்கு மும்மடங்கு உறுதிப்பட்டது.

அமர தாரா

(செப்டம்பர் 5) இன்றைய கல்கி இதழில் ''அமர தாரா'' தொடர் நாவல் ஆரம்பம்.

திரைப் படமாக எடுப்பதற்காகச் சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்னால், குறிப்பு வடிவில் கல்கி எழுதி வைத்திருந்த கதை இது. குறிப்புக்களை விரித்தும் மாற்றியும் எழுதிக் கொண்டிருக்கையில், அதுவே தமது கடைசி நாவலாய் இருக்கும் என்று ஆனந்தியிடம் அவர் சொன்னாராம்.

அந்தக் கடைசி நாவலைக்கூட அவர் கடைசிவரை எழுத இயலவில்லை.

விதியின் வலிமை

(செப்டம்பர் 24) காலையில் ஒரு துக்கச் செய்தி. யோகாப்பியாச நிபுணர் வி. என். குமாரசாமி இரவில் காலமாகி விட்டார்.

அது பற்றி, அக்டோபர் 3ம் தேதிய இதழில் கல்கியின் குறிப்பு:

வேறு எந்தச் சக்தியைக் காட்டிலும் விதியின் சக்தி பெரிது என்பதைத் திரு வி.என். குமாரசாமியின் மரணம் நிரூபித்துவிட்டது. ''நூறு ஆண்டு நான் உயிர் வாழ்ந்திருப்பேன். நோய்நொடி இல்லாமல், வைத்தியரைக் கூப்பிடாமல், வாழ்ந்திருப்பேன். என்னைப் போலவே எல்லாரும் நோய் நொடி இல்லாமல் நூறு ஆண்டு வாழ்ந்திருக்கலாம்'' என்று திரு வி. என். குமாரசாமி அடிக்கடி சொல்லுவார். அவரைப் பார்த்தவர்களும், அவர் பேச்சைக் கேட்டவர்களும் அதைப் பரிபூரணமாக நம்பினார்கள்.

அவருடைய மரணம் நிகழ்ந்த அன்று மாலையிலே அவர் வெளியே சென்று வந்தார். மனைவி மக்களுடன் உற்சாகமாகப் பேசிக் கொண்டு உணவு அருந்தினார். உணவு அருந்திய பிறகு கணவரும் மனைவியும் மாடிக்குச் சென்றார்கள். சிறிது நேரம் பொழுது போக்குக்காகச் சொக்கட்டான் ஆடினார்கள். திடீரென்று திரு குமாரசாமி, ''என்னமோ போல் வருகிறதே'' என்றார். மயக்கமுற்று மனைவியின் மேல் சாய்ந்தார். அவர் மரணமுற்றார் என்று அவர் மனைவியினால் எண்ண முடியவில்லை. மயக்கம் தெளிந்து எழுந்திருப்பார் என்றே எண்ணினார்.

சிறிது நேரம் கழித்து டாக்டர் வந்து பார்த்தார். ''உயிர் பிரிந்து அரை மணி நேரம் ஆயிற்று'' என்றார்.

விதியின் வலிமையை நிரூபிக்க இதைக் காட்டிலும் வேறு என்ன அத்தாட்சி வேண்டும்?

காந்திக்கு அஞ்சலி

(அக்டோபர் 3) காந்தி மகான் பிறந்த நாளையொட்டி, இன்றையக் கல்கியில் ஆசிரியர் அஞ்சலி:

நமது காலத்தில் இந்த உலகில் நிகழ்ந்திருக்கும் அற்புதங்களில் எல்லாம் பெரிய அற்புதம் என்னவென்று சிந்தித்துப் பார்த்தோமானால், காந்தி மகாத்மாவின் வாழ்க்கைச் சாதனைதான் என்று அறிந்து


---

4 நாள் பதவி

சுதந்திரம் அடைந்தபிறகு பீகார் மாநிலத்தில் இதுவரை பதினேறு முதலமைச்சர்கள் இருந்திருக்கிறார்கள். இதில் சதிஷ் பிரசாத் சின்ஹா என்பவர் நான்கே நான்கு நாட்கள் முதல்வராக இருந்திருக்கிறார்.

பாபு - இந்தியன் ரிவ்யூ

ஜான்ஸன்ஸ் வழங்குகிறார்கள்
பல-பயனுள்ள cotton bud



இதோ அதன் உபயோகங்கள்




மேக்-அப்பை சீராக்குகிறது அல்லது விலக்க உதவுகிறது.




நுட்பமான அலங்கார சாதனங்களை சுத்தம் செய்கிறது.



குழந்தையின் மூக்கை சுத்தம் செய்கிறது—நன்றாக, மென்மையாக.



சிறிய காயங்களின் மீது மருந்தை ஒற்றி எடுக்க உதவுகிறது.



காதுகளை பத்திரமாக சுத்தம் செய்கிறது-குழந்தையின் காது-களையும் உங்கள் காதுகளையும்.

ஜான்ஸன்ஸ் Cotton Bud-ஐ இன்னும் எத்தனையோ வழிகளில் நாள்தோறும் உபயோகிக்கலாம். உங்கள் வீட்டில் எப்பொழுதும் ஜான்ஸன்ஸ் Cotton Bud இருக்கட்டும்.

அது சுத்தமானது • பத்திரமானது.
சுகாதாரமானது • சௌகரியமானது.



புதிது!
வளையக்கூடிய
பிளாஸ்டிக் தண்டு

பத்திரமாக சுத்தம்
செய்வீர்- ஜான்ஸன்ஸ்
Cotton Bud—ஆல் சுத்தம் செய்வீர்

மாயவரம் பைனான்ஷியல் சிண்டிகேட் (REGD.)

13-G, கச்சேரி ரோடு, மாயவரம்-609001

எங்களிடம் முதலீடு செய்யும் சேமிப்புகளுக்கு

14% வரை வட்டி வழங்கப்படுகிறது.

1 வருடம்	2 வருடங்கள்	3 வருடங்களும் அதற்கு மேலும்
12%	**13%**	**14%**

Hire purchase முறையில் பொருட்கள் வாங்க
(குறைந்த பட்ச கடன் வழங்கல் ரூ. 1,000.00)
எங்களை அணுகவும்

மாயவரம்
28-5-76

R. கல்யாணசுந்தரம்
மானேஜிங் பார்ட்னர்

மாயவரம் பைனான்ஷியல் கார்ப்பொரேஷன் லிமிடெட்

பதிவு அலுவலகம்: **13-H, கச்சேரி ரோடு, மாயவரம்-609 001**

31-3-1976 முடிய

1. அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் — ரூ. 5 லட்சம்
2. செலுத்தப்பட்ட மூலதனம் & ரிசர்வுகள் — ரூ. 5.5 லட்சம்
3. நடைமுறை சீட்டுகளின் மதிப்பு — ரூ. 8 கோடிக்கு மேல்

புதிய குருப்புகள்

மாதச் சந்தா	மாதங்கள்	சீட்டுத் தொகை
ரூ. 2000	50	ரூ. 1,00,000
ரூ. 1000	100	ரூ. 1,00,000
ரூ. 500	50	ரூ. 25,000
ரூ. 250	100	ரூ. 25,000

விவரங்களுக்கு எழுதவும்:

மாயவரம்
28-5-76

R. கல்யாணசுந்தரம்
மானேஜிங் டைரெக்டர்.

கொள்வோம். அதற்கு இணையான அற்புதத்தை நம் நாளில் யாரும் சாதித்ததில்லை. உலகத்தின் சரித்திரம் முழுதும் ஆராய்ந்து பார்த்தாலும் காந்தி மகானுடைய சாதனைக்கு இணை சொல்லக் கூடியவையாக மிகச் சில நிகழ்ச்சிகளையே குறிப்பிடக் கூடும்....

காந்தி மகான் தன் வாழ்நாளில் விளைத்த அற்புதங்களையும், அவற்றினால் பாரத நாடும் உலகமும் அடைந்திருக்கும் நலன்களையும் இன்று நம்மால் சரிவரக் கணித்து மதிப்பிட முடியாது. ஏனெனில், சிறிய காரியங்கள் பல, அற்பமான ஆசாபாசங்கள் பல, சுயநல நோக்கங்கள் பல, இன்று நம் உள்ளங்களைக் குழப்பி இருக்கின்றன. உலகில் ஒவ்வொருவரும் தத்தம் சிறிய வட்டத்திலிருந்து பார்த்து, "காந்தியினால் நாம் அடைந்த பயன் என்ன?" என்று சிந்திக்கிறார்கள். ஆனால் சரித்திரம் வேறுவிதமாகக் காந்தி மகானின் சாதனைகளை மதிப்பிடும். நூறு ஆண்டுகளுக்குப் பின்னால் வருவோர், மகாத்மா காந்தி என்னும் அவதார புருஷர் தோன்றி உலகத்தை உய்வித்த அற்புதத்தை எண்ணி எண்ணி மகிழ்வார்கள்; பாமாலை சூட்டுவார்கள்; காவியங்கள் இயற்றுவார்கள்; வியந்து போற்றுவார்கள்.

இதுவே அண்ணல் காந்திக்குக் கல்கி செலுத்திய கடைசி அஞ்சலியாய் அமைந்தது.

இது வெளியானது சாதாரணக் கல்கி இதழ் அல்ல. மகாத்மாவுக்கு மிகவும் உவப்பான கைத்தொழில்கள் பற்றிய சிறப்பு மலர். அதற்கு முன்னால் வேறு எந்தத் தமிழ்ப் பத்திரிகையும் அவ்விதக் கைத்தொழில் மலர் ஒன்றை வெளியிட்டதில்லை.

தே. வி. தேவராஜனார்

(அதே தேதி) இந்தத் தலைப்புடன், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை காலமானது குறித்து, கல்கியின் இரங்கல் கட்டுரை —

சென்ற ஆண்டில் ரசிகமணி டி. கே. சி. மறைந்தபோது கவிமணி பெருந் துயரத்துக்கு உள்ளானார். "ரசிகமணி போய்விட்டார்; இனி இக்கவிஞன் இருந்து என்ன பயன்!" என்றார்.

ரசிகமணி சென்று ஓராண்டு பூர்த்தியாவதற்குள் கவிமணியும் போய்விட்டார். சென்ற இடத்தில் இருவரும் சந்திப்பார்கள் என்பதில் ஐயம் இல்லை.

அமரத் தன்மை வாய்ந்த கவிமணியின் கவிதைகள் என்றென்றும் அவரது திருநாமம் மறையாமல் பாதுகாத்து வரும்.

" உள்ளத் துவகை பொங்கியெழ
உரைகள் சொல்லப் பொருளேறித்
தெள்ளத் தெளிந்த கவியமுதம்
தீயில் வெந்து பொடியாமோ ?"

நன்றிக் காணிக்கை

(அக்டோபர் தேதி...) காசநோயால் பீடிக்கப்பட்டு, கல்கி திரட்டிக்கொடுத்த பண உதவியினால் குணம் அடைந்த டி. கே. ராஜகோபாலனும் அவருடைய மனைவி சாந்தாவும், தங்கள் நன்றியை நேரில் தெரிவிப்பதற்காகக் கல்கி அலுவலகத்துக்கு வந்தார்கள். அவர்களைக் கல்கி தமது அறையில் வரவேற்று அன்புடன் உரையாடினார். ஆனால், அவர்கள் ஒரு தட்டு நிறையக் கொண்டு வந்திருந்த பழங்களை ஏற்க மறுத்தார். "நீங்களே இந்தப் பழங்களைச் சாப்பிட்டு உடம்பைத் தேற்றிக் கொள்ளுங்கள்" என்று சொல்லி, பழத் தட்டைத் திரும்பக் கொண்டு போகச் செய்தார்.

அரிகுறி

(அக்டோபர் 24) கல்கியின் விருப்பப்படி, சாதாரணக் கல்கி இதழின் அளவில் இருநூறு பக்கங்கள் கொண்டதாய், தீபாவளி மலர் வெளியீடு. அதில் கல்கியின் நெடிய சிறுகதை, "மயில் விழி மான்." அசாதாரணத் தலைப்பு. கதையும் அசாதாரணமானதே. அதற்கு அவர் எழுதியிருந்த முன்னுரையை உடனே படித்தபோது, சாதாரணமாகவே தோன்றியது. ஆனால், அதே முன்னுரை ஆறு வாரங்களுக்குப் பிறகு, அசாதாரணமாய், அசாதாரண அரிகுறி ஒன்றைக் கொண்டதாயும், குறியீடுகள் பொதிந்ததாயும் தோன்றியது —

அன்றொரு நாள் விழுப்புரத்திலிருந்து சென்னைக்குச் சாலை மார்க்கமாய் வந்து கொண்டிருந்தேன். புதுச்சேரி விடுதலை இயக்கத் தலைவர் ஒருவருடைய வண்டி. பிரெஞ்சுப் போலீஸாரிடம் அகப்படாமல் துரிதமாகச் சென்று அந்த வண்டிக்குப் பழக்கமாகி இருந்தது. ஆகையால், வண்டி ஓட்டியவரிடம் எவ்வளவு சொல்லியும் அவரால் மணிக்கு அறுபது மைல் வேகத்துக்குக் குறைவாகப் போக முடியவில்லை.

திடீரென்று சாலையின் நட்ட நடுவில் ஒருவர் வழி மறித்து நின்று வண்டியை நிறுத்தும்படி கையைக் காட்டினார்.

"ஆள் மேலே ஓட்டட்டுமா? ஒதுக்கி ஓட்டட்டுமா?" என்று டிரைவர் கேட்டார்.

"வேண்டாம், வேண்டாம்! சற்று நிறுத்தித்தான் பார்க்கலாமே! ஏதாவது அவசரமாக ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டிய காரியமாய் இருக்கலாம்" என்றேன்.

"அதெல்லாம் ஒன்றுமில்லை. வண்டியை நிறுத்தச் சொல்லி ஸிகரெட்டுப் பற்ற வைக்க நெருப்புப் பெட்டி இருக்கிறதா என்று கேட்

பார்கள். இந்தப் பக்கத்து வழக்கம் அது!'' என்று சொல்லிக் கொண்டே டிரைவர் வண்டியை நிறுத்தினர்.

சாலையில் நின்றவர் என் பக்கம் வந்து, ''ஐயா, மிக்க அவசரமான காரியம் ஒன்று தங்களிடம் சொல்ல வேண்டும். வண்டியில் ஏற்றிக் கொண்டால் தாம்பரம் போவதற்குள் சொல்லி முடித்துவிடுவேன். ஏறிக் கொள்ள லாமா?'' என்று கேட்டுக் கொண்டே என் னுடைய பதிலுக்காகக் காத்திராமல் கதவைத் திறந்து வண்டிக்குள் காலை வைத்துவிட் டார். அப்புறம் அவரைப் பிடித்து வெளியே தள்ளினால் தவிர இறங்கச் சொல்வதற்கு வேறு வழி இல்லை. அதைக் காட்டிலும் தாம்பரத்தில் கொண்டு போய் இறக்கி விட்டு விடுவதே நல்லது என்று எண்ணி அவர் உட்காருவதற்கு இடம் கொடுத்தேன்.

டிரைவர் மறுபடி வண்டியை விட ஆரம் பித்த போது, அதன் மெல்லிய இயந்திரக் அங்கங்கள் மீது தம் கோபத்தை எல்லாம் காட்டினார். வண்டி பூகம்பத்தினால் அசைவது போல் அசைந்துவிட்டுத் தடால் படார் என்று சத்தமிட்டுக் கொண்டு, கிளம்பும்போதே மணிக்கு அறுபது மைல் வேகத்தில் கிளம் பிற்று.

''என்ன, அவ்வளவு அவசரமாக என் னிடம் சொல்ல விரும்பிய காரியம்?'' என்று கேட்டேன்.

''உம்முடைய தலைமையில் ஒரு கூட்டம் போட்டுப் 'பழந் தமிழர் நாகரிகம்' என்னும் பொருள் பற்றி ஒரு சொற்பொழிவு நிகழ்த்த வேண்டும் என்று சில நாட்களாய் எனக்கு ஆவல்.''

இதைக் கேட்டதும் என்னை அறியாமல் வாய்விட்டுச் சிரித்து விட்டேன்.

''எதற்காகச் சிரிக்கிறீர்கள்?'' என்று கேட்டார்.

''எதற்காகவா? எல்லாம் வள்ளுவர் பெருமானுடைய வாக்கை நிறைவேற்றுவதற் காகத்தான். 'இடுக்கண் வருங்கால் நகுக' என்று வள்ளுவர் சொல்லி இருக்கிறார், அல்லவா?''

''எனக்குத் தெரிகிறது. சொற்பொழிவு ஆற்றுவதற்கு இவ்வளவு அவசரமாக வண்டி யைச் சாலையின் நடுவில் நிறுத்த வேண்டுமா என்று நினைத்துச் சிரிக்கிறீர். யக்ஷனுடைய கேள்விக்குத் தர்ம புத்திரர் கூறிய பதிலை உமக்கு ஞாபகப்படுத்துகிறேன். இலக்கியத் துறையில் ஈடுபட்டவர்கள் திடீர் திடீரென்று ஒவ்வொருவராகக் காலமாகிக் கொண்டு வரு கிறார்கள்!....''

அவர் தம்மைப் பற்றிச் சொல்லிக் கொள் கிறாரா, அல்லது எனக்கு எச்சரிக்கை செய் கிறாரா என்று எண்ணி வியந்தேன்.

வானொலி நாடகம்

(அக்டோபர் 31) சென்னை வானொலி நிலையம் ஒலிபரப்பிய ''கள்வனின் காதலி'' நாடகத்தை, வீட்டில் படுக் கையிலிருந்தபடியே கல்கி கேட்டு மகிழ்ந் தார். மேடையில் அதை நடித்துக் கொண்டிருந்த டி. கே. எஸ். குழு வினரே, அந்த வானொலி நாடகத்திலும் நடித்தார்கள்.

அந்த நாடகத்தை ஏற்பாடு செய் தவர், அப்போது வானொலி நாடக நிகழ்ச்சிகளின் பொறுப்பாளராக இருந்த மீ. ப. சோமு. அதற்குக் கல்கி யைக் கொண்டே முன்னுரை பேசச் செய்ய வேண்டும் என்று சோமு திட்ட மிட்டு, அவருடைய இசைவையும் பெற் றிருந்தார். ஆனால், கல்கி நோயுற்றுப் படுத்துவிட்டபடியால் அந்தத் திட்டம் நிறைவேறவில்லை.

நாடகத்தைக் கேட்ட பின், தமது பாராட்டைச் சோமுவிடம் கல்கி தெரி விக்கையில் ''இன்னொரு தரம் அதை ஒலிபரப்புங்களேன், முன்னுரை பேசு கிறேன்'' என்றாராம்.

கடைசிப் படம்?

(நவம்பர் தேதி ....) ராஜாஜி மண்ட பத்தில் பாலு சகோதரர்களின் மகாத்மா காந்தி சித்திரக் காட்சி. மகன் ஆனந்தியுடன் அதை ஒரு மணி நேரம் சுற்றிப் பார்த்தார் கல்கி; அங்கேயே ஒரு பாராட்டுக் கடிதம் எழுதிக் கொடுத் தார் :

''இவ்வளவு சிறப்பாகச் சன்காட் சியை நடத்தி, மக்களின் பூர்ண ஆதர வைப் பெற்றதை நேரில் காணவிட்டால் ஒரு குறையாகி விடும். அதனால்தான் இந்த உடல்நிலையிலும் வந்தேன். பார்த் தேன்; மகிழ்ந்தேன்.''

கல்கியை நடுவிற் கொண்டு பாலு சகோதரர்கள் அப்போது ஒரு ஃபோட்டோ எடுத்துக்கொண்டார்கள்.

அதுதான் கல்கியின் கடைசிப் படம் என்று சொல்லப்படுகிறது.

இதிலும் சரி, முந்திய அத்தியாயங் களிலும் சரி, கல்கியின் எழுத்துக்கள் அவ ருடைய வாழ்க்கை — நிகழ்ச்சிகளாகவே குறிப்பிடப் பட்டுள்ளன. அவர் பயனுற வாழ்ந்ததின் பலன்கள் பல வகையாயி னும், அவற்றில் மிகச் சிறப்பானவை அவருடைய எழுத்துச் சாதனைகளே. அவைகளே பெரும்பாலோருக்கு நெடுங் காலம் களிப்பும் வியப்பும் பயனும் அளிக்க வல்லவை. (தொடரும்)



கிளார்க் வேலைக்குப் போன ஒருவனுக்குக் கொடுக்கப்பட்ட கேள்வி: ''பூமியிலிருந்து சூரியன் எத்தனை தூரம்?''

அவன் எழுதிய பதில்: ''எனக்குத் தெரியாது. ஆனால் எனக்கு வேலை கொடுத்தால் என் வேலைக்கு இடைஞ்சலாக இருக்குமளவுக்கு சூரியன் பூமிக்கு அருகில் இல்லை!''

அவனுக்கு வேலை கிடைத்து விட்டது.

கே. ஆர். — சவ்ஸ் வீக்லி

ஜூலை 11

கல்கி

சுஜாதா எழுதும் விஞ்ஞானக் கதைகள்

இது தொடர்பாகக் கல்லூரி மாணவ மாணவியருக்கு ஒரு கட்டுரைப் போட்டியும் உண்டு




பாடுவோம் பாப் மியூசிக்!

கதை: சாருகேசி/தமயந்தி

சித்திரம்: ராஜு

சித்திரத் தொடர்



நா.பார்த்தசாரதி எழுதும் புது உலகம் கண்டேன்!

கிழக்கு ஐரோப்பிய நாடுகள், பிரிட்டன் ஆகியவற்றில் பயண அனுபவங்கள்

"எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை" என்று நிதானமாகச் சொன்னாள் அகிலா.

கமலம்மா பெண்ணையே கூர்ந்து பார்த்தாள். 'ம்.... எல்லாம் படிக்க வைச்சு வேலைக்கு அனுப்பியதன் பலன்' என்று தலையில் அடித்துக் கொள்ளாத குறையாக நொந்து கொண்டாள். வாசுதேவனுக்கு ஒரு பக்கம் கோபமாக இருந்தது; அதே சமயம் ஒரு பெண்ணின் கல்யாணமாவது முடிகிறதே என்ற திருப்தியாகவும் இருந்தது.

அகிலா புன்னகையுடன் வீட்டில் நடக்கும் வாதப் பிரதிவாதங்களை ரசித்தாள். எவ்வளவு சாதாரண சமாசாரம்! அக்காவுக்குக் கல்யாணம் ஆகுமுன், தங்கைக்கு ஆவது எத்தனை அற்பமான விஷயம்! இதற்குப் போய் இத்தனை பிரமாதப்படுத்துவானேன்?

அகிலாவுக்குக் கல்யாணம் ஆகாமல் இருப்பதற்கு அழகின்மையோ, அதிகப் படிப்போ காரணம் அல்ல. மூக்கும் விழியுமாகப் பார்க்க லட்சணமாக இருந்தாள். படிப்பு நிறையப் படித்திருந்தாலும், அடக்கமான சுபாவம் கொண்டவள். சொல்லப் போனால் தங்கை விசாலியைவிட எல்லா விதத்திலும் ஒரு மாற்று கூடத்தான். இருந்தும் என்ன? விசாலிக்குத்தான் முதலில் கல்யாணம்.

"நான் இதற்குத்தான் அப்போதே சொன்னேன்!" என்று கமலம்மா இரைந்து கொண்டிருந்தாள்.

அகிலாவின் உதட்டில் புன்னகை அரும்பியது. அம்மா என்ன சொன்னாளாம்? 'வேலைக்குப் போக வேண்டாம்' என்றாள். நல்ல கூத்து! மூன்று வருடங்களுக்கு முன்பு பிரபல கம்பெனியில் வேலை கிடைத்திருப்பதாகச் சொன்னவுடன், ஊர் முழுக்கப் பெருமையுடன் தம்பட்டம் அடித்தவள் அம்மாதானே!

வேலைக்குப் போனது தப்பா? வேலைக்குச் சென்று மற்ற ஆண்களோடு—குறிப்பாக சாரநாத், ரமணி—சரிக்குச் சமமாகப் பேசிப் பழகியது தப்பா? இல்லை, சீரியஸாக அந்த வாக்குவாதம் நிகழ்ந்து, அதுபோல் 'சபதம்' செய்ததுதான் தவறா?

அகிலாவுக்கு எதுவுமே தவறாகத் தோன்றவில்லை. நினைத்துப் பார்க்கும் போது, எல்லாமே இயல்பாக நடக்கக் கூடியதாகத்தான் தோன்றியது.

வேலையில் சேர்ந்த சில மாதங்களிலேயே மற்றச் சிநேகிதர்களுடன் இடைவேளையில் சாப்பிடும் அளவுக்கு நட்பு பலப்பட்டுவிட்டது. ரமணி, சாரநாத், சத்யம் எல்லோரும் சேர்ந்து உட்காருவார்கள்.

அன்றைக்கு வரதட்சணை பற்றிப் பேச்சு வந்தது.

"சுத்த அயோக்கியத்தனம்! எதற்காகக் கல்யாணத்தில் பெண்ணின் தகப்பனாரே செலவழிப்பது! பையனின் அப்பாவும் சேர்ந்து கொள்வது! கல்யாணமான பிறகுதானே பிள்ளைக்கு அந்தஸ்தே வருகிறது" என்றான் ரமணி.

"அடடே! யார் ரொம்பப் பாதிக்கப்படுகிறார்களோ, அந்த இடத்திலிருந்து அபிப்ராயம் கேட்கவே யில்லையே!" என்ற ரமணி, "அகிலா? என்ன சொல்கிறாய்?" என்றான்.

"வரதட்சணை கொடுத்துக் கல்யாணம் செய்து கொள்வதை நான் வெறுக்கிறேன்!"

சாரநாத் கடகடவென்று சிரித்தான். அலட்சியம் ததும்பியது. "இந்தப் பெண்கள் விஷயத்தில் வரதட்சணை ரொம்ப 'ரிலேடிவ் டெர்ம்'. பெரிய பி. ஏ. படிச்சு ஆடிட்டரா 1500 சம்பாதிக்கும் பிள்ளையின் வீட்டில் வரதட்சணை நாலாயிரம் கேட்கிறார்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். பெண்கள் ஆட்சேபிக்கவே மாட்டார்கள். 'ஓகே' என்று சம்மதித்து விடுவார்கள். ஆனால் அதே மாதிரி, என்னைப் போல் சாதாரண அசிஸ்டெண்ட் கேட்டால் வரதட்சணை வாங்குவதே தப்பு என்பதுபோல் பிரசாரம் செய்வார்கள். கரெக்ட்தானே, நான் சொல்வது?"

"இதைப் பற்றி உதட்டளவில் பேசிக் கொண்டிருப்பது 'ஃபேஷன்' ஆகிவிட்டது!"

அகிலாவின் முகம் சிவந்து போயிற்று. "என்ன சொன்னீர்கள்?" என்றாள் ஆக்ரோஷமாக.

ஒரு நிமிடம் சாரநாத் திகைத்துப் போய்ப் பின்வாங்கினான். "ஒன்றுமில்லை. இது மாதிரி போலித்தனம் வேண்டாம் என்றேன்!"

"இவ்வளவு பேசுகிறீர்களே? நீங்கள் உங்கள் கல்யாணத்துக்கு வாங்குவீர்களா?"

வரதட்சிணையா உஷ்ஷ்!

"நிச்சயமாய் மாட்டேன்!" சாரநாத் ஒரு நிமிடம் தயங்கினான். பிறகு அழுத்தமாய்க் கேட்டான். "வரதட்சணை கேட்கிற பிள்ளையை வேண்டாம் என்று மறுக்கிற தைரியம் உங்களுக்கு இருக்கிறதா?"

"நிச்சயமாக. ரமணி நீங்களும் சாட்சி!" என்றாள் அகிலா.

"விடுடா, சாரநாத்! ஏதோ தமாஷுக்குப் பேசினால் —"

"தமாஷ் இல்லை. நான் சாரநாத்தோடு பந்தயமாக்கும் வைத்திருக்கிறேன்" என்று சொல்லிவிட்டு நகர்ந்தாள் அகிலா.

மற்றவர்கள் எப்படியோ, அகிலா நிஜமாகவே தான் சொன்னதைச் செயலில்

கடைப்பிடிக்கலானாள். 'வரதட்சணை கேட்கிறார்கள்' என்று கேள்விப்பட்டாலே, மூர்க்கமாக அந்த வரனை மறுத்து விடுவாள்.

ஏதோ சொல்கிறாள் என்று சீரியஸாக எடுத்துக் கொள்ளவேயில்லை, வாகதேவனும், கமலம்மாவும். ஆனால் கிட்டிமுட்டி, ஒரு வரன் கைகூடி வரும் போதுகூட, அகிலா பிடிவாதமாக இருந்துவிட்டாளே !

போன பத்தாம் நாள். கல்கத்தாவிலிருந்து ஒரு பிள்ளை வந்துவிட்டுப் போனான். அகிலாவைப் பிடித்திருக்கிறது என்று சொன்னான். வரதட்சணை வேண்டாமாம் — . . . .

''ஆனால் அவர்கள் உறவுக்காரர்கள் நிறைய பேர் வடக்கே இருக்கிறார்கள். போக வரச் செலவுக்கு மட்டும் கொடுத்துவிடணுமாம்!'' என்றார் வாகதேவன்.

அகிலாவுக்குக் கேட்கவே என்னவோபோல் இருந்தது. '' என்னது ! செலவுக்கா ?'' என்றாள் ஏளனமாக.



''ஆமாம். பையனோட 'ரிலேடிவ்ஸ்' எல்லாம் கல்யாணத்துக்கு வரவேண்டாமா ?'' என்றாள் கமலம்மா. '''பிள்ளை மெட்ராசுக்குச் சீக்கிரம் மாற்றல் ஆகி வந்துவிடுவான்!''

''அவர்கள் வீட்டுப் பையனுக்குத்தானே கல்யாணம் ? சொந்தச் செலவில் வந்துவிட்டுப் போகட்டுமே !''

'' இந்த வாயாடித்தனம்தானே வேண்டாம் என்கிறது. பையனுக்கு நல்ல வேலை. இந்தச் செலவு ஒரு பொருட்டே இல்லை!'' என்று கமலம்மா சீறினாள்.

''எதுவாயிருந்தால் என்ன? வரதட்சணை கேட்கிற பிள்ளை வேண்டாம்!'' — அகிலா பிடிவாதமாய் நின்றாள். ''76ம் வருஷத்தில் வரதட்சணையாம் ! ரயிலில் போக வரச் செலவாம். சுத்த நான்சென்ஸ்!''

''76லும் பெண்கள்தான் குழந்தை பெறுகிறார்கள். மாறிவிட்டதா, என்ன!'' என்று கமலம்மா முணுமுணுத்தாள்.

ஆனால் அகிலா தான் கடைசியில் வென்றாள். அந்த நல்ல சம்பந்தத்தை விடவும் பெற்றோருக்கு மனசில்லை. ஏதோ சாக்குப் போக்குச் சொல்லி, விசாலியை முடிக்க ஏற்பாடு செய்தார்கள்.

அகிலா பச்சைக் கொடி காட்டிவிட்டாள்.

2

''ஓர் இன்விடேஷன்!'' என்று ஆபீசில் எல்லாரிடமும் கொடுத்தாள் அகிலா.

சாரநாத் அருகில் வந்ததும் கொஞ்சம் யோசித்தாள் அகிலா. பிறகு அழைப்பிதழைத் தந்தாள்.

''பேஷ், பேஷ்! கங்கிராட்ஸ், வரதட்சணை கொடுத்துத்தானே கல்யாணம்? ஆமாமாம்! அதெல்லாம் ஒரு பேச்சுக்குத்தானே !'' என்று மடமடவென்று சொல்லிக் கொண்டே போனான் சாரநாத்.

''பிரித்துப் பார்த்து விட்டு அப்புறம் சொல்லுங்கள் !''

'' ஓ !'' அழைப்பிதழைக் கண்ட சாரநாத்தின் முகம் சாம்பியது. அவசரப்பட்டு வார்த்தைகளைக் கொட்டி விட்டோமே என்ற வருத்தம் தோன்றியது.

'' நான் நிராகரித்துக் கொண்டே வருகிறேன். அதனால்தான் என் தங்கைக்கு முதலில் கல்யாணம்.''

''இதற்காக நீங்கள் வந்து... ..ப்ளீஸ்...'' என்று சாரநாத் தடுமாறினான்.

அகிலா புன்னகையுடன் நகர்ந்தாள்.

விசாலியின் கல்யாணம் நன்றாகவே நடந்தது. கல்யாணத்தின் போது பலரும் ஜாடையாகக் கிசுகிசுத்தனர். அகிலா பொருட்படுத்தவே யில்லை. ''இவள்தான் பெண்ணுக்கு அக்காவா! வரதட்சணை கேட்கிற பிள்ளை வேண்டாம் என்று சொல்லி விட்டா

நெஞ்சை விட்டு நீங்காத காட்சி



சுஜாதா, கமலஹாசன் நடித்த **ஒரு ஊதாப்பூ கண் சிமிட்டுகிறது** என்னும் திரைப்படத்தில் உங்கள் நெஞ்சை விட்டு நீங்காத காட்சி எது என்று குறிப்பிட்டுச் சுருக்கமாக ஒரு தபால் கார்டில் எழுதி யனுப்பவும். 24–6–76 தேதிக்குள் கிடைக்கும் கடிதங்களை மட்டுமே பரிசீலிப்போம். எந்தக் காட்சி அதிகமான வாசகர்கள் மனத்தைக் கவர்ந்துள்ளதோ அந்தக் காட்சி பற்றி டைரக்டர் **எஸ். பி. முத்துராமன்** தம் அனுபவங்களைக் கல்கி நேயர்களுடன் பகிர்ந்து கொள்வார். உங்கள் மனம் கவர்ந்த காட்சி பற்றி டைரக்டரை என்ன கேட்க விரும்புகிறீர்கள் என்பதையும் தெரியப் படுத்தலாம்.

ளாமே!'' என்று யாரோ ஒரு மாமி சற்று உரக்கவே சொல்லியது காதில் விழுந்தது. பைசாக்கூட வாங்காத பையனை மணம் முடித்துக் கொண்டு, சாரநாத் முன் நின்று, 'இதோ பார்!' என்று சொல்ல வேண்டும். அதுதான் அவள் ஆசை... லட்சியம்...

இந்தச் சமயத்தில்தான் வாசுதேவனுக்குக் கோயமுத்தூர் மாற்றல் ஆகியது. நல்ல வேளை அங்கு கம்பெனியின் கிளை இருந்ததால், அகிலாவுக்கு மாற்றல் கிடைத்தது. நெருங்கிப் பழகிய சிநேகிதர்களை விட்டுப் பிரியும் போது, அவள் மனசுக்குக் கஷ்டமாயிருந்தது.

சாரநாத்தை நோக்கி, '''கல்யாணமானால் இன்விடேஷனை அனுப்புங்கள்!'' என்றாள்.

ஆபீஸைவிட்டு விடைபெற்ற அன்று அழுகை பொங்கிவிடுமோ என்று பயமாயிருந்தது அகிலாவுக்கு. தான் அது மாதிரி பிடிவாதமாக இருந்து நல்ல வரனை உதறித் தள்ளியது தவறோ என்ற இலேசான — மிக மிக இலேசான — உறுத்தல் முதல் தடவையாகத் தோன்றியது.

அந்த உறுத்தல் கோயமுத்தூர் வந்து, யந்திர கதியான வேலையில் மூழ்கிப் போனதும் மேலும் அதிகமாகியது. கலகலப்பே இல்லாத கிளை; மனம் விட்டுப் பழகாத நண்பர்கள். 'சட்! என்ன வேலை! பேசாமல் கல்யாணம் பண்ணிக் கொண்டிருக்கலாம்' என்று எண்ணலானாள்.

யோசித்துப் பார்க்கும்போது அகிலாவுக்கு வேடிக்கையாக இருந்தது. அதுபோல் செய்தது பைத்தியக்காரத்தனமோ? ஒருத்தி கூடத் தன் செய்கையைப் பாராட்டவே இல்லையே! ''இந்த மாதிரிப் பெண்களால் தான் நம் சமூகம் முன்னேறும்!'' என்று யாருமே சொல்லவில்லையே!

கோயமுத்தூர் வந்து ஓராண்டு ஆகியிருக்கும். ஆனால் ரொம்பக் காலம் ஆனாற் போல் இருந்தது. அகிலாவுக்கு வாழ்க்கை அலுக்க ஆரம்பித்தது.

3

''அகிலா! அகில்! ஒரு நியூஸ்டி!'' என்று ஆபீஸிலிருந்து திரும்பியதும், மூச்சிரைக்க வந்தாள் கமலம்மா.

'' என்ன?''

''விசாலிக்கு நாலு 'மாசமாம்'. மசக்கை செய்கிறதாம். என்னை வரச் சொல்லி எழுதியிருக்கிறாள். கல்யாணமாகி ஒரு வருஷம் ஆகப் போகிறதே, இன்னும் விசேஷம் வரவில்லையே என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன்.''

அகிலாவுக்கு உறுத்தியது. அம்மாவுக்கு இதுதான் கவலையா! மூத்தவளுக்குக் கல்யாணம் ஆகாமல் இருக்கிறதே என்ற வருத்தம் சிறிதுகூட இல்லையா!

''நீ போகப் போகிறாயா?''

''போக வேண்டாமா? பாவம், தனியாய் எவ்வளவு சிரமப்படுகிறாளோ! தலைச்சனுக்கு மசக்கை ரொம்பச் செய்யும்.'' — கமலம்மா சொல்லிக் கொண்டே போனாள். ''ம்.... உன்னிடம் சொல்லி என்ன பிரயோசனம்!''

அகிலாவுக்குச் சுருக்கென்றது. தாயாகப் போகிறோம் என்பதைப் பற்றி விசாலிக்குப் பெருமை; பேரன் பேத்தியைக் கொஞ்ச வேண்டுமே என்று அம்மாவுக்கு ஏக்கம்; தாத்தா ஆகவேண்டுமே என்று அப்பாவுக்கு ஆசை..... யாருக்குத் தன்னைப் பற்றிக் கவலை! ஒரு லட்சியத்துக்காகப் பிடிவாதமாகக் காத்திருக்கும் அகிலாவைப் பற்றி யாருக்கு அக்கறை!


திடீரென்று ஒரு யோசனை தோன்றியது. இதைச் சாக்கிட்டாவது சென்னை போனால் என்ன? விசாலியைப் பார்த்த மாதிரி இருக்கும்..... பழைய சிநேகிதர்களையும் பார்க்கலாம்....

''அம்மா, நீ இரேன். நான் போய் விட்டு வரேன்!''

'' நீயா?'' கமலம்மா பார்த்த பார்வையில் பல அர்த்தங்கள் தெரிவதுபோல் இருந்தன. 'உனக்கு என்ன தெரியும்' என்று ஏளனம் செய்வது போல — . . . .


'' ஏன்? போனால் என்ன? உதவிக்குத் தானே!'' பதிலை எதிர்பாராமலே அகிலா சென்னை கிளம்பினாள். விசாலியைப் பார்த்ததுமே, ''கங்கிராட்ஸ்'' என்றாள்.

தாயாகப் போகும் பெருமை காலோடு தலை விசாலியின் உடம்பில் ஜொலித்தது.




கல்கி காரியாலயத்தைச் சேர்ந்த சித்தமல்லி திரு கே. வெங்கடராமன் அவர்களின் புதல்வரும், லக்னோ, பாங்க் ஆப் இந்தியா அதிகாரியுமான **திரு வி. ராதாகிருஷ்ணன்** மே மாதம் 24ந் தேதி சௌ. **கீதாவின்** பொற்கரம் பற்றினார்.

மணமகள்: ஆந்திரப் பிரதேச வருமான வரி உதவி கமிஷனர் திரு எஸ். கணபதி சுப்பிரமணியத்தின் புதல்வி. தியாகராயநகர் வெங்கடேசுவர விவாஹ மந்திரில் நடைபெற்ற திருமணத்துக்குச் சென்னை நகரப் பிரமுகர்களும், உறவினர்களும் நண்பர்களும் வந்திருந்து மணமக்களை ஆசீர்வதித்தனர்.



கடலூர் செயிண்ட் ஜோசப் உயர்நிலைப் பள்ளி, முதல் உதவி ஆசிரியர் ஸ்ரீ சீதாராமன் அவர்கள் குமாரத்தி சௌ. **விஜயலட்சுமி**க்கும், கடலூர், கும்பகோணம் சிட்டி யூனியன் பாங்க் கிளை மானேஜர் சிரஞ்சீவி **Y. செல்லப்பா M. Sc.**க்கும் கடலூர் 'வாசவி' கல்யாண மண்டபத்தில் 24-5-76 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

வாழ்க மணமக்கள்!



பம்பாய், இந்தியா ஸ்டீம்ஷிப் ஸ்தாபனத்தைச் சேர்ந்த ஸ்ரீ V. S. அருணாசலம் அவர்களின் திருக்குமாரத்தி **சந்திரலேகா**, B.Sc.,க்கும் சென்னை V. A. K. அழகுவேல் அவர்களின் திருக்குமாரன் **கனகவேல்**, B. E. & M. Sc. (Engg.)க்கும், 24-5-76ல் சென்னை ஹோட்டல் கோகுலாவில் சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது. சுற்றத்தாரும் நண்பர்களும் ஏராளமாக வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்தனர்.

வாழ்க மணமக்கள்



சென்னை, டெக்னிகல் எஜுகேஷன், அடிஷனல் டைரக்டர் திரு S. வையாபுரி அவர்கள் குமாரத்தி செல்வி: **மாலினி**க்கும், கோவை, திரு V. K. நடராஜ முதலியார் அவர்கள் குமாரர் செல்வன்: **பாலஷண்முகம்** (டிபுடி இஞ்சினீயர், பாரத் எலக்ட்ரானிக்ஸ்)க்கும் சமீபத்தில் சென்னை உட்லண்ட்ஸ் ஹோட்டலில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. திருமணத்துக்கும் அதை ஒட்டி நடைபெற்ற வரவேற்பு வைபவத்துக்கும் ஏராளமான உறவினர்களும், நண்பர்களும், நகரப் பிரமுகர்கள் பலரும் வருகை தந்து மணமக்களை வாழ்த்தினர். வாழ்க மணமக்கள்.

வேண்டும் என்றே பெருமூச்சு விட்டுக் கொண்டாள். . கூடவே ஒரு சலிப்பு.... ''அம்மா வரலையா ?''

''நான்தான் வந்திருக்கேனே !''

''ம்.... அம்மாவுக்கென்றால் எல்லாம் தெரியும்.''

அகிலா ஸ்தம்பித்து நின்றாள். ''உனக்கு என்ன அக்கா, தெரியும் ?'' என்று குத்திக் காட்டுவது போல் இருந்தது. மணமானவர்கள் — அதுவும் குழந்தை பெற்றவர்கள்— எல்லாரும் ஒரு ஜாதி மாதிரியும், தான் மட்டும் அன்னியமானவள் போலவும் தோன்றியது.

அகிலாவுக்கு விசாலியின் வீட்டில் இருப்பே கொள்ளவில்லை. தினமும் ஒரு நாளைப் போல, பக்கத்து அறையிலிருந்து பேச்சு ஓய ரொம்ப நாழிகை ஆகிவிடும். அப்படி என்னதான் பேச்சு இருக்குமோ விசாலிக்கும் அவள் கணவருக்கும் ! அந்த அசட்டுச் சிரிப்பு, பிறக்கப் போகும் குழந்தையைப் பற்றிய அபத்தமான கற்பனைகள், 'தாங்கு தாங்கு' என்று விசாலியை அவள் கணவர் தாங்கும் விதம் — எல்லாம் அகிலாவுக்குக் கசப்பை அளித்தன. திரும்பி ஊர் போய் விடலாம் போலிருந்தது. ஆனால் அம்மா வருகிறவரைக்கும் இருக்கச் சொல்லியிருக்கிறாளே!

ஆபீசுக்குச் செல்ல ஒரு வாரம் கழித்துத்தான் சந்தர்ப்பம் கிடைத்தது. விசாலி குடியிருக்கும் இடம் அத்தனை தூரம்.

ஆபீஸ் வேறு புதிய கட்டிடத்துக்கு மாற்றலாகி யிருந்தது. அகிலா போனபோது நேரமாகி விட்டதால், பலரும் கிளம்பிவிட்டிருந்தார்கள். இருந்த சிலரையும் அடையாளம் தெரியவில்லை. புது முகங்கள். 'நாராயணி எங்கே காணோம்?' — சாரநாத்தின் கிண்டலான பேச்சு.

ஆ... இதோ சாரநாத்!

அகிலாவின் முகம் மலர்ந்தது.

''வா வா, அகிலா! எங்கே இப்படி?''

அகிலா விஷயத்தைச் சொன்னாள்.

''வெரி குட்! பெரியம்மா ஆகப் போகிறாயாக்கும்! ம்... அப்புறம் உன் நியூஸ் ஏதுமில்லையா?''

எதைப் பற்றிக் கேட்கிறான் என்று தெரிந்தும்கூட அகிலா வெளிப்படையாகப் பதில் சொல்லவில்லை. ''எனக்குக் கோயமுத்தூர் போர் அடிக்கிறது!'' என்றாள்.

''அதற்கு என்ன செய்வது? ஒவ்வொரு பிராஞ்சும் ஒவ்வொரு விதம். எனக்குக்கூட இங்கே வரவர டல்லாக இருக்கிறது!''

ஏன் என்று கேட்க வேண்டும் போலிருந்தது அகிலாவுக்கு. 'நீ இல்லாததால்தான்!' என்று சொல்ல மாட்டாளா? ஆனால் கேட்கவில்லை.

சாரநாத் மறுபடியும் ''உன் லட்சியம் என்னவாயிற்று அகிலா? வரதட்சிணை கேட்காத பிள்ளை கிடைக்கவில்லையா?'' என்று அழுத்திக் கேட்டான்.

அவ்வளவுதான்; அணை உடைவது போல அகிலா நெகிழ்ந்து போனாள். ''என் இலட்-

டி. வி. தலையில் இடி !



டி. வி. அதிகம் பார்ப்பதால் கண்ணுக்குக் கெடுதல் மட்டுமல்ல; டி. வி.க்கு அடிமையானவர்களின் ஆரோக்கியம் கெடுகிறது; மன வளர்ச்சி, அறிவு வளர்ச்சியும் பாதிக்கப்படுகிறது என்று அறிஞர்கள் கூறுகின்றனர். போதாக் குறைக்குப் புதிய தகவல் ஒன்றை ஸ்டேட்ஸ்மன் ஆசிரியர்க்குக் கடிதங்கள் பகுதியில் ஒருவர் தெரிவித்துள்ளார். ''உயரமான கட்டடங்களில் மழைக் காலத்தின்போது இடி விழுந்தால் அந்த மின்னல் தாக்குதல் டெலிவிஷன் ஏரியல் வழியாக உள்ளே இறங்கி டி. வி. செட்டில் நுழைந்துவிடலாம். அது காரணமாக செட் வெடிக்கலாம். இதனால் அருகில் உட்கார்ந்து டி. வி. பார்க்கிறவர்களுக்கு அபாயம் ஏற்படும். எனவே உயரமான கட்டிடங்களில் டி. வி. ஏரியல் அமைக்கு முன்னர் இடி தாங்கியை அமைப்பது அவசியம்.''

தகவல்: பாபு

சியம் இருக்கட்டும்! முதலில் அதை ஒரு லட்சியம் என்றே வீட்டில் ஒத்துக்கொள்ள மறுக்கிறார்களே!'' அகிலா சொல்லிக் கொண்டே போனாள். யாருமே அவளைப் பொருட்டாக மதிக்காதது, பாராட்டு தெரிவிக்காதது, ஒதுக்குவது...

சாரநாத் நிதானமாகக் கேட்டான். கடகடவென்று சிரித்தான். பிறகு ''நீயாவது பரவாயில்லை. என் கேஸ் எப்படி தெரியுமோ? வரதட்சிணை வேண்டாம் என்று சொன்னவுடன் என்னை விநோதமாகப் பார்க்கிறார்கள். என் உடலில் ஏதாவது ஊனம் இருக்குமோ, மூதாதையர் வழியில் ஏதாவது வியாதி இருக்குமோ என்று சந்தேகப்படுகிறார்கள்! நான் என்னத்தைச் சொல்ல? அழுவதா சிரிப்பதா என்றே தெரியவில்லை'' என்றான்.

அகிலா சாரநாத்தையே உற்று நோக்கினாள். வாய் விட்டுக் கலகலவென்று சிரிக்க வேண்டும் போலிருந்தது. இரண்டு பேருக்கும் தான் எத்தனை பொருத்தம்?

''நம் இரண்டு பேர் மீதும்தான் தப்பு. லட்சியம் அதுஇதுவென்று நினைத்துக்கொண்டு மற்றவர்கள் அபிப்பிராயத்துக்கெல்லாம் ரொம்ப முக்கியத்துவம் கொடுக்கிறோம்! ஜஸ்ட் லைக் தட் என்று விட்டுவிட வேண்டும்! என்ன சொல்கிறீர்கள்?'' அகிலா இன்னும் சற்று நெருங்கி அமர்ந்தாள்.

''நீ சொல்வது ரொம்ப சரி!'' என்று சொல்லிவிட்டு ஓர் உறுதியுடன் அகிலாவின் கைகளைப் பற்றினான் சாரநாத். அதற்குச் சம்மதம் தெரிவிப்பதுபோல் அகிலா அவன் கைகளை விலக்காமல் மௌனமாய் நின்றாள்.

வாரீர் —
புதுமை
தவழ்ந்திட

**எலுமிச்சைப்
புத்துணர்வுப்
பரவசத்தோடு**

லிரில் புத்துணர்வு.
பார்த்தறியாப் புதுமை,
பரவசக் கிளுகிளுப்பு.
லிரில்.
அலையெறியும் தளதள
பச்சை. அதன் நயமோ
குளுகுளு எலுமிச்சை.
பொங்கிப் பீறிடும்
நுரைவளம்.





கிளுகிளு
புத்துணர்ச்சி
நாள் முழுதும்
உங்கள்மீது நிலவ
லிரில் —
புத்துணர்வு டால்க்.

லிரில்
புத்துணர்வு சோப்

கிளுகிளு புத்துணர்வில் குளித்தெழ

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்புக்கள்.

லின்டாஸ்-LR.21.140TM



சூடாகக் கேட்டார் சுப்பராயர்!

அந்த நாளில் மயிலாப்பூர் திரு சுப்பராய அய்யரிடம் வழக்கறிஞர் தொழில் கற்றுக் கொள்ள ஜூனியராகப் போய்ச் சேருவதே பெருமையடைக்கூடிய விஷயம். எனக்கு அந்தப் பாக்கியம் கிடைத்தது.

அதிகாலையில் ஐந்தரை மணிக்கே, நான், பவளக்காரத் தெருவிலிருந்து மயிலாப்பூருக்குக் கிளம்பி விடுவேன். காலை நேர உழைப்பு கவனத்தை வளர்க்கும் என்று என் சீனியர் நம்பினார். என் போல் அவரிடம் தொழில் பயிலும் வேறு பல இளம் வழக்கறிஞர்களும் வந்து சேருவார்கள். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு ரக, வழக்கு சம்பந்தமான கட்டுகளைக் கொடுத்து, நீதிபதியின் முன் வாதாட அந்த வழக்குக்குத் தேவையான சட்ட நுணுக்கங்களைப் பல சட்டப் புத்தகங்களிலிருந்து தேடி எடுத்துக் குறிப்புகள் எழுதச் சொல்லுவார். அவற்றைப் பிறகு அவர் சாவகாசமாகப் பார்த்து எங்கள் திறமைகளை எடை போடுவார்.

இந்த மாதிரி என் பயிற்சி அவரிடம் தொடர்ந்து ஐந்து வருஷங்களாக நடந்து வந்தது.

ஒரு நாள் காலையில், ஏதோ காரணத்தினால் வீட்டிலிருந்து கிளம்ப அரை மணி நேரம் தாமதம் ஆகிவிட்டது.

"என்ன? வட சென்னையிலிருந்து வருவதாலே, பெரிய வக்கீல் என்று எண்ணமோ?.. காலா காலத்தில் வரும் வழக்கம் என்ன ஆயிற்று?" என்று கேட்டார் என் சீனியர்.


அந்தக் கணத்தில்தான் என் சிந்தனையிலும் நாக்கிலும் சனீசுவர பகவான் இடம் பிடித்தார்!

தென் சென்னைப் பகுதியில் இருப்பவர்கள் தான் பிரபல வழக்கறிஞர்களாக வர முடியும் என்ற நிச்சயத்தில் திரு சுப்பராய ஐயர் என்னை அப்படிக் கேட்டுவிட்டார் என்று அசட்டுத்தனமாக ஒரு முடிவு கட்டிவிட்டேன், என் மனத்தில். அவர், என் நன்மையில் அக்கறை கொண்டு வேடிக்கையாக அப்படிக் கேட்டிருக்கிறார் என்பது புரியாமல் போய் விட்டது.

அவர் கேட்ட வேகத்திலேயே, என் பதிலையும் கொடுத்துவிட்டேன்!

"என் தகப்பனார் நிழலில், நான், என் பிள்ளை, அவனுக்குப் பிள்ளை எல்லோரும் இருக்கலாம்! நான் வக்கீல் வேலை பார்த்துத் தான் ஆக வேண்டும் என்ற அவசியம் இல்லை" என்று கூறி வீட்டுக்குத் திரும்பிவிட்டேன். கையோடு 'பார் கவுன்சிலுக்கு', என் தொழிலை நிறுத்திக் கொண்டுவிட்டதாக எழுதியும் விட்டேன்.

திரு சுப்பராய அய்யரிடம், எனக்கு முன்னால் தொழில் பயின்றவரும், அப்புறம் வந்து



சேர்ந்தவரும், சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிபதிகளானார்கள். நான் அன்று அப்படி அவசரப்படாமல் இருந்திருந்தால், எனக்கும் அந்த வாய்ப்பு ஒரு வேளை கிட்டியிருக்கலாம்.

ஆனால் அதைக் குறித்து இப்போது நான் வருந்தவில்லை. அன்றே கவனத்தை உடனடியாக வேறு திசையில் திருப்பி மருந்து வியாபார நிறுவனத்தில் ஒரு பாகஸ்தராகச் சேர்ந்தேன். ஏற்கனவே என் அபிமானத்தைப் பெற்ற கிரிக்கெட் விளையாட்டுத் துறையில் ஈடுபாட்டை அதிகமாக்கிக் கொண்டேன். தமிழ்நாடு கிரிக்கெட் அசோஸியேஷன் நிர்வாகத்தில் உழைத்து வருகிறேன். கிரிக்கெட் ஆட்டத்தில் மாநில அளவில் முன்னுக்கு வர விரும்பும் இளைஞர்களை உற்சாகப் படுத்திக் கொண்டிருக்கிறேன்.

திரு அண்ணாதுரை கூறக் கேட்டு
எழுதியவர்: பட்டினத்தார்

சவாலைச் சந்தித்தேன்:

ஒரு காமிராவின் கோணங்கள்!

அவன் ஸ்டுடியோ வாசலில் ஏதோ நிழல்.

''யெஸ். கம் இன்.''

இரண்டு பெண்கள் உள்ளே நுழைந்தார்கள். கிருபாகரன் அவர்களைப் பார்த்தான். ஒருத்தி நல்ல எலுமிச்சை நிறத்தில் வெண்ணெயின் மினுமினுப்போடு இருந்தாள். மற்றொரு பெண் மாநிறமாக, சற்று நீளமான கண்களுடன் இருந்தாள். ஒரு கதாநாயகியைப் போன்ற அபரிமிதமான அழகு இல்லாமல், 'பிராக்டிக'லான பெண்ணாக இருந்தாள். அதிகாலையில் எழுந்து, சமைத்துப் பிறகு பஸ்ஸைப் பிடித்து, ஆபீசில் பைல்களைப் புரட்டி, பிறகு மாலையில் மறுபடியும் பஸ்ஸின் கூட்டத்தில் சிக்குண்டு வெளி வரும் ஒரு வழக்கமான ஆபீசில் பணி புரியும் பெண்ணின் முகத் தோற்றம் அப்படியே அவளிடம் இருந்தது.

அவர்கள் இருவரையும் ஒரு கண நேரத்தில் சர்வே செய்துவிட்ட கிருபாகரன் தன் எதிரே இருந்த சோபாவைக் காண்பித்தான்.

''கமான், உட்காருங்க'' என்று கூறி விட்டு மேலே ஒன்றும் பேசாமல் அவர்களைப் பார்த்தான்.



அதைப் புரிந்துகொண்டவள் போல் அந்த அழகான பெண் பேசினாள்.

''ஒரு போட்டோ எடுக்கணும்.''

''யெஸ். வித் ப்ளாஷா். என்ன இரண்டு பேரும் சேர்ந்தா ?''

''இல்லே. இவங்களை மட்டும் தனியா எடுக்கணும்'' என்று தன் அருகில் இருந்த பெண்ணைக் காண்பித்தாள்.

''பாஸ்போர்ட் சைஸா?''

''இல்லே. ஃபுல் சைஸ்.''

அவன் டேபிளில் இருந்து ரிஜிஸ்தரை எடுத்தான். ''உங்க பேர்?'' என்றான்.

''சுகந்தி'' என்றாள் அந்த மாநிறமான பெண்.

அதை எழுதிவிட்டு அவளிடம் கையெழுத்து வாங்கியபிறகு பில்லைக் கொடுத்தான். அந்த அழகான பெண்தான் பில்லுக்கும் பணம் கொடுத்தாள். சுகந்தி வந்ததிலிருந்து ஒன்றும் பேசாமல் இருந்தது அவனுக்கு வியப்பாக இருந்தது. போட்டோ எடுத்துக் கொள்ளப் போகும் அவளுக்காக மற்றொருத்தி எல்லா ஏற்பாடுகளும் செய்வது வேடிக்கையாக இருந்தது.

சுகந்தியை உற்றுப் பார்த்தான். அவள் மௌனமாக உட்கார்ந்திருந்தாள். அவள் மனத் திரைக்குள் ஏதோ பழைய சம்பவங்கள் அல்லது எதிர்காலச் சம்பவங்கள் வேகமாக ஒரு திரைப்படம் போல் ஓடிக் கொண்டு அவள் உணர்ச்சிகளைப் பாதித்துக் கொண்டிருக்க வேண்டும் என்று அவன் ஊகித்தான்.

''ஓகே. உள்ளே வாங்க'' என்று கூறி விட்டு ஸ்டுடியோக் கதவைத் திறந்தான் அவன்.

''ஒரு நிமிஷம்'' என்றாள் அந்த அழகான பெண்.

''என்ன?''

''உங்ககிட்டே கொஞ்சம் பேசணும்'' என்றாள்.

''என் கிட்டவா? சம்திங் பெர்சனல்?''

''நோ. இந்தப் போட்டோ விஷயமாகத்தான்.''

''வெரி குட். பைதி பை. மை நேம் ஈஸ் கிருபாகரன்'' என்றான்.

''என் பேர் பார்வதி'' என்றாள்.

உருவத்துக்குச் சம்பந்தமில்லாத இருபது வருடங்களுக்கு முந்தைய பெயர் என்று நினைத்தான்.

''இந்தப் போட்டோவை நீங்க ரொம்ப அழகா எடுக்கணும்.''

''என்னால் முடிஞ்ச அளவுக்கு முயற்சி பண்ணறேன்'' என்று கூறி விட்டுச் சுகந்தியைப்

பார்த்தான். அவள் வெளியே ஓடிக் கொண்டிருக்கும் ஆட்டோ ரிக்ஷாவைப் பார்த்தபடி இருந்தாள்.

''இந்தப் போட்டோவை நீங்க அழகா எடுக்கிறதிலேதான் அவள் எதிர்காலமே அடங்கி இருக்கு.''

''அப்படியா? ஏதாவது வேலைக்கு அப்ளிகேஷன் போடறாங்களா ?''

''அப்ளிகேஷன் மாதிரிதான் வைச்சுக்குங்களேன்.''

''புரியல்லே.''

''மாரேஜுக்கு அப்ளிகேஷன் போடப் போகிறான்.''

''ஐ. ஸீ. வெரிகுட். நான் என்ன செய்யணும் சொல்லுங்க.''

''மாட்ரிமோனியல் காலத்திலே ஒரு விளம்பரம் வந்திருக்கு. போட்டோவைப் பார்த்து செலக்ஷன் பண்ணறதாகப் போட்டிருந்தது. அதுக்காகத்தான் நீங்க ரொம்ப அழகாக எடுத்துத் தரணும்னு சொல்றேன்.''

இவளை ஒரு வரம்புக்கு மேல் அழகாகக் காமிராவின் லென்ஸ் காண்பிக்குமா என்று சுகந்தியைப் பார்த்தான் கிருபாகரன். அவள் தலையைத் தூக்கவில்லை. இல்லஸ்ட்ரேட்டட் வீக்லியில் மரியோவின் ஜோக்கைப் படித்துக் கொண்டிருந்தாள்.

''சுகந்தி! நான் எல்லாத்தையும் விளக்கமா இவர்கிட்டே சொல்லலாமா?'' என்றாள் பார்வதி. பிறகு, ''சார்! இவளுக்கு — சுகந்திக்கு எவ்வளவு வயசு இருக்கும்னு நினைக்கிறீங்க?'' என்றாள் கிருபாகரனைப் பார்த்து.

இந்தச் சிக்கலான கேள்வியைக் கேட்டுக் கிருபாகரன் தயங்கினான். ''வந்து... ஒரு.... இருபத்து அஞ்சு இருக்குமா ?''



''இருபத்தெட்டு ஆகுது. இன்னும் கல்யாணம் ஆகலே.''

இதற்கு என்ன பதில் கூறுவது என்று தெரியாமல் கிருபாகரன் யோசித்து ஒன்றும் தோன்றாததால் மௌனமாக இருந்தான்.

''இவளுக்கு ஏன் இன்னும் கல்யாணம் ஆகலே? சொஸைட்டிதான் காரணம். இவளுக்கு அப்பா இல்லே. அம்மா இல்லே. ஏன், யாருமே இல்லாத அனாதைன்னு வைச்சுக்குங்களேன். இவளுக்கு யார் கல்யாணம் பண்ணி வைப்பாங்க? இல்லே. இவளை எந்தக் குடும்பத்திலேதான் கல்யாணம் பண்ணிக்கத் தயாராக இருக்காங்க? அப்பா அம்மா இல்லேன்னு அது ஒரு டிஸ்குவாலிபிகேஷன்னு எல்லோரும் நினைக்கிறாங்க. அதுக்கு அவ என்ன சார் பண்ணுவா ? இவளுடைய சொந்தக்காரங்க யாராவது இவளுக்குக் கல்யாணம் பண்ணி வைப்பாங்கன்னு நினைச்சாக் கூடப் பணம் இல்லை சார். இப்படி இருக்கிறப்ப இவளுக்கு எப்படி சார் கல்யாணம் ஆகும்?'' — வேகமாகப் பேசினாள் பார்வதி. தன்னுடைய உயிர்த் தோழி ஒருத்திக்கு அநீதி இழைக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என்ற வேகம் அதில் தெரிந்தது.

எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டு சுகந்தி மௌனமாக அமர்ந்திருந்தாள். அவள் கண்கள் மட்டும் இலேசாகக் கலங்கி யிருந்தன.

பார்வதி தொடர்ந்தாள்.

''அவளுக்கு உதவாத இந்த சொஸைட்டியை உடைச்சு எறிஞ்சுட்டு அவளுக்குக் கல்யாணம் பண்ணி வைக்கிறதா நான் முடிவு பண்ணிட்டேன். மாட்ரிமோனியல் காலத்தில் 'கேஸ்ட் நோ பார்'னு போட்டு வரும் பாருங்க. அதுக்கு இனிமே இவளை அப்ளை பண்ணச் சொல்லி யிருக்கேன். அவ அப்படிக் கல்யாணம் பண்ணிக்கிட்டால் அவளை அவளோட சொந்தக்காரங்க எல்லோரும் திட்டுவாங்க. திட்டட்டும். அவங்களுக்குக் கல்யாணம் பண்ணி வைக்கத் தெரியல்லேன்னாலும் செஞ்சுக்கிற கல்யாணத்தைப் பற்றித் திட்டத் தெரியும்.''

''உங்களுடைய நியாயமான வாதங்கள் எல்லாம் நல்லா யிருக்கு. குறிப்பா என்கிட்டே நீங்க வெளிப்படையா சொன்னதுக்காக நான் சந்தோஷப்படறேன். இந்தப் போட்டோ எடுக்கிறது விஷயமா நான் எந்த விதத்திலே உதவலாம்னு சொல்லுங்க. நான் கண்டிப்பா உதவறேன்.''

''நேத்தைய பேப்பர்லே மாட்ரிமோனியல் காலத்துலே 'மணமகள் தேவை'ன்னு போட்டு 'கேஸ்ட் நோ பார்'னு போட்டிருந்தது. போட்டோவோட அப்ளை பண்ணச் சொல்லிப் போட்டிருந்தது. பொதுவா இப்படி விளம்பரம் கொடுக்கிறவங்க பரந்த மனப்பான்மையோடத்தான் இருப்பாங்க. இருந்தாலும் முதல் இம்ப்ரேஷனை நல்லா அமையணும்கிறதுக்காகத்தான் போட்டோ நல்லா அழகா இருக்கணும்னு சொல்றேன். எந்த ஆங்கிள்லே, எந்த மாதிரி எடுத்தா அழகா இருக்கும்னு தோணுதோ அந்த விதத்திலே நீங்க எடுங்க. எங்களுக்கு வேண்டியது போட்டோ அழகா யிருக்கணும். தட்ஸ் ஆல்'' என்றாள்.



கணவன் ஸ்கூட்டரில் மனைவியோடு போய்க் கொண்டிருந்தான். இருட்டான நேரம். எதிர்த்தாற்போல லாரி வந்தது. ''இதோ பார்.... எதிரே இரண்டு ஸ்கூட்டர்கள் வருகின்றன! நான் இரண்டுக்கும் இடையே வண்டியை விடுகிறேன்'' என்றான் கணவன். ஆஸ்பத்திரியில் கண் விழித்த கணவன் பக்கத்துக் கட்டிலில் கிடந்த மனைவியிடம் சீறிக் கொண்டான்: ''நடுவே வந்த ஸ்கூட்டர்காரன் லைட் இல்லாமல் வந்திருக்கிறான், முட்டாள்!''

-நாநா

''போட்டோ அழகா இருக்கணும்னு - ஒரு கண்டிஷன். உங்க பிரெண்டை சந்தோஷமா சிரிச்ச மாதிரி இருக்கச் சொல்லுங்க. இந்த மாதிரி வேதனையோட இருந்தால் அப்புறம் நான் பொறுப்பில்லே. அவங்களைச் சிரிக்க வைக்கிறது உங்க பொறுப்பு. அன்பார்ச்சுனேட்லி எனக்கு நல்ல ஜோக்லாம் அடிக்கத் தெரியாது.''

சுகந்தி இதைக் கேட்டுச் சிரித்துவிட்டாள். முகம் பிரகாசமாக விரிந்தது.

''தட்ஸ் குட்'' என்று கூறிவிட்டு ஸ்டுடியோவுக்குள் சென்றான் கிருபாகரன்.

அதன்பிறகு சுகந்தி முகம் கழுவிக் கொண்டாள். ஒரு கைதேர்ந்த ஓவியனைப் போல் பார்வதி சுகந்தியை ஒவ்வோர் இம்மியாகக் கவனமாக அலங்கரித்தாள். பார்வதி எடுத்துக் கொண்ட சிரத்தை — தன் எதிரே யிருந்த கண்ணாடி தன்னைச் சற்று அழகாகப் பிரதிபலித்துக் காட்டிய நம்பிக்கை, — இவை எல்லாமாகச் சேர்ந்து சுகந்தியைப் பூரிப்படைய வைத்தன. அந்தப் பூரிப்பு எல்லாம் முகத்தில் வந்து மலர்ந்தது.

கிருபாகரன் ஹெட் லைட்டைப் போட்டான். பக்கவாட்டில் வைத்திருந்த விளக்குகளையெல்லாம் பலவாறு நகர்த்தி வைத்துச் சிரமப்பட்டான். சுகந்தியை மிகவும் இயல்பாக, சாதாரணமாக ஒரு ஸ்டாண்டின் மீது சாய்ந்து கொண்டு நிற்கச் செய்தான். அவன் பலவாறு எடுத்துக் கொண்ட முயற்சிகளையெல்லாம் பார்த்த பார்வதிக்கு, அவன் கற்றுக் கொண்டிருந்த எல்லாத் தொழில் நுணுக்கங்களையும் சுகந்திக்கே செலவழிப்பது போல் தோன்றியது.

போட்டோ எடுத்து முடித்தவுடன் உண்மையிலேயே சுகந்தி குதூகலத்துடன் இருந்தாள்.

''எப்போ சார், போட்டோ கிடைக்கும்?'' என்று அவளாகவே கேட்டாள்.

''நாளைக்குச் சாயந்திரமா வாங்க...... தர்றேன்.''

''போட்டோ நல்லா இருக்கும் இல்லே?'' என்றாள் சுகந்தி சிரித்துக் கொண்டே.

''ஷ்யூர். நீங்க சந்தேகப்படவே வேண்டாம்.''

''ரொம்ப தாங்க்ஸ் சார்!'' என்று கூறிவிட்டுப் படி இறங்கிச் சென்றாள் சுகந்தி.

பார்வதி தொடர்ந்தாள்.

மறு நாள் மாலை. சுகந்தி மட்டும்தான் வந்தாள்.

''ஹலோ, வாங்க. அவங்க வரல்லியா?''

''இல்லே. வீட்டிலே கொஞ்சம் வேலை இருக்குன்னு போயிட்டாங்க. போட்டோ ரெடியாயிடுச்சுங்களா?'' என்றாள்.

''ஓ! யெஸ்!'' என்று கூறிவிட்டுத் தன் மேஜை டிராயரைத் திறந்து கவர்களைப் புரட்ட ஆரம்பித்தான். அதற்குள் சுகந்தியின் மனம் படபடவென்று அடித்துக் கொண்டது. போட்டோ நன்றாக இருக்குமா இருக்காதா என்ற முடிவுகள் அதற்குள் மாறி மாறி அவள் மனத்தில் போட்டியிட்டன.

கிருபாகரன் ஒரு கவரை எடுத்து அதிலிருந்த போட்டோவை எடுத்து அவளிடம் கொடுத்தான்.

போட்டோவைப் பார்த்தாள். அவள் ஓவியமாக நின்று கொண்டிருந்தாள். மனம் உடனே காற்றுப் போல் இலேசாகிச் சிறகடித்துப் பறந்தது.

அவளுடைய பூப்போட்ட புடவைகூட எவ்வளவு அழுத்தமாக விழுந்திருக்கிறது!

''போட்டோ நல்லா இருக்கு, இல்லே!'' என்றான் கிருபாகரன்.

''வெரி நைஸ். இது நான்தானான்னு எனக்கே சந்தேகமா யிருக்கு. அவ்வளவு அழகா இருக்கு.''

''உங்க அழகு உங்களுக்குத் தெரியறதுக்கு நியாயம் இல்லே.''

''இல்லே, சார்! நான் ஒத்துக்க மாட்டேன். நான் இவ்வளவு அழகு இல்லே. உங்களுடைய கற்பனைக்கும், உங்க காமிராவுக்கும் தான் இந்தப் பெருமை எல்லாம் போய்ச் சேரணும். நான் இந்தப் போட்டோவிலே ரொம்ப அழகா இருக்கேன்கிற பெருமை ஏற்படற அதே நேரத்துலே ஒரு வேதனையும் உண்டாகுது. இந்த மாதிரி ஓர் உண்மைக்குப் புறம்பான அழகான போட்டோவை அனுப்பி ஒருத்தரை ஏமாத்தப் போறேன்கிற நினைப்பே வேதனையா யிருக்கு. பை சான்ஸ் அவர் போட்டோவைப் பார்த்துக் - கல்யாணத்துக்குச் சம்மதிச்சிட்டா அவர் வீணா ஏமாந்துடுவாரேங்கிறபரிதாபமும் தோணுது சார்!''

''நோ நோ. யூ ஆர் ஆல்ரைட். எப்பவும் வேதனைகளை மறந்துட்டுச் சிரிச்ச மாதிரி இருங்க. நீங்க ரொம்பப் ப்ளீஸிங்கா இருப்பீங்க. மாட்ரிமோனியல் காலத்துக்கு அப்ளை பண்ணுங்க. கண்டிப்பா நீங்க ஜெயிக்கத்தான் போறீங்க. விஷ் யூ பெஸ்ட் ஆப் லக்'' என்றான் கிருபாகரன் சிரித்துக் கொண்டே.

''இது ஜெயிச்சால் முதல் இன்விடேஷன் உங்களுக்குத்தான் சார்!'' என்றாள் சுகந்தி.

''தாங்க் யூ வெரி மச்'' என்றான் கிருபாகரன்.

சுகந்தி சென்றுவிட்டாள்.

இருபது நாட்கள் கழித்து அவன் ஆபீசில் இருந்தபோது ஒரு நாள் பிற்பகல் அவளுக்குப் போன் வந்தது.

''ஹலோ, சுகந்தி ஹியர்.''

''ஹலோ. நான்தான் கிருபாகரன் பேசுகிறேன்.''

''கிருபாகரன்?'' — முதலில் அவளுக்குப் புரியவில்லை.

''ஆமாம். கிருபாகரன். வீனஸ் போட்டோ ஸ்டுடியோ.''



மைல்ரங்கம் ஸ்ரீ V. ஆம்ரவனேஸ்வரன் அவர்கள் குமாரர் சிரஞ்சீவி M. A. கிருஷ்ணமூர்த்தி (அக்கவுண்டண்ட் தாவண்கிரே காட்டன் மில்ஸ் லிமிடெட்) அவர்களுக்கும், பாங்க் ஆப் பரோடா தென் பிராந்திய மானேஜர் ஸ்ரீ K. S வைத்தீஸ்வரன் அவர்கள் குமாரத்தி சௌ. அகிலாண்டேஸ்வரிக்கும் மே, 21ம் தேதி திருச்சி மெடிக்கல் அசோஸியேஷனில் மிகச் சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது. வாழ்க மணமக்கள்

"ஓ! நீங்களா?" அவளுக்கு எல்லாமே 'பளிச்' எனப் பிரகாசமாய் நினைவு வந்தது. "சௌக்கியமா சார். என்ன விஷயம்?"

"இன்னைக்குச் சாயந்திரமா ஸ்டுடியோப் பக்கமா வர்றீங்களா?"

"நானு? எதுக்கு?"

"வாங்களேன்."

"சரி. வர்றேன்."

அவன் போனை வைத்து விட்டான். சுகந்திக்கு ஒன்றும் புரியவில்லை.

மாலை. வீனஸ் போட்டோ ஸ்டுடியோ.

"உட்காருங்க" என்று கூறிய கிருபாகரன் ஒரு கவரை எடுத்து அவளிடம் கொடுத்தான். "பிரிச்சுப் பாருங்க."

பிரித்துப் பார்த்தாள். அவள் மெட்ரிமோனியலுக்கு அனுப்பியிருந்த அப்ளிகேஷன். அவளுடைய போட்டோ.

"சார். இது எப்படி இங்கே...."

"நான்தான் போஸ்ட் பாக்ஸ் நெம்பர் 4811."

"சார்.... யு மீன்.... நான்.... நான் வந்து...."

"யெஸ். நீங்க எனக்குத்தான் அப்ளை பண்ணி இருக்கீங்க."

சுகந்தியின் கைவிரல்கள் படபடவென்று நடுங்கின. "சார்....! நான்.... நான் இந்த அப்ளிகேஷன்லே என்னென்னமோ என்னைப் பத்தி உயர்வா எழுதியிருக்கேன்.... ஆனால் நீங்க...."

"எனக்கு எல்லாம் தெரியும். அன்னைக்கு நீங்க வந்து மாட்ரிமோனியல் பத்திப் பேசினப்பவே எனக்குத்தான் அப்ளை பண்ணப் போறீங்களோன்னு நினைச்சேன். ஆனால் வேறே யாருக்காவது வேணும்னாலும் இருக்கலாம் இல்லையா? அதனாலேதான் அன்னைக்கு ஒன்றும் சொல்லலே. இதோ பாருங்க. கிட்டத்தட்ட இருபது அப்ளிகேஷன் போட்டோவோட வந்திருக்கு" என்று கூறி ஒரு கத்தைக் காகிதங்களைக் காண்பித்தான்.

சுகந்தி பதில் பேசவில்லை. அவளுக்கு முகம் எல்லாம் வியர்த்திருந்தது.

"ஆனால் என்னமோ உங்களோட அப்ளிகேஷன் என் கண்ணிலே முதல்லே பட்டுடுச்சு. அதுக்கப்புறம் எந்த அப்ளிகேஷனையும் நான் பார்க்கல்லே. பார்க்க நான் விரும்பல்லே. ஏன்னு நான் ஒரு முடிவு எடுத்ததுக்கப்புறம் மத்ததையெல்லாம் பார்க்கிறதுலே அர்த்தம் இல்லே. நான் என்ன சொல்ல வர்றேன்னு உங்களுக்குப் புரியுதா?"

"புரியுது" என்று கூறிவிட்டுத் தன்னுடைய அப்ளிகேஷனைப் பார்த்தாள் சுகந்தி. சற்று நேரத்தில் அவள் பெரிதாக அழுதுவிடுவாள் போல் இருந்தது.

"உங்களுடைய நிலைமை ரொம்ப வேதனையானது. யு நீட் மாரேஜ். யு டிஸர்வ் இட். நான் இந்தக் கல்யாணத்துக்கு மனப்பூர்வமா சம்மதிக்கறேன். என்ன சொல்றீங்க?" என்றான் அவன்.

சுகந்தி மெல்ல எழுந்தாள். எழுந்து அவன் அருகே வந்து அவள் எழுதிய அப்ளிகேஷனையும் போட்டோவையும் எடுத்துத் தன் வானிடி பைக்குள் வைத்துக் கொண்டாள்.

"சார்! நான் பண்ணினது பெரிய தப்பு சார். நான் எந்த அளவுக்கு அழகானவ, தகுதியானவன்னு எனக்கு நல்லாத் தெரியும். உங்ககிட்டவே வந்து என்னுடைய எல்லா விக்னளையும் சொல்லிட்டுப் போட்டோ, எடுத்துட்டு, மறுபடியும் உங்களுக்கே என்னைப் பத்தி உயர்வா ஒரு அப்ளிகேஷனும் போட்டோவும் அனுப்பினது என் மனசைக் குத்தறது. எனக்காக நீங்க இதை ஒரு தியாகம் செய்யற மாதிரிதான் நினைக்கிறேனே தவிர, என்னைப் பொறுத்தவரைக்கும் நான் உங்களை ரொம்பவும் வெளிப்படையா ஏமாத்தற மாதிரி தோணுது சார். இது இன்னைக்கு மட்டும் இல்லே, என்னைக்குமே என் மனசுலே அப்படியே நிலையா நின்னுடும். அந்தக் குற்ற மனப்பான்மையோட என்னாலே உங்க எதிர்க்க ஒரு நிமிஷம்கூட நிற்க முடியாது. தயவுசெஞ்சு என்னை மன்னிச்சுடுங்க. நீங்க மத்த அப்ளிகேஷன்களையும், போட்டோக்களையும் பாருங்க. நான் நாளைக்கு மறுபடியும் மாட்ரிமோனியல் காலத்தைப் பார்க்கிறேன்."

அவள் விடுவிடு என்று இறங்கிச் சாலையில் மறைந்தாள்.

உணவிலே காரம் — குடலிலே புண்

மூப்பத்தெட்டு வயதான பொன்னம்பலம் தம் வயிற்றினை இரு கைகளாலும் பற்றி அணைத்துக் கொண்டு 'ஹா... ஆ...' என்றவாறு உள்ளே நுழைகிறார்.

''என்ன, வயிற்றுவலியா? எவ்வளவு நாளா இருக்கு வலி?'' என்று விசாரிக்கிறேன்.

''நாலு, ஐந்து மாசத்துக்கு முந்தி ஆரம்பமாச்சு, டாக்டர்! சாப்பிட்டு இரண்டு மணி நேரத்துக்குப் பிறகு வலி தொடங்கும். மறுபடியும் வயிற்றுக்கு ஏதாவது ஆகாரம் போய்ச் சேரும்வரை வலி இருந்துகொண்டேயிருக்கும். இரும்பத் திரும்ப இப்படியே வயிறு காலியாக ஆரம்பித்ததும்வலியும் தொடங்க ஆரம்பிக்கும்.'' என்கிறார் பொன்னம்பலம் முனகியவாறு.

பொன்னம்பலத்தை மேஜை மீது படுக்கச் சொல்லி, சிறு குடலின் ஆரம்பப் பகுதியான 'டியூடினம்' (Duodenum) இருக்கும் இடத்தை என் விரல்களால் தட்டி, 'இங்கேதானே வலிக்கிறது?' என்கிறேன்.

''நெஞ்சிலே எரிச்சல் இருக்கிறதா?''

''இருக்கு டாக்டர். தொண்டை வரைக்கும் ஒரே எரிச்சல். ஆனால், அதைக் கூடப் பொறுத்துக் கொள்ளலாம்; இந்தக் குடல் வலிதான் தாங்க முடியவில்லை.''

''வாந்தி எடுக்கிறதா? வாந்தி எடுக்கிறபோது இரத்தம் வருவதுண்டா? சிகரெட் பழக்கம் உண்டா?''

''வாந்தியே இல்லை. புகை பிடிக்கும் பழக்கமும் இல்லை.''

அமிலத்தைக் கட்டுப்படுத்த அவருக்கு மருந்து எழுதிக் கொடுத்து, ''காரம், புளி, மசாலா — இவை சேர்க்காமல் நீங்கள் உணவைக் கட்டுப்படுத்தி வர வேண்டும். தினமும் மூன்று வேளை வயிறு நிரம்பச் சாப்பிடுவதற்குப் பதில் கொஞ்சம் கொஞ்சமாக ந[ா]ன்கு, ஐந்து வேளைகள் சாப்பிடுவது நல்லது. குடல் காலியாக இராமல் பார்த்துக் கொள்ளுங்கள். இரவில் வலி அதிகமாக இருந்தால் வலி தெரியாமல் இருக்கத் தூக்க மாத்திரைகளும் எழுதித் தருகிறேன்'' என்கிறேன்.

''காரம், புளி சேர்க்காமல் எவ்வளவு மாதம் சாப்பிட வேண்டும், டாக்டர்?''

''ஆறு மாத காலம் இப்படிக் கட்டுப்பாட்டுடன் இருந்தால் குடற்புண் ஆறிவிடும். அதன் பின்னர் மிகக் குறைந்த அளவு காரம், புளி சேர்த்துக் கொள்ளலாம். நோயின் ஆரம்ப நிலையிலேயே நீங்கள் சிகிச்சைக்கு வந்து விட்ட[த]ால் ஆபரேஷன் ஏதும் இல்லாமலேயே மருந்[து]களாலேயே இது குணமாகி விடும். கவலைப்படாதீர்கள்.''

''இதுவே நாட்பட்ட 'கேஸ்' ஆக இ[]ருந்தால்?''

''முற்றிய நிலையில் குடற்புண்ணிலிருந்து கசியும் இரத்தம் வாந்தியின் மூலம் வெளிப்படும். 'டியூடினம்'த்தின் சுவர்கள் அரித்துப் போய், அதில் துவாரங்கள் ஏ[ற்]படலாம். கடுமையான காய்ச்சல் வரும். மயக்கம் ஏற்படும். நெடுங்காலம் அசட்டை செய்யப்பட்டால் மேலும் சில விபரீத வ[ி]ளைவுகள் ஏற்படலாம். காயம் பட்ட புண் ஆறும் போது மேல் தோல் சுருங்குகிற மாதி[ரி] குடற்புண் சுருங்கி 'டியூடினம்'த்தின் மு[த]ல் பகுதியான 'பைலோரஸ்' (Pylorus) என்னும் பகுதியை அடைக்கும். இவ்விதம் அ[டை]ப்பு ஏற்பட்டால் அறுவைச் சிகிச்சைக்கு அ[]வசியம் ஏற்படும். சாப்பிட்ட உணவு சிறு குடலுக்குப் போகாது. வாந்தி எடுக்கும்.''

''இம்மாதிரி, குடலில் புண் ஏற்படக் காரணம் என்ன?''

காரம் மிகுதியான உணவைத் தின[மு]ம் உட்கொள்ளுதல், கவலைக்கு இடம் கொடுத்தல், புகை பிடித்தல், மதுபானம், வேளை கெட்ட வேளையில் சாப்பிடுவது — இவை காரணமாக அமைகின்றன. மூளை[க்]கு ஓய்வில்லாமல் அதிக வேலை கொடுப்பவர்களுக்குக் குடல் அழற்சிப் புண் ஏ[ற்]படக் கூடும். ஹைட்ரோகுளோரிக் அ[மி]லம் அதிகமாகக் குடலில் சுரப்பதற்கு இவை காரணமாகும். பஞ்சாபிகளுக்கு இம்மாதிரி குடற்புண் ஏற்படுவது அபூர்வம். அவர்களது உணவுப்பழக்கம் அப்படி.

டாக்டர் கேப்டன் என். கே. சுந்தரம் கூறக் கேட்டு எழுதியவர்: ஆர். பி



பஞ்சாபில் கிராமப்புற மக்களுக்கு வைத்திய வசதி ▶

சம்சாரம்

விமலா ரமணி

இரவின் துல்லியமான அமைதி. கதைகளில் வருணிக்கிற மாதிரி வானத்தில் நிலவு இல்லை! என் மனத்தைப் போல் அதுவும் இருண்டிருந்தது. மொட்டை மாடியில் கொள்ளிவாய்ப் பிசாசு மாதிரி தன்னந் தனியே நின்று கொண்டிருந்தேன்! கொள்ளிவாய்ப் பிசாசை எனக்குப் பொருத்தம் காட்டியதற்கு ஒரு காரணம் உண்டு. என் வாயில் 'சிகரெட்' புகைந்து கொண்டிருந்தது.

ஐயா, நாற்பத்தைந்து வயது ஒரு வயதா? என் மனைவியோடு என்னை ஒப்பிட்டுப் பார்க்கும் போது எனக்கு அக்கா மாதிரி இருப்பாள். அவளுக்குத் தலையெல்லாம் நரை விழுந்துவிட்டது! எனக்கும்தான்! ஆனால் என் நரை அழகு நரை! நான் சொல்லவில்லை. நண்பர்கள் சொல்கிறார்கள்.

ஐந்து குழந்தைகளைப் பெற்றுத் தந்துவிட்ட பெருமிதத்தை முகத்திலும், குழந்தைகள் பெற்ற நலிவை உடலிலும் என் மனைவி தாங்கிக் கொண்டு குடும்பத் தலைவியாய் இருக்கிறாள்! (அந்தக் காலம்! இந்த முக்கோண சமாசாரங்கள் எல்லாம் — தெரியாது! இப்போ ரொம்ப ஜாக்கிரதை!) இவளுக்கு மட்டும்தான் பொறுப்பா? எனக்கு மட்டும் பொறுப்பில்லையா? ஆனால் எனக்குச் சோர்வும் இல்லை! 'செகண்ட் ஷோ' சினிமா பார்த்து விட்டு வந்திருக்கிறேன். நல்ல படம்! எக்கச்சக்கக் காதல் காட்சிகள்! 'சென்சார் போர்டு' எப்படித்தான் அந்த மாதிரி காட்சிகளை அனுமதித்தார்களோ? படம் பார்க்கும்போது சுவாரசியமாக இருந்தது.

''வாடி, சினிமாவுக்கு'' என்றேன் மாலையில். வீடாம், வேலையாம், பெரிய மகள் பிரசவத்துக்கு வீடு வந்திருக்கிறாளாம். சின்ன மகள் பரீட்சைக்குப் படிக்கிறாளாம். கடைக்குட்டிப் பையன் தொந்தரவு செய்வானாம்! கடவுளே, இவளை என் மனைவி என்று நான் ஞாபகப்படுத்திக் கொள்வதைவிட ஒரு வேலைக்காரியாக நினைவுபடுத்திக் கொள்ளலாம். ஆனால் எஜமான் சொற்படி கேட்காத வேலைக்காரி!

அவள் சினிமாவுக்கு வர மாட்டேன் என்று சொன்னது எனக்குக் கோபம்...

'வீட்டில் சாப்பாடு வேண்டாம்' என்று கூப்பாடு போட்டுவிட்டு இரகசியமாக, 'ஹோட்டலில்' சாப்பிட்டுவிட்டேன். அப்படியே நண்பர்கள் ஜமா சேர்ந்தது. சினிமா 'செகண்ட்ஷோ'வுக்குப் போனோம். இப்போது வீடு திரும்பி மொட்டை மாடியில் தனியாக நின்று கொண்டிருக்கிறேன். எங்கே போனீர்கள்? ஏன் சாப்பிடவில்லை? என் மீது கோபமா? — ஒரு வார்த்தை...ஒரு வார்த்தை இல்லையே! தடிக் கழுதை! அவளுக்கு என்னைப் பற்றி நன்றாகத் தெரியும்! நான் ரொம்ப ரொம்பப் பயந்தவன் என்று தெரியும்.

அந்தத் திமிர்தான். ஆ! வேறே எங்கே போகப் போகிறார் என்கிற அலட்சியம்தான் அவளை இப்படித் திமிருடன் நடந்து கொள்ளச் சொல்லியிருக்கிறது. கதவைத் திறந்து விட்டுப் படுக்கையில் தொப்பென்று விழுந்து விட்டாள். நான் உடைகளை மாற்றிக் கொண்டேன். மாடிக் குடித்தனம். ஒரே பெரிய ஹால்.... அதை ஒட்டிய சிறு அறை ஒன்று. ஒரு சமையல் அறை!..... இதுதான் வீடு! இந்தச் சிறிய அறையில்தான் என் பெரிய பெண் வயிற்றில் சுமையுடன் பிறந்தகம் சீராட வந்திருப்பவள் — படுத்திருந்தாள்: அதே சின்ன அறையில் என் இளைய மகள் பரீட்சைக்குப் படித்துக் கொண்டிருந்தாள். விளக்கு வேறு எரிந்து கொண்டிருந்தது..... எப்படித்தான் அவள் தூங்குகிறாளோ?

ஹாலில் வரிசையாகப் போடப்பட்ட பாய்கள்.... படுக்கைகள்......மூலையில் என் நடுப் பையன் தலையணையைக் கட்டிக் கொண்டு தூங்குவது நன்றாக அந்த இரவு விளக்கின் ஒளியில் தெரிகிறது.

''உஸ்....உஸ்....'' என்றேன் கோபமாக.... அதாவது வேர்க்கிறது என்று அர்த்தம். என் மனைவி விசிறி எடுத்துக் கொண்டு வெளியில் வருவாள் என்றே நினைத்தேன். ஊஹூம்! ஆமாம், இன்னுமா சின்னவள் படிக்கிறாள்? சனியன்... இன்னும் தூங்காமல் என்ன படிப்பு? மெல்ல அந்த அறைக்குள் எட்டிப் பார்த்தேன்....

''என்னப்பா?'' என்றாள்.

''மணி பன்னிரண்டாகுதே... தூங்கலே? காலையிலே 'அலாரம்' வைச்சு எழுந்திருக்கலாம்.... போய்ப் படும்மா.... உடம்பு என்னத்துக்கு ஆகும்?''

அவள் என்னை ஒரு கணம் வியப்புடன் பார்த்தாள். சிறு பெண்... பதின்மூன்று வயது.... அவளுக்குப் புரியாது.... புரியக் கூடாது!

அப்பாவின் இந்த வாஞ்சையைப் பற்றி என்ன நினைத்துக் கொண்டாளோ?....... விளக்கை அணைத்துவிட்டு அக்காவின் அருகில் படுத்து விட்டாள்.

அப்பாடா..... மணி பன்னிரண்டரை தான்.... சற்று நேரம் விழித்திருக்கலாம்.... மொட்டை மாடியில் நின்றுகொண்டு இன்னொரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டு புகைத்தேன். மணி ஒன்று. வீடு நிசப்தமாக இருந்தது. மொட்டை மாடிக்கு வரும் கதவு மெல்லத் திறக்கும் சத்தம் கேட்டது....

ஓ! பரவாயில்லை..... 'இவளுக்கு'க்கூட சில சமயம் உணர்ச்சி இருக்கிறது. 'குழந்தைகள் தூங்கட்டும் என்று காத்திருந்திருக்கிறாள்! மெல்ல...மெல்ல என் முதுகை ஒரு கரம் தொட்டது...

எனக்கு மெய் சிலிர்த்தது..... ஆமாம்.... அந்தக் கைகள் ஏன் இப்படி இவ்வளவு சின்னஞ் சிறியவையாக.... ''அப்பா...... இங்கே என்னப்பா பண்ணறே? நீ வரலையேன்னு காத்திட்டு இருந்தேன்பா ராத்திரி. சாயங்காலம் காசு கொடுக்காம போயிட்டியே.''

என் செல்லப் பையன்! போன ஜன்மத்தில் சட்டிக்காரனாகப் பிறந்திருக்க வேண்டும்! கடன் வசூல் பண்ணுகிற நேரத்தைப் பார்! தலையணையைக் கட்டிக் கொண்டு தூங்குவதை விட்டுவிட்டுக் காசு கேட்க வந்திருக்கிறான்.... ஓங்கி அறையலாமா என்று ஆத்திரம்.... அடக்கிக் கொண்டேன்.... காரியம் கெட்டு விடும்.....

''என் செல்லக் கண்ணு.... சாயங்காலம் அப்பா ஆபீஸ் வேலையா அவசரமா வெளியே போயிட்டேண்டா.... காசுதானே... இதோ இந்தா.....''

'பாக்கெட்'டில் கையைவிட்டுக் கிடைத்த சில்லறையை அவன் கையில் திணித்தேன்.....

''அப்பா.... இதுக்குக் கடலே மிட்டாய் கிடைக்குமா ?''

''எல்லாம் கிடைக்கும்டா கண்ணு...... போய்ச் சமர்த்தா தூங்கு.... காலையிலே வாங்கிக்கலாம்..... போடா, ராஜா....''

அவன் போனான்.

மணி இரண்டு.... சே, என்ன வாழ்க்கை.

யாரோ நடந்து வரும் ஒலி! சரிதான்... இந்தக் காசு செல்லுமா என்று கேட்க அவன் தான் மறுபடியும் பாதித் தூக்கத்தில் எழுந்து வருகிறானோ? அவன் இல்லே! அவள்......!

ஆமாம்.... என் மனைவியேதான்! பரவா யில்லையே..... இவளுள் உணர்ச்சிகள் சாக வில்லை!

''இன்னும் தூங்காம என்ன பண்ணிக்கிட்டு இருக்கீங்க....?''

''உன் தலே....''

அவள் சிரித்தபடி என் அருகில் வந்தாள்....

பரவாயில்லே.... அவள் இன்னமும் அழகாகவேதான் இருக்கிறாள்! என் தேவைகளினால் அவள் அழகு அதிகமாகத் தெரிந்ததா? அல்லது அவள் அழகு என் தேவைகளை அதிகப்படுத்தியதா? தெரியவில்லே!

''ராஜாவுக்கு என் மேலே கோபமா ?''

''ஆமாம்.... இதுக்கு ஒண்ணும் குறைச்சல் இல்லே..... நான் கோபமா இருந்தா ராஜா... ராணின்னு எதையாவது சொல்லிச் சிம்மாசனத்திலே உட்கார்த்தி வைச்சுடு... உன்னைக் காணும நான் எத்தனை நாழியா தவிக்கிறேன்.''

''உங்களைப் போல நானும் அவசரமும், ஆத்திரமும் காட்ட முடியுமா ? நீங்க ஒரு தந்தை மட்டும்தான்.... நான் தாய்..... தாய்மைக்குப் பொறுப்பும், பொறுமையும் வேணும்.....''

''இப்போ உன் வியாக்கியானம் வேண்டாம்... நீதான் வேணும்...''

''ஏதாவது சாப்பிட்டீங்களா? இல்லே, சாதம் பிசைந்து போடட்டுமா? பட்டினியா கிடக்கக் கூடாது.....''

சே! இவளுக்கு என் மீது எத்தனை அன்பு! இவள் அன்பை உணர்ந்து கொள்ளத் தினம் தினம் இப்படி 'செகண்ட் ஷோ' பார்த்து விட்டுப் பட்டினி கிடந்து சாப்பிடலாமே..... ''ராஜி'' என்று அவளை அணைத்த போது..... உள்ளே பெரிய ஓலம்...!

என் கடைக்குட்டி எழுந்துவிட்டான்!

''அப்பா... அம்மா....'' என்று ஒரே அலறல்! துள்ளிக் குதித்தபடி உள்ளே ஓடினாள் அவள்! ஏதோ கெட்ட கனவு கண்டிருப்பான் போல் இருக்கிறது.

''அம்மா பூச்சாண்டி.... அப்பா பூச்சாண்டி'' என்று ஒரே கத்து! அவனைச் சமாதானப்படுத்துவதற்குள் நாங்கள் பட்ட பாடு! இந்த உலகமே எனக்குப் பூச்சாண்டி காட்டுவதாகத் தோன்றியது.



மணி நாலாகிவிட்டது. உள்ளே, பயந்த மகளைக் கட்டிக் கொண்டு அவள் தூங்கிவிட்டாள்! எனக்குத் தூக்கம் வரவில்லை.

கோபமாக மொட்டை மாடியில் என் படுக்கையைத் தட்டிப் போட்டேன்..... கோபமாக.... 'தொப்.... தொப்'பென்று தட்டினேன்...... சே.... இது வீடா? இந்த வீட்டை விட்டுத் தொலைய வேண்டும்! துண்டை உதறிப் போட்டுக் கொண்டு....

சே! சே! என்ன வாழ்க்கை....! என்ன வாழ்க்கை! ஓர் அற்ப ஆசை.... ஒரு சாதாரண, நியாயமான சபலம்.... அதுகூட முடியவில்லை!.... தூக்கம் வரவில்லை. படுத்தேன்..... உட்கார்ந்தேன்... திரும்பப் படுத்–அட..... மறுபடியும் ராஜி வந்துவிட்டாளா? மணி ஐந்துதான்! பரவாயில்லை..... ராஜி வா... வா... என் அருகே வா... ''சீக்கிரம் எழுந்திருங்க.....'' அவள் என்னை எழுப்பினாள்..... நான் தூங்கினால்தானே எழ!

''இதோ பாருங்க.... பெரிய மகளுக்கு 'வலி' கண்டிருக்கு..... இன்னும் பதினைஞ்சு நாளாகும்னுங்க...என்னவோ தெரியவில்லை. சீக்கிரம் போய் 'லேடி' டாக்டரைக் கூட்டி வாங்க... சீக்கிரம்.....''

அட கடவுளே!

நான் துண்டை உதறிப் போட்டுக்கொண்டு வீட்டை விட்டு வெளியே கிளம்பினேன்! சன்யாசியாக அல்ல! 'தாத்தா' ஆகப் போகிறோம் என்ற மகிழ்ச்சியுடன் சம்சாரியாகவே கிளம்பினேன்.

இனி விடிந்து வெளிச்சம் வந்து விடும்!

சித்தார்த்தா

பெரும் பரபரப்பை உண்டாக்கிய இப் படம் இப்போது சென்னைக்கு வந்துள்ளது.


பிரபல ஜெர்மன் நாவலாசிரியர் ஹெர்மன் ஹெஸ்லே எழுதிய நவீனம். அவர் பாரத நாட்டின் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சூழ்நிலையை ஆதாரமாகக் கொண்டு சித்தார்த்தா என்ற நவீனத்தைப் புனைந்தார். சித்தார்த்தா என்ற பிராமண இளைஞன், குருகுலவாசம் செய்யும்போது, உள்ளத்தில் உண்மை வேட்கை ஏற்பட்டுப் பல குழப்பங்களுக்கு உள்ளாகித் தவிக்கிறான். பெற்றோர்களை விட்டுக் கானகம் சென்று தவம் இயற்றுகிறான்.

தவமியற்றுவதைவிட்டுத் தேச சஞ்சாரம் செய்கையில் புத்தரைச் சந்திக்கிறான். புத்தரின் உபதேசமும் அவனுக்குத் தெளிவைத் தரவில்லை. கமலா என்ற அழகிய கணிகையைக் காண்கிறான். காதல் வாழ்க்கையில் ஆழ்கிறான். பிறகு, ஆடம்பர வாழ்க்கையைத் துறந்து பழையபடி தேச சஞ்சாரியாகி, ஓடக்காரனைச் சந்திக்கிறான். அந்த எளிய வாழ்க்கை அவனுக்கு ஓரளவு நிம்மதி அளிக்கிறது.

சித்தார்த்தாவாக சசிகபூரும், கமலாவாக ஸிமியும் தோன்றுகின்றனர்.

படம் நெடுக ஓர் இந்தியப் படத்தைப் பார்க்கிறோம் என்ற உணர்ச்சி ஏற்படுகிறது. இந்தியாவில் எடுக்கப்படும் படங்கள் பெரும்பாலானவை கதையம்சத்திலும் போட்டோகிராபியிலும், ஏதோ மேனாட்டுச் சித்திரத்தைப் பார்ப்பதுபோலிருக்கும். ஒரு ஜெர்மானிய கதாசிரியரும், ஓர் அமெரிக்க டைரக்டரும், ஒரு ஸ்விட்ஸர்லாந்து காமராமெனும் சேர்ந்து இந்தியாவைப் பிரதிபலிக்கும் ஓர் அரிய இந்தியப் படத்தை எடுத்து அளித்திருக்கிறார்கள்.

– எஸ். வி. எஸ்.



கண்மணிப் பாப்பாவுக்கு மிகச் சிறந்ததென
நீங்கள் கண்டுகொண்ட பவுடர்...



உங்களுக்கும் மிகச் சிறந்ததே





ஜான்ஸன்ஸ்* பேபி பவுடர். உங்கள் அருமைபதிந்து உருவாக்கிய அருமையான செல்வம்.
வேறெந்தப் பவுடரிலும் நீங்கள் அனுபவித்தறியாத சொகுசான இன்பம். மலர் மாரி பொழிந்து உடலாரத்
தழுவும் மென்மை—உலகில் உன்னதமான இயற்கை நறுமணமேந்தி வரும் மென்மை.

இளந்தளிர் மேனிக்கென்றே ஈடிலாத் தூய்மையும் மென்மையுமே உருவான படைப்பு!
ஜான்ஸன்ஸ்* பேபி பவுடர். அதனால்தான் 75 ஆண்டுகளாகப் பாப்பா உலகின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக
விளங்குகிறது. அதனால் தான் உங்களுக்கும் இதுவே உகந்த பவுடர்.

ஜான்ஸன்ஸ்* பேபி பவுடர்

அருமைப் பாப்பாக்களின் ஆசை இதுவே:
நீங்களும் உபயோகியுங்கள் ஜான்ஸன்ஸ் பேபி பவுடர்

விளையாடாதீர்கள்!



ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தில் இன்று ஜகத்குருவாக விளங்கும் ஸ்ரீ சந்த்ர சேகரேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளின் (ஸ்ரீ பெரியவாள்) பூர்வாசிரம தகப்பனார் ஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரிகள், குடந்தை 'நேடிவ் பள்ளி'க்கூடத்தில் முதல் உபாத்தியாய ராக அமர்ந்தார்.

இப்பள்ளி, பிரபல கல்வியாளர்களாக விளங்கிய திருவாளர்கள், எஸ். அப்பு சாஸ் திரியார், எஸ். இராகவ அய்யங்கார், எஸ். வேங்கடராம சாஸ்திரிகள் ஆகியோரால் தோற்றுவிக்கப்பட்டது.

வருகிற ஜூலை மாதத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட விருக்கிறது பள்ளியின் நூற்றாண்டு விழா. விழாக் குழுவினர், கட்டடத்தைப் பழுது பார்ப்பதற்கும், 'நூற்றாண்டு விழாக் கட்டடம்' கட்டுவதற்கும் ரூ. 1,40,000 செலவு ஆகும் என்று கணக்கிட்டிருக்கிறார்கள்.

தாங்கள் அனுப்ப விரும்பும் தொகையை, "தலைமை ஆசிரியர், நேடிவ் உயர்நிலைப் பள்ளி, கும்பகோணம்–612001, தமிழ்நாடு" என்ற முகவரிக்கு அனுப்ப வேணும்.

சென்னை — 86 வி. நாகராஜன்

'**வி**ளையாட்டுச் சிறப்பிதழ்' கண்டோம். அட்டைப் படத்திலேயே கைப்பந்துக்கு முக்கியத்துவம் கொடுத்திருந்தீர்கள். மிக்க மகிழ்ச்சி.

சமீபத்தில் சென்னையில் நடைபெற்ற 'நெல்லை நண்பர்கள் சங்க'த்தின் அகில இந்திய கைப்பந்துப் போட்டியில் கலந்து கொள்ளப் பிரபல அணிகள் பல வந்திருந்தன. திருப்பூர் டெக்ஸ்டைல்ஸ் இளைஞர்களின் ஆட்டம் வெகுவாகக் கவனத்தைக் கவர்ந்தது. கே.டி.சி. அணியில் ஜிம்மி ஜார்ஜ் தனி பாணியில் ஆடினார். இறுதிப் போட்டியில் எல்லாரும் அதிசயப்படும்படியாகத் தமிழகத்தைச் சேர்ந்த ஐ. சி. எப். அணி ஜெயித்தது!

சென்னை — 5
29–5–76 டி. கே. ராஜ்

'**பௌ**ன்ஸர்கள் தேவையா?' என்ற விவாதமேடைக் கடிதங்களை ரொம்பவும் ரசித்தேன்.

எதிராளியைக் குத்துவதையும் காயப் படுத்துவதையுமே நோக்கமாகக் கொண்ட ஒரு விளையாட்டு பாக்ஸிங். ஆனால் அதிலே கூட முகத்தைத் தவிர வேறு எங்கும் குத்தக் கூடாது என்பது போன்ற கடுமையான சட்ட திட்டங்கள் உண்டு. கிரிக்கெட்டிலோ காயப் படுத்துவது என்ற நோக்கமே கிடையாது. எனவே, அந்த எண்ணத்துடன் வீசப்படும் பந்துகள் அந்த விளையாட்டின் ஜீவனையே கெடுத்து விடுகின்றன.

பௌன்ஸருக்குத் தண்டனை தருவதே உபாயம். இங்கிலாந்து பந்து வீச்சாளர் ஜிம்மி லேக்கர் கருத்துத்தான் இது விஷயமாகக் கூறப்பட்டுள்ள சிறந்த யோசனை. இதன்படி ஒரு பந்து வீச்சாளரின் இரண்டாவது பௌன்ஸரிலிருந்து தொடர்ந்து ஒவ்வொரு பௌன்ஸரும் எதிர்க்கட்சிக்கு ரன்களைக் கூட்டும்!

சென்னை — 18
29–5–76 பி.என். சுந்தரேசன்
(ஹிந்து - முன்னாள் கிரிக்கெட் விமர்சகர்)

"**ப**ழமை காக்கும் புதுமை" என்ற கட்டுரையைப் படித்தேன். இங்குள்ள நாடகக் குழுக்களைப் பற்றிய தங்களுடைய மன வருத்தத்தைப் போக்குவது என் கடமை.

இங்கு "கல்கத்தா பிளேயர்ஸ்" என்ற நாடகக் குழு வங்காளிகளும் கண்டு புகழும் வண்ணம் சிறந்த தமிழ் நாடகங்களை உருவாக்கி, கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக நாடகக் கலைக்குச் சிறந்த தொண்டு புரிந்து வருகிறது. 1969ஆம் ஆண்டு தமிழகத்துக்கு இந்தக் குழு விஜயம் செய்து, எட்டு நாட்கள் பல்வேறு அரங்குகளில் நாடகங்கள் நடத்தியது. "கல்கி" பத்திரிகையும் பாராட்டி விமர்சித்திருந்தது.


கல்கத்தா — 26
7–6–76 ஜி. பூதலிங்கம்

'**சே**ரமான் காதலி' தொடர்கதையில் கள்ளர், மறவர், அகம்படியர் முக்குலம் என்றும் பண்டைய தமிழகத்தின் முப்படைப் பிரிவினர் என்றும், மறவர் தேவர் என்று பட்டம் பூண்டதாகவும் அவர்கள் பாண்டிய சோழ மன்னர் வழியில் வந்தவர் என்றும் கவிஞர் திரு கண்ணதாசன் எழுதியிருக்கிறார். இது வரலாற்று மாற்றம் மட்டும் இன்றி எங்கள் மனத்தையும் புண்படுத்துகிறது.

தஞ்சாவூர்
3–6–76 ஆர். டி. ஆசீர்வாதம்

'**கு**ட்மார்னிங் டாக்டர்' பகுதி, 'வில்லாக வளையும் உடல்' என்ற கட்டுரையில் வில்வாத ஜன்னி என்று அழைக்கப்படும் 'டெடனஸ் நோய்' வைரஸ் கிருமிகளால் ஏற்படுகின்றது என்று கூறியிருப்பது தவறு. டெடனஸ் நோய் "க்ளாஸ்ட்ரீடியம் டெடனீ" (clostridium Tetani) எனப்படும் பாக்டீரியா கிருமிகளால் ஏற்படுகின்றது. விளையாட்டுச் சிறப்பிதழ் வேணுமானால் போடுங்கள். ஆனால் மருத்துவ விஷயங்களில் விளையாடாதீர்கள்! எச்சரிக்கை தேவை!

மதுரை –6 டாக்டர் எஸ். அய்யம்பெருமாள்


நீடித்த
அழகுக்குத் தேவை
தூய்மையான மேனி.

லாக்டோ-காலமைன் ஒன்றுதான் உங்கள் மேனியை அனைத்திலும் அருமையாகப் பாதுகாக்கும்.

உங்கள் மேனியைப் பராமரிக்க லாக்டோ-காலமைன். உங்கள் மேனியைத் தூய்மையாகவும் புதுமையாகவும் வைத்திருக்கக் கூடிய சேர்க்கைப் பொருட்கள் விசேஷ முறையில் இதில் கலக்கப் பட்டுள்ளன.

எல்லாம் ஒன்றில் இணைந்த அழகுப் பராமரிப்பு-லாக்டோ காலமைன்—அஸ்ட்ரின்ஜெண்ட், மாயிஸ்சரைஸர், ஃபவுண்டேஷன் க்ரீம் மூன்றும் இணைந்த தன்னிகரற்ற அழகு சாதனம்.

அதனை முறையாக உபயோகித்து வரவும். உங்கள் மேனி இயற்கையாக மெருகேறுவதைக் கண்கூடாகக் காண்பீர்கள்.



3 வசதியான சைஸ்களில் கிடைக்கிறது:
110 மி.லி.
60 மி.லி. 28 மி.லி.

க்ருக்ஸ் லாக்டோ-காலமைன், ஒரு ரெஜிஸ்டர்டு டிரேடு மார்க். இதனைத் தவறாகப் பயன்படுத்துபவர்கள் சட்டப்படி தண்டிக்கப் படுவார்கள்.

உண்மையான லாக்டோ-காலமைன் தானா என்று உறுதி செய்து கொள்வதற்கு, எப்போதும் இந்த க்ருக்ஸ் சின்னத்தைப் பார்த்து வாங்குவீர், அதோடு, க்ருக்ஸ் முத்திரையும் உடையாமல் இருக்கிறதா என்று உறுதி செய்து கொள்ளுங்கள்.

டுஃபார்-இன்டர்ஃப்ரான் லிமிடெட்
த.பெ. எண் 6582, பம்பாய்-400 018

க்ருக்ஸ்
லாக்டோ-காலமைன் அதுவே எழில் பராமரிப்பு ரகசியம்.

புகார் செய்த மரம்

ஏ.என்.பட




விறகுவெட்டியிடம் மரம் தன் ஆட்சேபணையைத் தெரிவித்தது. "நீ நேர்மையற்றவன்; என் புஜங்களை வெட்டிவிடுகிறாய். நான் அனைவருக்கும் நிழல் தருகிறேன்; பழங்கள் தருகிறேன். அப்படி இருக்க என்னை வெட்டி விற்கலாமா? நீ பிழைப்புக்கு வேறு ஏதாவது மார்க்கம் தேடு" என்று புகார் செய்தது.

மனிதன் யோசித்தான். "சரி, இனி நான் உன்னை வெட்டவில்லை" என்றான்.

அதற்குப் பதில் பூமியைத் தோண்ட ஆரம்பித்தான். செம்மண்ணை வெட்டிக் கொண்டு போய் வேண்டியவர்களுக்கு விற்றுச் சம்பாதித்தான். சீக்கிரமே மரத்தைச் சுற்றியிருந்த நிலம் பெரிய குழியாயிற்று. மரத்தின் வேர்கள் பிடிப்பற்றுப் போயின. மரம் காய்ந்து இறந்தது. காற்றில் சாய்ந்தது. விறகுவெட்டி அதனைத் துண்டு துண்டாக வெட்டி விறகாக்கி விற்றான். இப்போது மரம் ஆட்சேபிக்கவில்லை!

நீதி: (நீங்களே எழுதிக்கொள்ளவும்)



பூனையின் சத்தியம்

ஒரு பூனை இனி எதையும் திருடுவதில்லை எனத் தீர்மானித்தது. தன் வாழ்நாள் முழுவதும் இனி அத்தகைய தவற்றைச் செய்வதில்லை என்று சத்தியப் பிரமாணம் எடுத்துக்கொண்டது. ஆனால் சீக்கிரமே அது புதுப் பால் வாசனையை உணர்ந்தது. ஆசையை அதனால் அடக்க முடியவில்லை. யாரும் இல்லாத சமயம் பாட்டிலைக் கவிழ்த்துப் பாலைச் சிந்தச் செய்தது. ஆனால் அதே சமயம் அதற்குத் தன் பிரதிக்ஞை நினைவுக்கு வரவே, பாலைக் குடிப்பதா? அல்லது சத்தியத்தைக் காப்பதா? என்று தடுமாறியது. கடைசியில் அது ஒரு சமரச முடிவுக்கு வந்தது. அதன்படி கண்களை மூடிக்கொண்டு பாலையே தான் பார்க்காததாகப் பாவனை செய்து நாக்கை நீட்டி ஓசைப்படாமல் நக்கி நக்கிப் பாலைக் கவலையின்றிக் குடித்தது!

நீதி: (நீங்களே எழுதிக்கொள்ளவும்)

Printed and published by V. Vaidyanathan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600 031.
Managing Editor: T. Sadasivam. Associate Editor: K. Rajendran.

கோத்ரெஜின்

புதிய டர்கிஷ் பாத்



அமோகமான சோப், நம்பமுடியாத விலையில்

Re.1·00 (வரிகள் தனி)

கோத்ரெஜ் மட்டுமே அளிக்கக் கூடிய சோப் அபரிமிதமான நுரை...நீடித்த உபயோகம்...புத்துணர்ச்சியளிக்கும் நறுமணம் மற்றும் சிக்கன விலை.

கோத்ரெஜின் டர்கிஷ் பாத்

Interpub/GTB/1/75/TAM

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka
இலங்கையில் விலை 75 சதம் (தபால் செலவு தனி)
மலேசியாவில் விலை (விமானப் பதிப்பு) 60 மலேசிய காசு



MAC (B) AM 2/75

அதிகபட்ச உணவு விளைச்சலுக்கு

உங்களுக்குத் தேவை எதையும் தாங்கும் நம்பகமான பாட்டரி



நாட்டிற்கு மேலும் உணவு வேண்டும். அதுதான் முன்னுரிமை முக்கியத் தேவை. இதற்கு முக்கியமாக உங்களைத்தான் நம்பி இருக்கிறது.

போதிய விளைச்சலில், முடியாது உங்கள் டிராக்டர் ஒவ்வொரு நிமிடமும் செயல்பட்டாக வேண்டும்.

உங்கள் டிராக்டரில் ஆம்கோ பவர் பிளஸ் பாட்டரி இருக்கின்றதா என்று உறுதி செய்து கொள்ளுங்கள். எந்தவித டிராக்டருக்கும் மிக நம்பகமான பாட்டரி அது. எனவேதான் இந்தியாவில் உள்ள பிரதான டிராக்டர் தயாரிப்பாளர்கள் அனைவரும் ஆம்கோவை ஒரிஜினல் பாட்டரியாக பொருத்துகின்றனர்.

ஆம்கோ டிராக்டர் பாட்டரிகள் மிகக் கடுமையான பரிசோதனைகளை — புதுமுறை — எப்போதும் தாங்கிநிற்கின்றன என்று நிபுணர்கள் நற்சான்று அளித்துள்ளனர்.

ESCORT TAFE FORD hmt



ஆம்கோ — அயராத பாட்டரி

ஆம்கோ பாட்டரீஸ் லிமிடெட்
பெங்களூர்